


கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...

KALKI • 06.09.2009 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



முஸ்லிம் கட்டிய முருகன் கோயில்!

பாண்டியைக் கலக்கும் 'சாமி'கள்!

சனி கொடுப்பார்; எவர் தடுப்பார்?

கிளின்டன் கேட்ட ஒன்ஸ் மோர்!

பாண்டிச்சேரி ஸ்பெஷல் - II



சிறுநீர் கசிவு பிரச்னையா?

இன்னும் ஏன் தயக்கம்?

"நீங்கள் அணுக வேண்டிய சிறப்பு மருத்துவர்

UROGYNECOLOGIST

இருமினாலோ,
தும்மினாலோ

சிறுநீர் கசிவு
ஏற்படுகிறதா?

"சிலிங் சிகிச்சை"

"வலியில்லாமல், இரத்தக் கசிவில்லாமல் ஒரே நாளில் வீடு திரும்புங்கள்". அமெரிக்காவில் UROGYNECOLOGY FELLOWSHIP பட்டம் முடித்த மருத்துவர்கள் உள்ள இந்தியாவில் முதல் ISO 9001:2000 Certified சிறப்பு மையம்

இப்போது கோவையில்

**பாலா மெடிக்கல் சென்டர்
அண்டு ஆஸ்பிட்டல்,**
**901, திருச்சி ரோடு,
இராமநாதபுரம்,
கோயம்புத்தூர் 641 045.
0422-2323456, 2323333**

தங்கள் பிரச்னையை மேற்படி மையத்திலுள்ள முறையான பயிற்சி பெற்ற நபரிடம் தொலைபேசியில் தெரிவித்து கவுன்சலிங் அல்லது ஆலோசனை பெறலாம்.
ஆலோசனைக்குக் கட்டணம் எதுவும் கிடையாது!

**GUNA ASSOCIATES IN UROGYNECOLOGY
& RESEARCH FOR INCONTINENCE (GAURI)**

1, Crescent Park Street, T.Nagar, Chennai - 600 017. Ph : 24341055, 24322591
E-mail : gunasek@gmail.com Web : www.urogynecology.in



இதழியல் உலகில்
இதயம் கவர்ந்திடும்
'மலர்'களின் மன்னன்!
கல்கி தீபாவளி மலர் 2009
விலை ரூ.100/- மட்டுமே
வாங்கத் தவறாதீர்கள்!
உள்ளூர் ஏஜெண்டிடம் பதிவு செய்யுங்கள் அல்லது கூரியர்
மூலம் பெற ரூ.30 சேர்த்து கீழ்க்கண்ட
முகவரிக்கு அனுப்புங்கள்:
விற்பனை மேலாளர், கல்கி தீபாவளி மலர், கல்கி,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, சென்னை-600 032.
தொடர்புக்கு: 044-4343 8844

சினி

ஹீரோவாக வேடம் கட்டி வந்த 'ஷாம்' தில்லாலங்கடி படத்தில் கேரக்டர் ரோல் பண்ணும் அளவுக்கு இறங்கி வந்துவிட்டார். அவர் நடித்த அத்தனை படங்களும் வரிசையாக ஊத்திக் கொண்டதுதான் இந்த முடிவுக்குக் காரணமாம்.

(12'பி'க்கு ரூட் சரியில்லையோ...)

ஜெயம் ரவியோடு ஜோடி போட்டால் கோலிவுட்டில் முன்னணி நாயகி ஆகிவிடலாம் என்று நாயகிகள் மத்தியில் ஒரு சென்டிமென்ட் உலவி வருகிறது. காரணம், இப்போது முன்னணியில் இருக்கும் த்ரிஷா, அசின், சதா, ஜெனிலியா... போன்றோர் ஜெயம்ரவிக்கு ஜோடியாக அறிமுகமானவர்களாம்.

(அட்ரா சக்கை... அருமையான சென்டிமென்ட்)

“**அ**ரைமணி நேரத்துல கதை சொல்லுங்க” என்று கதை கேட்ட மீரா ஜாஸ்மின், சொல்லச் சொல்ல ஒன்றரை மணி நேரம் கதை கேட்டு உடனே நடிக்க ஒப்புக்கொண்டாராம். எந்தப் படத்தோட கதை? இயக்குநர் யார்? படம்: ஆதி நாராயணா, இயக்குநர் வெற்றிவேந்தன்.

(அப்படி என்னப்பா கதை?)



எம். ராஜா (அதாங்க ஜெயம் ரவியோட அண்ணன்) தம்முடைய தில்லாலங்கடி படத்துக்காக முதன்முறையாக யுவன் ஷங்கர் ராஜாவோடு கைகோத்துள்ளார். அதனால் மியூசிக் பெரிய அளவில் எதிர்பார்க்கப்படுகிறதாம்!

(ராஜாவும் ராஜாவும் இணைந்தால் ராங்கா போகாது...)

நியூஸ் பாய்

சிப்ஸ்

திண்டுக்கல் சாரதி படத்தில் ஹீரோவாக அரிதாரம் பூசிய 'லொடுக்கு' கருணாஸ், அதிநாராயணா படத்தில் இரண்டாவது ஹீரோவாம். இவருக்கு ஜோடியாக லயோலா கல்லூரியில் விஸ்காம் படிக்கும் யோகிதாதான் ஹீரோயினாம்...

(யோகிதா யோகம்... கருணாஸ் ரெண்டாவது ஹீரோ... பாத்துங்க அப்பு)

"கருப்பாயி கருப்பாயி எங்க போறே" - இது வேறொன்னுமில்லை. அதிநாராயணா படத்துல கருணாஸ், யோகிதா ஆடுற குத்துப்பாட்டு. இந்தப் பாட்டைப் பாடினது சாட்சாத் லிட்டில் சூப்பர் ஸ்டார் சிம்புதான். சம்பளமா சல்லி பைசா வாங்கலையாம்!

(மேட்டர் செம கில்லிப்பா...)

"ஆந்திராவின் மணிரத்னம்" என்றழைக்கப்படும் பூரிஜெகன்னாத்திடம் உதவியாளராக இருந்த பி.ராஜா, 'இளமை இதோ இதோ' என்ற படத்தை இயக்குகிறார். "இரண்டு பெண் இரண்டு ஆண். இவர்களுக்குள் உருவெடுக்கும் ஒரு காதல்தான் கதை" என்கிறார் ராஜா.

(ரெண்டும் ரெண்டும் ஒண்ணு, நல்லாயிருக்கே கணக்கு?!)

பிரபு கேரக்டர் ரோல் பண்ணும் எல்லாப் படமும் ஆவரேஜாக ஓடி, போட்ட காசை வசூலித்து விடுவதால் படத்தில் ஒரு சீனுக்காவது அவரை புக் பண்ணி விட வேண்டுமென்று செக் புக்கும் கையுமாக அலைகிறதாம் கோடம் பாக்கத் தயாரிப்பாளர் தரப்பு!

('செக்' சரியானதுதானான்னு செக் பண்ணிக்கங்க பிரபு ஸார்!)



கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி
உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா
வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்
தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல், சென்னை - 32

லாபம் – சினிமா...

'வசந்த் விஜய்' - சென்னை - 28, நாடோடிகள்... படங்களின் மூலம் ரசிகர்களுக்கு வெளிச்சமான பெயர். ஆனால், வசந்த் அண்ட் கோ வசந்தகுமாரின் மகன் என்பது பலருக்குத் தெரியாது. பிஸினஸ், சினிமா என ரெட்டைக் குதிரைச் சவாரி செய்யும் விஜய்யைச் சந்தித்துப் பேசினோம்.

தரம்: எங்களது கடைகளில் விற்கப் படும் பொருட்களைப் போலவே எனது நடிப்பும் தரமானதாக இருக்கணும்னு ஆசைப்படறேன். அதற்காக சசி, சமுத்திர கனி போன்ற தரமான இயக்குநர் படங் களைத் தேர்ந்தெடுத்து நடிக்கிறேன்.

நம்பிக்கை: பெற்றோரும், என் நண்பர்களும் என் மீது வைத்த நம்பிக்கை யைக் காப்பாற்ற வேண்டும். அதுக்கு இன்னும் உழைக்கணும். தரம், நம்பிக்கை இதுதான் வசந்த் விஜய்யின் தாரக மந்திரம்!

லாபம்: 'வசந்த் விஜய்'ன்னாலே வசந்த் அண்ட் கோ வசந்தகுமார் பையன்ற அடை யாளம் மட்டுந்தான் இருந்தது. இன் னைக்கு அதையும் தாண்டி நடிகன்ற அடை யாளம் பட்டிதொட்டிவரை கிடைச்சிருக்கு. இது சினிமாவால் எனக்குக் கிடைத்த லாபம்தானே!

நஷ்டம்: நான் சினிமாவுக்குப் போன தால பெரிய நடிகர்கள் யாருக்கும் நஷ்டம் கிடையாது. பிஸினஸை சரியா கவனிக்க முடியாத நஷ்டம்தான் ஷூட்டிங் சமயத் துல இருந்தது. அப்பாதான் அடிக்கடி திட்டிக்கிட்டு இருப்பார்.

அடக்க விலை: என்னதான் பாப்பு லாரிட்டி, பணம்ன்னு வந்தாலும் அடக்கம் இருந்தால்தான் நாம விலை மதிப்பில்லாத வைரம் மாதிரி ஜொலிப்போம். இதுக்கு நம்ம சூப்பர் ஸ்டாரே பெஸ்ட் உதாரணம்.

தள்ளுபடி: சினிமால பிஸியானதால ஃபேமிலியோட அதிக நேரத்தைச் செலவு பண்ண முடியல. இதுபோன்ற சந்தோஷ மான விஷயங்கள் தள்ளுபடியானதுல எனக்கு வருத்தம்தான்.

கழிவு : ஆஃபீஸுக்கு வரும்போது நம்ம ஆஃபீஸ்தானேன்னு கொஞ்சம் லேட்டா வருவேன். சினிமா ஷூட்டிங்ல இது முடியாது. சினிமாவுக்கு வந்த பின் னாடி சோம்பேறித்தனம், நேரம் தவறுதல் போன்ற விஷயங்கள் என்னிடமிருந்து வெளியேறிவிட்டன.

சலுகை : நடிகனாக வர்றதுக்கு முன் னாடி எல்லார்கிட்டேயும் நானாக போய்ப் பேசுவேன். சில பேர் பேசாமகூட போய்டு வாங்க. நடிகனான பின்பு எல்லாரும் என்கிட்ட அவங்களா வந்து பேசறாங்க. இதுதான் எனக்குக் கிடைத்த சலுகை.

இலவசம்: சினிமா மூலம் இலவசமா நிறைய நண்பர்கள் கிடைச்சிருக்காங்க. 'நாடோடிகள்' படம் வந்ததுக்கு அப்புறம் அப்பாவும் சினிமாவில் நடிக்க ஆதரவு தந்திருக்கார். இந்த ஆதரவுதான் எனக்குக் கிடைத்த இலவசம்.

தவணை: தவணைமுறையில் தவறா மல் நடிப்பை வழங்குவதுதான் இனிமேல் என் பணி. அந்த நடிப்புக்கு ரசிகர்களின் அன்பும், ஆதரவும் அவசியம்.

- ராகவ்குமார்


வசந்த்ஜெய்
ஷ்டம் – பிஸினஸ்



கந்தசாமி

கந்தசாமியை கலக்கல் கந்தசாமி என்றும் சொல்லலாம். காக்டெயில் கந்தசாமி என்றும் சொல்லலாம். நல்ல பளபளப்பான செராமிக் குடுவை. உள்ளே... அதே! அதே! சி.பி.ஐ. உயர் அதிகாரி விக்ரம், ஊழல் பணக்காரர்களின் கறுப்புப் பணத்தை எடுத்து ஊர் மக்களுக்கு உதவுகிறார். (ஆமாம்... கடைத் தேங்காய்தான்) எங்கேயோ பார்த்த 'சீன்' போல இருக்கிறதே... என்று நீங்கள் உங்கள் மொட்டைத் தலையில் ஸ்டைலாக சொடக்குப் போட்டால் - இயக்குநருக்குக் கோபம் வந்துவிடும்.

இன்னொன்று - நதி மூலம், ரிஷிமூலம் போல 'சீன்' மூலம் தேடாதே என்பது கோலிவுட் மொழி.

சி.பி.ஐ. விக்ரமின் இத்தகு சாகசச் செயல்களுக்கு ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் அவரோடு படித்த நண்பர்களும் கோயில் பூசாரியும் உதவுகிறார்கள்.

திருப்போரூர் கோயில் மரத்தில் மக்கள் தங்கள் கோரிக்கைப் பிரார்த்தனைகளை முடிச்சிடுவதில் தொடங்குகிறது கதை. மக்களின் வேண்டுதல் விக்ரம் அண்ட் குழுவினால் நிறைவேற்றப்பட.... அனைத்துக்கும் காரணம் கடவுள் கந்தசாமி என்று மக்கள் நம்புகிறார்கள்.

சாகசங்கள் நிகழ்த்தப்படுவது கடவுள் கந்தசாமியால் அல்ல; ஆசாமி கந்தசாமியால்தான் என்று நிரூபிக்க வருகிறார் போலீஸ் உயர் அதிகாரி பிரபு.

வில்லனாக வரும் ஆசிஷ் வித்யார்த்தியின் நடிப்பில் தூள் பறக்கிறது. அவரின் மகள் ஸ்ரேயா நடிப்பில் ஆடைகள் பறக்கின்றன. ஸ்ரேயா - விக்ரம் காதல் காட்சிகளைக் காண ரசிகர்கள் ஆலாய்ப் பறக்கின்றனர். திரையில் பரவும் ஒளிப்பதிவின் நேர்த்தியைத் தழுவ, கண்கள் சிறகு முளைத்து வண்டுகளாய்ப் பறக்கின்றன. பாடல்கள், சண்டைக் காட்சிகள், மோதல், காதல் - என்று வழக்கமான ராஜபாட்டை.

பெரிய பட்ஜெட் படம் என்பது நிறை. ஆனாலும் கொட்டி இறைத்த பணத்துக்கு நிகராக பிரமாண்டம் உருவாகி நம் இமைகள் உயராதது குறை. வடிவேலு இருக்கிறார். ஆனா... இல்ல... ஆசிஷ் வித்யார்த்தி திரைக்கதையில் வில்லன்.

லாஜிக் லாஜிக் என்று ஏதோ சொல்வார்களே அது திரைக் கதையாசிரியருக்கு வில்லனாக அடிக்கடி வந்து குறுக்கிட்டால்... பாவம் அவர் என்னதான் செய்வார்?

– எ.நரேன்



தமிழின் மாபெரும் கவிஞர்கள் உலவிய மண் புதுச்சேரி. எழுத்தாளர்களை ஒரு கலந்துரையாடலுக்காக எங்கு கூடச் செய்யலாம் என யோசித்தபோது பளிச்சென்று நமக்குள் ஒரு பல்பு எரிந்தது. மகாகவி பாரதி பெயரில் அமைந்திருக்கும் பூங்காவைக் காட்டிலும் சிறந்த இடம் வேறு எது?!

''**ஆ**வேசக் கவிஞன் பாரதி, பதினொரு ஆண்டுகள் இந்த மண்ணிலே வீரநடை போட்டுக் கவிஞனாகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டவன்!'' என எதற்கோ அச்சாரம் போட்டுப் பேசத் தொடங்கிய எழுத்தாளர் புதுவை சந்திரஹரியின சொல் வீச்சைத் தடுத்து நிறுத்தி, தம் சிந்தனையைப் புகுத்தினார் கவிதைப் படைப்பாளி இளங்கவி அருள். ''பாரதி மட்டும் புதுவைக்கு வராதிருந்தால், தமிழுக்கு ஒரு மகாகவி கிடைக்காமல் போயிருக்கக்கூடும். கவிதை வானில் பாரதிக்கு சிந்தனைச் சிறகுகளை விரித்துப் பறக்க உதவிய பூமி புதுவை!'' என்றார்.

''அட... எங்க நமக்குள்ளே பிரச்னை? நீங்க ரெண்டு பேரும் சொல்றதும் ஒண்ணுதான்!'' என சமாதானக் கொடி அசைத்தவர் மூத்த தமிழ்க் கவிஞர் இலக்கியன்.

''எழுதறவங்க நாலைஞ்சு பேரு ஓர் இடத்துல சந்திச்சுப் பேசினா, சண்டை போடாம பிரிய மாட்டாங்கன்ற 'எழுத்தாள அவப்பெயர்' நம்மூர்க்காரங்களுக்கு வேணாம்!'' என ஊர்ப் பாசம் காட்டியவர்கள் கவிஞர்கள் பாலசுப்பிரமணியன் மற்றும் புதுவை பிரபா. ''எல்லாம் சரி. உங்களை எழுதத் தூண்டியது எது?'' என்கிற ஒற்றை வரிக் கேள்வியை அனைவர் முன்பாகவும் பொதுவில் வைத்தோம்.

எழுதத் தூண்டிய

''**ம**ரபுக் கவிதை படைப்பாளி நான். மகாகவி பாரதிக்கு தாசன், புதுச்சேரியில் பிறந்து வளர்ந்த கனகசுப்புரத்தினம் என்கிற புரட்சிக்கவி. அந்த புரட்சிக் கவிஞருக்கு தாசன் கவிஞர் வாணிதாசன். அந்தப் புதுச்சேரி கவிஞனுக்கு தாசன் இந்த இலக்கியன். என்னை எழுதத் தூண்டியது எதுன்னு இதுக்கப்புறமும் நான் சொல்லணுமா என்ன? எனக்கு



"நீ கதை எழுதி புத்தகத்துல வர்றதுக்குள்ள உன் தலைமுடியே நரைச்சுடும்"



முந்தைய படைப்பாளிகளின் கவிதைகள்தான் என்னை எழுதத் தூண்டின'' என்கிறார் இலக்கியன்.

''காரைக்கால் அம்மையார் கோயில் கட்டிய குடும்பத்துக்கு மருமகளாகச் சென்று வாழ்ந்து வரும் பேறுபெற்றவள் நான். நல்ல வசதியான குடும்பம். அந்தக் குடும்பச் சூழல்ல என்னால அப்ப எதுவும் எழுத முடியல. அமரர் கல்கி, சாண்டில்யன், கண்ணதாசன் போன்றவர்களின் படைப்புகளை நெறைய வாசிச்சேன். அந்தப் படைப்புகள் என்னை எழுதத் தூண்டின. 2005ல் தான் சிறுகதைகள் எழுத ஆரம்பிச்சேன். வாரப் புத்தகம் பாக்யா உட்பட மற்றும் பல சிற்றிதழ்கள் சேர்த்து இதுவரைக்கும் இருநூறு சிறுகதைகளுக்கும் மேலாகப் பிரசுரமாகியிருக்கு!'' எனச் சொல்கிறார் புதுவை ந.கிதோராணி.

சாடைப் பேச்சு!

''நான் படிச்சது ஆங்கில வழிக் கல்வி. கல்லூரி நாட்கள்ல கதை எழுதுவேன். கவிதை



கிறுக்குவேன். ஒரு தடவை வகுப்பறையில பாடம் நடத்திட்டிருந்தப்ப, புத்தகத்து நடுவில ஒரு வெள்ளைத் தாள்ல சிறுகதை ஒண்ணு எழுதிட்டிருந்தேன்.



இதுவரைக்கும் இருநூறு சிறுகதைகள்...


புரொஃபசர் வந்து அந்தப் பேப்பரை வாங்கிக் கிழிச்சுப் போட்டாரு. 'நீயெல்லாம் கதை எழுதி புத்தகத்துல வர்றதுக்குள்ளார உன் தலைமுடியே நரைச்சுப் போயிடும்'னு திட்டினாரு. அன்னைக்கு இரவு முழுவதும் தூக்கமே இல்லை. உடனே ஒரு சிறுகதை எழுதினேன். ஒரு பக்கக் கதை. மறுநாள் காலைல வாரப் பத்திரிகைக்கு அனுப்பி வைச்சேன். அடுத்த வாரமே குமுதத்துல (1996) அந்தக் கதை பிரசுரம் ஆகிடுச்சு. கதைக்குக் கீழே 'புதுவை பிரபா'ன்னு என்னோட பேரு. புக் வாங்கிட்டுப் போய் மொதல்ல அந்தப் பேராசிரியர்கிட்டதான் காண்பிச்சேன். 'ஹை.. வெரி குட்'னு என்னை எழுத வைச்சவர் அவர்தான்!'' எனச் சொல்கிறார் புதுவை பிரபா.

''**1967**ல் 'பகோடா' வார இதழைச் சில மாதங்கள் நடத்தி, சொந்தமா அச்சாபீஸ் வெச்சு பணம் காசை இழந்து ரொம்பவே நொந்து போயி, மதுப்பழக்கத்துக்கு ஆளாகிப் போயிருந்தேன். மொரார்ஜி தேசாய் பிரதமரா இருந்தப்ப, 1978-79ல ஒண்ணரை வருஷம் பாண்டிலேயும் மதுவிலக்கு அமுல்ல இருந்திச்சு. அப்ப நாங்க எல்லாரும் கள்ளத்தனமா சரக்கு விக்கற இடத்துக்குப் போயி குடிச்சுட்டு வருவோம். ஒருநாள் நானும் என் நண்பரும் குடிச்சிட்டு இருந்தப்ப, தூரத்துல இருந்த ரெண்டு பேரு என்னைப் பத்தி என் காதுல விழற மாதிரியே பேசுனாங்க. 'இதோ பார்றா அந்தாளு ஹரிதாசு. நாடகம் போட்டான். பத்திரிகை நடத்தினான். ஏதோ நல்ல ஆளா இருப்பான்னு நெனைச்சா, அந்த ஆளும் நம்பளைப் போலவே இங்கே வந்து 'திருட்டு தண்ணி' குடிச்சிட்டு இருக்கான்!'னு. எனக்கு அது வெறும் வார்த்தைகளாப் படல. எம் மேல வீசின சாட்டையடி மாதிரி இருந்திச்சு. அன்னைக்கு வைராக்யம் வெச்சேன். குடிக்கறதை

"அந்த வார்த்தைதான் எனக்குள்ள வைராக்கியத்தை வளர்த்துச்சு!"



மறந்துட்டு, எழுத ஆரம்பிச்சேன். சிறுகதைகள் ஒவ்வொண்ணா வர ஆரம்பிச்சது. என்னை எழுதத் தூண்டியது அந்த நபரோட சாடைப் பேச்சுதான்!'' என்கிறார் புதுவை சந்திரஹரி.



● **வி.திலகா, சென்னை**

கமலின் ஐம்பது வருட திரையுலக சாதனைக்கு வாழ்த்து தெரிவித்தீர்களா?

அவருக்கு 'எஸ்.எம்.எஸ்' ஸில் அனுப்பிய வாழ்த்து வெண்பா இதோ...

''ஐந்தில் விளைந்து
ஐம்பதிலும் ஓங்கிவுயர்
பைந்தமிழ்ப் பூவே பரமக்குடி
- மைந்தரே
ஆண்டு பலநூறு ஆள்வீர்
சினிமாவை
காண்டீபன் வில்லாய்க்
கெலித்து...''

● **என்.கோமதி, நெல்லை**

கடவுளுக்குக் காய்ச்சலே வராதா?

கடவுளால் நமக்கு வரும் பிணி பிறவிப் பிணி. அதைப் போக்கும் வைத்தியனும் அவன்தான்.

● **எடக்காடு பீ.சேகர், ஊட்டி**

சிவபூஜையில் கரடி, முந்திரிக் கொட்டை - இவற்றில் நீங்கள் எந்த இனம்?

அடியேன் கரடி அல்ல; தொந்தரவு தராத Teddy Bear. சிவபூஜையில் ருத்திராட்சக் கொட்டை.



கிரேஸியைக் கேளுங்கள்

கமல் வெண்பா

● பா.அசோக், விருதுநகர்

அன்பின் அட்ரஸ் அம்மாவா? மனைவியா?

பழைய என் அம்மா; புதிய என் மனைவி; வீட்டை மாற்றினால்தான் விபரீதம்.

● எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

வார்த்தை ஜாலம் எங்கு கற்றீர்கள்...?

இந்த கி.வா.ஜா (கிரேஸி வார்த்தை ஜாலம்) கையளவு கற்றேன்; கி.வா.ஜ.விட மிருந்து.

● எம்.அசோக்ராஜா, திருச்சி

இறந்தவர்களைக் காணும் வாய்ப்பு ஒருமுறை கிடைத்தால் யாரைக் காண விரும்புவீர்கள்?

பூர்வ ஜென்மங்களில் பலமுறை இறந்து போன என்னை!

● என்.சண்முகம், திருவண்ணாமலை

'சேலை கட்டிய மாதரை' நம்பாதே என்று ஏன் சொன்னார்கள்?

சுடிதார், ஜீன்ஸில் பார்க்க ஆசைப்பட்டு!

● எஸ்.வி.பார்த்தசாரதி, திருச்சி

அமிர்தம், பழைய சாதம்... எது மிகவும் சுவையானது?

அளவுக்கு மீறினால் அமிர்தமும் விஷம். அளவுக்கு மீறினால்தான் பழைய சாதமே!

● அ.யாழினி பர்வதம், சென்னை

ஆடிக்காற்றில் உங்கள் வீட்டு அம்மி பறந்ததா?

பறப்பதற்கு ஏது அம்மி? அதான் ஆடித் தள்ளுபடியில் அம்மியில் அரைத்த காலம் பறந்து போய் கிரைண்டர், மிக்ஸியே வந்து விட்டதே!

● அ.ராஜா ரஹ்மான், கம்பம்

பத்து நாட்களுக்குப் பேசாமல் இருக்க வேண்டும் என்ற தண்டனையை உங்களுக்குத் தந்தால் என்ன செய்வீர்கள்?

வேறு வழி? 'பேசாமல்' தண்டனையை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான்!

● ரா.பிரசன்னா, மதுரை

மீசை முறுக்குக்கும், சாப்பிடும் முறுக்குக்கும் என்ன வித்தியாசம்?

வித்தியாசமாக ஒரு ஒற்றுமையைச் சொல்கிறேன். இரண்டுமே 'கை முறுக்கு'!

● ஆர்.ஹரி, சென்னை

எது உங்களுக்குப் பிடித்தது? தயிர் வடை, சாம்பார் வடை, ரச வடை?

தவடை. அது பிடித்துக்கொண்டால் எந்த வடையும் சாப்பிட முடியாது!

● என்.பாலகிருஷ்ணன், மதுரை

வருமானம், சன்மானம் இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?

உங்கள் கேள்வி எனக்கு வருமானம்; என் பதில் என்னால் முடிந்த சன்மானம்!

● மதுரை முருகேஷ், தஞ்சாவூர்

காதலுக்குக் கண்ணில்லை... கல்யாணத்துக்கு?

காதலித்தவளையே கல்யாணம் செய்துகொண்டால், இடுக்கண் இல்லை!



கல்கி



2009 செப்டெம்பர் 6
விரோதி ஆவணி 21
மலர் : 68
இதழ் : 6

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*

இடைத்தேர்தல் பாடங்கள்!


சமீபத்தில் நடந்து முடிந்த இடைத்தேர்தல்களில் காங்கிரஸ்- தி.மு.க. கூட்டணி அமோக வெற்றி பெற்றதில் ஆச்சரியமில்லை; எந்தவிதப் பெருமையும் இல்லை! பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. கூட்டணி தேர்தலைப் புறக்கணித்ததால், அந்த வெற்றி சுலப மாக்கப்பட்டிருக்கிறது என்பது எல்லோருக்குமே தெரியும்.

அ.தி.மு.க.வுக்கோ, இந்தத் தேர்தலில் சரியான மூக்குடைப்பு! ஜெ. கேட்டுக்கொண்டபடி அவரது ஆதரவாளர்கள் தேர்தலைப் புறக்கணிக்கவில்லை! (மொத்த வாக்குப் பதிவு 67 சதவிகிதம்.)

பெரும்பாலான அரசியல் நோக்கர்கள் கூறியது போல், ஜெ.யின் புறக்கணிப்பு முடிவு, தே.மு.தி.க.வின் வோட்டுப் பங்கை பலப்படுத்தவே உதவியிருக்கிறது. கடந்த 2006 பொதுத்தேர்தலில் 13 சதவிகித வோட்டுகள் பெற்ற அக்கட்சி, இந்த இடைத்தேர்தலில் 22 சதவிகித வாக்குகளைப் பெற்றுள்ளது! வாக்காளர்களும் ஆதா வாளர்களும் அ.தி.மு.க.வுக்கு மாற்றாக தே.மு.தி.க.வை ஏற்கத் தயாராக உள்ளனர் என்பது வலுவாக நிரூபணமாகியிருக்கிறது.

இந்த ஆதாயத்தை, கட்சியின் முன்னேற்றத்துக்கு மேலும் பயன்படுத்திக்கொள்ளும் விதமாக, தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த், காங்கிரஸுடன் கூட்டணி வைப்பது குறித்து, தேர்தல் நெருங்குகையில் யோசிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார். தனியாகவே தேர்தல்களைச் சந்திக்கும் தமது முந்தைய உறுதியான நிலையிலிருந்து அவர் இவ்வாறு மாறியிருப்பது தமிழக அரசி யலுக்கு மிக நல்லது.





தி.மு.க/அ.தி.மு.க. ஆட்சிகளின் ஆதிக்கத்தில் நடந்த லஞ்ச - ஊழல் மற்றும் குடும்ப அரசியல் ஊக்குவிப்பு போன்றவற்றால் சலிப்படைந்துள்ள வாக்காளர்கள், காங்கிரஸ் - தே.மு.தி.க கூட்டணியை நிச்சயமாக ஒரு நல்ல மாற்றாகக் கருதி எதிர்கொள்வார்கள். ராகுல் காந்தி, தமிழ்நாட்டில் இளைஞர் காங்கிரஸை பலப்படுத்தவும் உட்கட்சித் தேர்தல்களைச் சீராக நடத்தவும் முற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. புதிய கூட்டணி அமையுமானால் அதை பலப்படுத்தவும் இந்த நடவடிக்கை உதவும். விஜயகாந்தும் தமது கட்சியைத் தனி நபர் ஆதிக்க அமைப்பாக அன்றி, உட்கட்சி ஜனநாயகத்துக்கு உட்பட்ட சீரான அமைப்பாக உருக்கொள்ளச் செய்வாரேயானால், தமிழகத்தின் அரசியல் சூழல் பிரகாசமாகும். தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் தங்கள் போக்கைச் சீரமைத்துக்கொள்ளும் கட்டாயத்துக்கு உள்ளாகும்!

காங்கிரஸ் - தே.மு.தி.க. கூட்டணி அமைய வாய்ப்பு இருக்கிறது என்ற சூழலில், இன்றைய தி.மு.க அரசு தனது பணிகளையும் கடமைகளையும் புதிய நோக்குடனும் பொறுப்புணர்ச்சியுடனும் அணுக நிர்ப்பந்திக்கப்படும்.

ஜனநாயகத்தில் எதிர்க்கட்சியின் பங்கும் பொறுப்பும் மிக முக்கியமானவை. எதிர்க்கட்சி என்கிற முறையில் தமது பலத்தைப் பெருக்கியிருக்கும் விஜயகாந்த், தமது பொறுப்புணர்ச்சியையும் பங்களிப்பையும் அதைக் காட்டிலும் பன்மடங்கு பெருக்கிக்கொண்டு தமிழகத்தின் சிறந்த எதிர்காலத்துக்கு வழிகோலட்டும்.

ஜெயலலிதாவும், தேர்தல் புறக்கணிப்பு போன்ற ஜனநாயக விரோத முடிவுகளை எடுத்து, தமது மதிப்பைக் குறைத்துக்கொள்வதை, எதிர்காலத்திலாவது தவிர்க்கட்டும்!

●

சி.பி.செந்தில்குமார்



இன்று விடுமுறை!

அது ஒரு பெரிய தெரு. ஏழடுக்குகளுடன் கூடிய மாபெரும் மாளிகையை எழுப்பும் கட்டட வேலை மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. அங்கே ஐந்நூறுக்கும் மேற்பட்ட சிற்றாள்களும், கொத்தனார்களும் இரவு, பகலாக வேலை செய்து கொண்டிருந்தார்கள். 'டொக் டொக்'கென்ற ஒலி எழுந்து கொண்டிருந்தது.

ஒருநாள் காலை, 'இன்று விடுமுறை' என்ற போர்டு அந்தக் கட்டடத்துக்கு முன்னால் திடீரென்று முளைத்திருப்பதை, வேலைக்கு வந்தவர்கள் பார்த்துத் திகைத்து நின்றார்கள். முதல் நாள் இரவு எட்டு மணி வரை வேலை பார்த்தும் கூட, கான்டிராக்டர் 'நாளைக்கு விடுமுறை' என்று சொல்லவில்லையே! இந்த விடுமுறை எதற்காக என்று குழம்பினர்.

தங்களுக்கு முன்னால் அங்கே வந்து நிற்கும் காண்டிராக்டரின் காரைப் பார்த்துவிட்டு, அவர் இருந்த இடத்துக்கு எல்லாத் தொழிலாளிகளும் விரைந்தார்கள். தம்மிடம் வந்து சூழ்ந்து நிற்பவர்களைக் கண்ட கான்டிராக்டர், ''இதோ பாருங்கள்'' என்று அதே கட்டடத்துக்குப் பக்கத்தில் உருவாகிக் கொண்டிருக்கும் குருவிக்கூடு ஒன்றைச் சுட்டிக்காட்டினார். பிறகு சொன்னார்: ''திடீரென்று என்னுடைய சகோதர கான்டிராக்டர், இந்தக் குருவியார், இங்கே வந்து தம்முடைய வேலையைத் தொடங்கி இருக்கிறார்! பாவம், அவரது வேலை நமது வேலைகளினால் தடங்கலாகிவிடக்கூடாதே என்று பார்க்கிறேன். அநேகமாக இன்று மாலைக்குள் அவருடைய கான்டிராக்ட் முடிந்துவிடும் என்று யூகிக்கிறேன். எனவே இன்று உங்களுக்கு விடுமுறை!''



கதைகள், கவிதைகள், பரிசுப் போட்டி...

கோகுலம்

செப்டெம்பர் 2009 விலை ரூ.8/-

குழந்தைகளின் குதூகலம்!

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்வான கதை-3

மாதங்கி

புலம்பெயர்ந்த வாழ்க்கை சிலருக்குக் கலகலப்பானதாகவும் சிலருக்குத் தனிமைத்துவமாகவும் அமைவதும், அவரவர் வாழுமிடத்தையும் அவரவரது குணாதிசயங்களையும் பொறுத்ததே. திணிக்கப்பட்ட புலம்பெயர்தல் பெரும்பாலும் சங்கங்களையும் ஏக்கங்களையும் நிரப்புவதாக அமைந்து விடுகிறது. இந் நிலைக்கு ஆளாகும் ஏழு வயதுச் சிறுவனின் சிக்கலில்லாக் கனவுகளையும், அவை நனவானபின் உண்டாகும் மாற்றங்களால், நனவாகும் கனவு ஆட்டம் காண்பதும் மிக நேர்த்தியாகச் சொல்லப்பட்டிருக்கிறது தோழன் குறும் படத்தில்.

நல்ல படிப்பு, பெரிய வேலை, கைநிறைய ஊதியம் என்று வாழும் சாந்தி லட்சுமணன் தம்பதியரின் ஒரே மகன் கார்த்திக். தனியறை, குளிர்சாதன வசதி, புத்தகங்கள், பொம்மைகள், பெற்றோர் கவனிப்பு, நல்ல பள்ளி இவையெல்லாம் தவிர, நீடித்த நட்புக்கு ஏங்கும் சிறுவனாக கார்த்திக் காட்டப்பட்டிருக்கிறான்.

இக்கதை பின்னப்பட்டிருக்கும் களம், சிங்கப்பூர்.

புலம் பெயர்ந்த தமிழரின் வாழ்க்கை, நவீன அவசர யுகத்தில் உள்ள பலரைப் போலவே, இருவரும் வேலைக்குச் செல்லுதல், இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை நண்பர்கள் குடும்பங்களுடன் ஒரு கூடுகை, வாரயிறுதியில் குழந்தைகளுடன் வெளியே செல்லுதல், பணிப்பெண் இருந்தால் அவருக்கு ஞாயிறு விடுமுறை தருதல்... என்று நாட்கள் நகர தனக்கு, ஒரு தம்பியோ தங்கையோ கட்டாயம் வேண்டும் என்று மன்றாடுகிறான் கார்த்திக்.

இதைக் காட்சிப்படுத்த, பக்கம் பக்கமாக வசனங்களையோ கண்ணீரையோ மிகை உணர்ச்சியையோ கையாளாமல், படத்தின் இடையே ஒரு காட்சியில் தற்செயலாக அவன் அப்பா, அவன் தாயிடம், தம்பி அல்லது தங்கைக்காக எப்படி ஏங்கினான் என்று சொல்லுவதாக அமைத்திருப்பது இயக்குநரின் சாதுர்யம்!

பணிப்பெண் நன்கு கவனித்தாலும், கார்த்திக் வீட்டில் தனிமையாக உணரும் தருணங்கள். வகுப்புத் தோழனுடன் தொலைபேசியில் உரையாடுவதும், வீட்டு நாயை அவன் நண்பன் தொலைபேசியில் பேசவைத்து இருவரும் சிரிப்பதும் வெகு அழகு.

கார்த்திக்குக்கு தங்கைப் பாப்பா பிறக்கிறாள். படத்தின் முதல் காட்சி அபாரம். பள்ளியிலிருந்து வீடு வரும் கார்த்திக், புத்தகப் பையையும் காலணியையும் கழட்டுகிறான். 'உனக்குப் பிடித்த கட்லெட்டும், ப்ரௌனியும் செஞ்சிருக்கேன். முதல்ல சாப்பிட வா' என்று சமையலறை செல்கிறாள் சாந்தி. அவள் உபசரிப்பை ஏற்று, 'ஹாய்' சொல்லி கழுத்தைக் கட்டிக் கொள்கிறான். அடுத்த வினாடி விடுவித்துக் கொண்டு, உடனே கைகால் கழுவிக் கொண்டு, கண்களைச் சுழற்றுகிறான். தொலைக்காட்சி, கணினி, கையடக்க விளையாட்டான கேம்பாய் இவையெல்லாம் கண்ணில் பட்டும், அடுத்த

கணம் படுக்கையறையை நோக்கி குழந்தையின் கட்டிலருகில் ஓடிப் போகிறான்.

விழித்துக்கொண்டும் கைகாலை உதைத்துக் கொண்டும் இருக்கும் குழந் தையிடம், தான் ஆங்கில ஸ்பெல்லிங் சோதனையில் வெற்றி பெற்றதை அறிவிக்கிறான். குழந்தையிடம், 'நீயும் எழுந்துகொள்ள ஆரம்பித்தால், என்னு டன் விளையாட வரலாம்; மங்கிபாரில் உன்னை நான் பிடித்துக் கொள்வேன்' என்றும் கூறுகிறான். அன்று வெளியே செல்வதற்காக அப்பா சீக்கிரம் வந்தி ருக்கிறார். கணினியில் ஏதோ தட்டச்சு



குறும்படமும் ஒரு பின்குறிப்பும்

செய்துகொண்டிருக்கிறார் அம்மா, தட்டில் டிஃபனுடன் வருகிறாள். கார்த்திக் பேசுவதைக் கேட்டு, அப்பாவும் அம்மாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கிறார்கள். மகிழ்வைப் பகிர்வார்கள்; குறைந்த பட்சம் ஒரு புன்னகையாவது என்ற நம் எதிர்பார்ப்புக்கு மாறாக, கனத்த மௌனத்துடன் ஒரு விதக் குற்ற உணர்வுடன் பார்த்துக் கொள்கிறார்கள்.

படத்தின் தொடக்கத்திலேயே நிமிர்ந்து உட்கார வைத்துவிடுகிறார்கள். எந்தவித சாகசமும் இன்றி இறுதி வரை இந்தக் கவனத்தைப் பெறுவதில் இயக்குநர் வெற்றியடைந்திருப்பதன் மூலகாரணம் யதார்த்தமான காட்சிகள், மிகக் குறைவான எளிய வசனங்களின் பலம்!

ஏற்கெனவே வீட்டில் இருந்த பிலிப்பினோ பணிப்பெண், சாந்தி சில மாதங்கள் கழித்து வேலைக்குச் சென்ற பின் இரு குழந்தைகளையும் பார்த்துக் கொண்டாள் என்றும், இப்போது அவள் வேலையை விட்டுவிட்டு, ஊருக்குப் போய்விட்டதால் வேறு மெயிட் வரும்வரை, அம்மா அலுவலக லீவு எடுத்துக் கொண்டிருக்கிறாள் என்றும், விளையாடும் இடத்தில் சீனச் சிறுவனிடம் கார்த்திக் சொல்கிறான். இவை அடுத்தடுத்துக் காட்டப்படுகின்றன.

கதைத் திருப்பத்தின் காரணி இரண்டு நிமிடத் தொலைபேசி உரையாடல் மட்டுமே. நிஜ வாழ்க்கையில் நிஜ முடிவுகள் எளிய வார்த்தைகளில் சொல்லப்படுகின்றன. ஒத்திகைக்கப்பட்ட பல நூறு வாக்கியங்கள் யதார்த்தத்தில் நிகழ்வதில்லையே! சாந்தி தொலைபேசியில் அழைத்த நண்பருடன் பேசுகையில் எதிராளியின் பேச்சைக் கேட்காமலேயே இவர்களின் பிரச்னையைப் புரிந்துகொள்ள முடிகிறது.

வேறு ஒரு காட்சியில், 'கார்த்திக், நாளைக்கு கிரவுண்ட் போகவேணாம், உன் ஃப்ரெண்ட்கிட்ட சொல்லிட்டு வந்திரு. நாம, செந்தோசா போறம்' என்று அப்பா சொன்னதும், 'சொல்லிட்டு வரேன்' என்று போகிறவன், சிறிது நேரத்தில் பதற்றத்துடன் ஓடி வருகிறான். 'அம்மா அம்மா, உண்மையச் சொல்லுங்க, என்னை ஊரில விட்டுறப் போறீங்களா? சொல்லுங்கம்மா, அவங்கம்மா சொன்னாங்கன்னு மோனிஷா சொல்றா.'

மெல்லிய பின்னணி இசையும்



''இன்னும் ஆறேழு மாசத்துக்கு துவரம் பருப்போட விலை இப்படி அதிகமாத்தான் இருக்குமாம்!''

''அப்புறம்?''

''அதுவே நமக்குப் பழக்கமாயிடுமாம்!''

- கே.ராமச்சந்திரன்

நின்றுவிட, உறுத்தும் மௌனங்களும், அவன் அழுதவாறே சாப்பிடாமல் தூங்கிப்போக சாந்தி தொலைபேசியை எடுத்து, 'கார்த்திக்கை ஊருக்கு அனுப்புவது பற்றி மீண்டும் யோசிக்கிறோம், இங்கேயே இருக்கட்டும்' என்று ஊரில் பெற்றோருக்குச் சொல்லுகிறாள். எனக்கு அவன்தான் முக்கியம் என்று கணவனிடம் சொல்ல, படம் நிறைவடைகிறது. சாந்தி தன் வேலையை விட்டுவிடத் தீர்மானிக்கிறாள்.

கார்த்திக்கின் அடுத்த நாள் மன நிலையையும், அதைத் தொடர்ந்து அவனைச் சமாதானப்படுத்த இயலாமல் திண்டாடுவதையும் இன்னும் கொஞ்சம் காட்டியிருக்கலாம். என்றாலும், இது அற்புதமான படம் என்பதில் எந்த இரண்டாம் கருத்தும் இல்லை. மென்மையான கவிதையைப் படிக்கையில் காட்சியும் பொருத்தமாகக் காட்டப்பட்டால் எப்படி இருக்கும்?

தோழன், குறும்படம் இதமான கவிதை!

எல்லோரும் உறங்கிவிட்ட இந்த இரவுப் பொழுதில், குறும்பட விமர்சனத்தை எழுதி முடித்துவிட்டு (நேற்று பார்த்தது) சிங்கப்பூர் தேசியப் பல்கலையில் படிக்கும் ராஜுவின் சித்தி பெண்ணுக்கு அவள் கேட்டுக் கொண்டதன்படி மின்னஞ்சலில் அனுப்பினேன்.

தான் முதல் குறும்படம் எடுக்கப் போவதாக, அதன் கதையுடன் ஒரு ஞாயிறு மதியம் எங்கள் வீட்டுக்கு மதியவேளையில் வந்தவள், எங்களுடன் அளவளாவிய பின், அந்தக் கதையை விட்டுவிட்டு, எங்கள் வீட்டுக் கதையை எடுக்கலாமா என்று தயக்கத்துடன் கேட்டாள். நாங்கள் சம்மதித்த ஒரு வாரத்திலேயே எடுத்து, ஒளிவட்டை நாங்கள் பார்க்க தபாலில் அனுப்பிவிட்டு, ஏதாவது வித்தியாசமாகவோ, உறுத்தலாகவோ தோன்றினால் சொல்லவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டாள். என் வலைப்பூவில் நான் எழுதும் திரைவிமர்சனங்களைத் தொடர்ந்து படிப்பவளாயிற்றே!

குழந்தைகளைத் தூங்கவைத்துவிட்டுப் பார்க்க அமர்ந்தோம். முப்பது நிமிடங்கள் ஓடும் குறும்படம். 'நான் நல்லாயிருக்குன்னு சொன்னேன்னு சொல்லிடு' என்று நேற்று படம் முடிந்தவுடனே என் கணவர் ராஜு சொல்லிவிட்டுப் படுக்கப்போய் விட்டார். 'இன்னும் கொஞ்சம் பேச மாட்டாரா?' என்று நினைத்தேன். தற்சமயம் எங்கள் வீட்டில் நடப்பதை நாங்களே மூன்றாம் மனிதர் பார்ப்பது போல்தான் பார்த்தோம். குழந்தை சிணுங்

"செக்யூரிட்டி போலீஸுக்குத் தலைவர் ஏன் கதர் டிரஸ் போட்டு விட்டாரா?"

"பாதுகாப்பை எளிமைப்படுத்தணும்னு சொன்னாராம்!"

- சென்னிமலை சி.பி.செந்தில்குமார்



கவே அதைக் கவனித்துக் கொண்டு, என்னையறியாமலே தூங்கிப்போய் விட்டேன். அதன் தாக்கம் இன்னும் அதிகமாக வியாபித்திருக்கும் இவ்வேளையில் விமர்சனத்தை இன்றிரவு எழுதிவிட்டேன். ஆனால், என் பிரச்னைக்கு முடிவு? என் கதையைத்தானே எடுத்திருக்கிறார்!

என்ன ஆனாலும் குழந்தையின் உணர்வுகளுக்கு முக்கியம் கொடுக்க வேண்டியிருக்கிறதே. குறும்படத்தைப் பார்த்தபோதே கண்ணில் நீர் தளும்பியது. சமாளித்துவிட்டேன். குட்டிப் பாப்பாவும் கார்த்திக்கும், ராஜுவும் தூங்கிவிட்ட (லட்சுமணன் என்று பெயரை மாற்றி லக்கியாக்கிவிட்டாள், நான் சாந்தியாகி விட்டேன், கார்த்திக் மாறவில்லை.) இந்த இரவு, எனக்கான உறக்கத்தை எங்கோ கொண்டுபோய் ஒளித்துவைத்துவிட்டது.

நேற்றைக் காட்டிலும் இன்று என் மனபாரம் அதிகமாவதைத் துல்லியமாகத் தெரிந்து கொண்டேன். இவருக்குப் பெற்றோர் தவறிவிட்டனர். என் அம்மா அப்பா நெய்வேலியில் இருக்கிறார்கள். 'இங்கே விடு, தங்கமாய்ப் பார்த்துக்குவோம்' என்கிறார்கள். மெய்தான். அம்மா என்னைவிட நன்றாகவே பார்த்துக் கொள்வார். தவிர ஊரில் வருபவர்கள், நண்பர்கள், சொந்தக்காரர்கள், என்று மனிதர்களுடன் கலகலவென்று இருக்கும். இங்கே போல் சதா பூட்டிய பெட்டிகள் அல்லவே. அப்பாவுக்கு ப்ரஷர் இப்போது மிக அதிகமாய் இருக்கிறது. இந்த வருடம் விமானப்பயணம் கூடாது என்று டாக்டர் சுசீலா சொல்லிவிட்டார். அம்மா மட்டும் தான் இரண்டு மாதங்கள் வர முடிந்தது. அப்பாவுக்குக் குழந்தையைக் காட்ட வேண்டும்.

மீண்டும் படிக்கும் அறைக்குச் சென்று தொலைக்காட்சியை இயக்கினேன். அம்மா யானையின் காலிடுக்கில் குடுகுடு வென ஓடும் குட்டியானை - டிஸ்கவரி

"இந்தப் படத்தை ஃபிலிம் என்று சொல்லக்கூடாது. மூவி என்றுதான் சொல்லவேண்டும்" - ஸ்ட்ரிக்ட் ஆர்டர் போடுகிறார்கள் 'எதிர்மறை' படக் குழுவினர். முதல்நாள் படப்பிடிப்பு தொடங்கி படத்தைத் திரையிடுவது வரை ஃபிலிமே பயன்படுத்தாமல் அனைத்துமே டிஜிட்டல் முறையில் திட்டமிட்டுள்ளனர். இதற்கென ரெட் ஒன், ஃபேன்டம் என்ற தொழில்நுட்ப கேமராக்களைச் சொந்தமாக வாங்கியுள்ளார் படத்தின் தயாரிப்பாளரும், இயக்குநருமான ஜி.அருண். இவர் ஒரு பொறியியல் பட்டதாரி.

இயக்குநர், ஹீரோ, ஹீரோயின் முதல் இசையமைப்பாளர் வரை இப்படத்தில் பலரும் புதுமுகங்கள். "கதையும் புதுசு தான்" என்கிறார் இயக்குநர். "உளவியல் சார்ந்த மெய்சிலிர்க்க வைக்கும் மர்மக் கதைதான் எதிர்மறை." 'கொஞ்சம் புரியற மாதிரி ஸ்டோரி அவுட்லைன் கொடுங்க' என்றால், "ஒரு சி.பி.ஐ. அதிகாரியின் வாழ்க்கைக்கும் அவர் விசாரிக்கும் தொடர் கொலை வழக்குக்கும் உள்ள தொடர்பை வைத்துப் பின்னப்பட்ட கதை" என்று சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பின்னுகிறார்.

எதிர்மறை என்ற தலைப்பு ஏன்? "கதைக்களம், தொழில்நுட்பம், திரைக் கதையம்சம் எல்லாவற்றிலும் வித்தியாசம் காட்டியுள்ளோம் என்பதைச் சொல்லாமல் சொல்லத்தான் இப்படி ஒரு தலைப்பு" என்கிறார். தமது தயாரிப்பு நிறுவனத்துக்குச் சூட்டியுள்ள பெயரும் வித்தியாசமாகத்தான் உள்ளது - 'ஈஸ்கோப்'. "திரைப்படத் தொழில்நுட்பத்தில் எலெக்ட்ரானிக் புரட்சியைக் கொண்டு வரும் ஆர்வத்தில் வைத்த பெயர்" என்கிறார் இந்த கெமிக்கல் என்ஜினீயர். (நாலு பேருக்கு நல்ல கருத்தைச் சொல்லும்னா எந்தப் புரட்சியும் தப்பு இல்லை.) - அபி



சேனல் - பட்டென்று அணைத்துவிட்டேன். என் உள்ளத்தின் கனத்தை இன்னும் அதிகரித்துவிடும்.

படுக்கையறையின் கதவை ஓசையுடன் ராஜு திறக்கும் சத்தம் கேட்டது. இரண்டு குழந்தைகளான பின்பும் இந்த நுட்பமான விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டாமா?

''மெதுவா, தீப்பு எழுந்திடப் போகுது...'' என்றேன் தொய்வுடன்.

''தூக்கம் வரலையா?''

''ஊஹூம்...''

''எனக்குத் தெரியும் சத்யா...''

பொங்கிய கண்ணீரை நான் தடுக்கவில்லை.

''ராஜு, காஞ்சுவின் குறும்படம்...''

''ம்ம்ம்...''

''கவலைப்படாதே சத்யா, வா படுத்துக்க, ஹார்லிக்ஸ் கரைச்சிட்டு வரேன், குடி, நிம்மதியாத் தூங்கு, மூணு மணிக்கு தீபு எழுந்துக்கும், கார்த்திக் பாவம் அசந்து தூங்கறான்.''

வெப்பமான பானம் என் வெப்பத்தைக் கூட்டாதா?

''சத்யா, காஞ்சுவின் குறும்படம், பாத்தமே பேரென்ன?''

''எதுவாயிருந்தா என்ன, அப்படியே என் நிலைமை...''

''நான் யோசிச்சு ஒரு முடிவுக்கு வந்திட்டேன், சத்யா''

என் இருதயத்தின் படபடப்பு என் செவிகளுக்கு நன்றாகக் கேட்டது.

எவ்வித உணர்ச்சியையும் வெளிக்காட்டாமல் அவர் முகத்தை நோக்கினேன்.

ராஜு பேசினார்.

''பணம் வாழ்க்கைக்குத் தேவைதான். ஆனா குழந்தைங்களோட மெல்லிய உணர்ச்சியைக்கூட புரிஞ்சுக்காத மாதிரி பாசாங்கா இருக்க முடியல. நமக்கு எதுவும் கடன் இல்லை. இதுக்குத் தகுந்த லைஃப் ஸ்டைல் போதும். நான் வேலையை விட்டுடறேன். வீட்டை, குழந்தைங்களை, எல்லாம் பாத்துக்கறேன், சமைச்சு வைக்கறேன்... நீ வேலையையோ படிப்பையோ விடாதே. மெதுவா நல்ல ஆள் கெடச்சப்புறம் நான் போய்க்கிறேன். ரிலாக்ஸ். நமக்குக் குழந்தைகள் முக்கியம். கூடவே நிம்மதியும். தோழன்ங்கற தலைப்பு எனக்குப் பிடிச்சிருக்கு சத்யா!''

''உன் மனைவியை நீ அடிச்சும் அவங்க உன்னை ஒண்ணும் செய்யலியா?''

''கனவுல போய் என்னை என்ன செய்ய முடியும்?''

- ஜீ.வி.சுபாஷ்



ஒரு தடவைதான்



''எங்க ஆஃபீஸ் ஒரு குடும்பம் மாதிரி...''

''அதுக்காக மானேஜரோட பாட்டி செத்ததுக்குப் போய் ஆஃபீஸுக்கு லீவு விடறது நல்லாயில்லை.''

- வீ.சாரதி டேச்சு

''நீங்க எழுதின கதையை எங்க பழைய புத்தகக் கடையிலே போட்டீங்களா...?''

''ஆமாம்... ஏன்?''

''அதைப் படிச்ச ஒருத்தர் மன நோயாளியாகிட்டாரு!''

- திருத்துறைப்பூண்டி சேகர்





''பள்ளி வாழ்க்கையில ஒரு முறைதான் பெயிலாகி இருக்கேன்னு தலைவர் அடிக்கடி சொல்றாரே, எதுவரைக்கும் படிச்சிருக்கார்?''

''ஒண்ணாவது!''

- மா.கண்ணன்

''நேத்து நீ மெகா சீரியல் பார்க்கறா மாதிரிதானே கனவு கண்டே...?''

''ஆமாம்... உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''நேத்து ராத்திரி தூக்கத்துல அழுதியே!''

- உஷா சாரதி





''படம் பார்த்துக் கதை சொல்ற துலகூட உங்க பையன் சைபர் மார்க்தான் வாங்கியிருக்கான்.''

''இப்ப எந்தப் படத்துல ஸார் கதை இருக்கு?''

- அம்பை தேவா

ஃபெமிலி!

''தூக்கத்துலேயே என் உயிர் பிரியணும்னு ஆசைப்படறேன் டாக்டர்!''

''ஆபரேஷன் சமயம் கொடுக்கிற மயக்கம் கூட தூக்கம் மாதிரிதான் இருக்கும்!''

- அம்பை தேவா



வண்ணத் தூரிகை

அர்ச்சுனன் தவம் செய்து சில ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு, அந்தக் குன்றின் சாரலில் பாண்டிய மன்னன் ஒருவன் ஒரு கோட்டை கட்டினான். அந்தக் கோட்டை நாளடைவில் பழுதுபட்டு இடிந்து தகர்ந்த நிலையிலேதான் இருந்தது. ஆகையால், அந்தக் கோட்டையைப் பற்றி யாவரும் அவ்வளவாகக் கவனிக்கவில்லை. பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டியக் கட்டபொம்மனைத் தூக்கிலிட்டபோது, பாண்டிய நாட்டிலுள்ள பாளையக்காரர்களின் கோட்டைகளையெல்லாம் தகர்த்துவிட வேண்டுமென்று கும்பினிக்கார வெள்ளையர்கள் கட்டளையிட்டார்கள். ஆனால், இந்தக் கோட்டையை இடிக்க வேண்டும் என்று அவர்கள் கட்டாயப்படுத்தவில்லை. ஏற்கெனவே அக்கோட்டை வேண்டிய மட்டும் இடிந்து தகர்ந்து இருந்தது. எந்தவிதமான சண்டைக்கும் அதை உபயோகப்படுத்திக்கொள்ள முடியாது. அதிகம் பேர் அதில் தங்கியிருப்பது அசாத்தியமான காரியம்.

அச்சமயம் அக்கோட்டையில் கருப்பையா சேர்வை என்ற கிழவனும், அவனுடைய செல்லப் புதல்வி வேலம்மாள் என்பவளும் வாழ்ந்து வந்தார்கள்.

அர்ச்சுனன் குன்றின் உச்சியிலிருந்த சுனை நீர் தகப்பனும் மகளும் ஜீவித்திருப்பதற்குக் கொஞ்சம் உதவியாயிருந்து வந்தது. அந்தச் சுனையில் சாதாரணமாக மழைக் காலத்திலும் குளிர்


மாடத்தேவன் தோட்டம்




காலத்திலும் தண்ணீர் ததும்பிக் கொண்டிருக்கும். அதிலிருந்து ஒரு சிறிய அருவி கோட்டைக்குள்ளே புகுந்து ஒரு பக்கத்துச் சுவர் ஓரமாக ஓடிச் சென்று வெளியில் வந்து கீழே அடிவாரத்துக்குச் செல்லும். அவ்விதம் குன்றின் அடிவாரத்துக்கு வரும் சுனை அருவி நீரை உபயோகித்து ஒரு வாலிபன் பயிர்த் தொழில் செய்து கொண்டிருந்தான். அவன் பெயர் மாடத்தேவன். சில சமயம் அவன் கேழ்வரகு பயிர் செய்வான். சில சமயம் வெள்ளரிக்காய் போடுவான். நல்ல உழைப்பாளி. ஆகையால், அவனுடைய தோட்டம் எப்போதும் குளுகுளுவென்றிருக்கும். அந்தப் பக்கமாகச் சாலையில் பிரயாணம் செய்கிறவர்கள் சற்று நின்று அந்தத் தோட்டத்தைப் பார்த்துவிட்டுத்தான் போவார்கள். அவர்களில் சிலர் மகிழ்ச்சியுடன் பார்ப்பார்கள்; சிலர் பொறாமையுடனும் பார்ப்பார்கள்.

(மாடத்தேவன் சுனை கதையிலிருந்து...)

அமரர் கல்கி



கதை: பாலுவின் மனைவி வசந்தி கர்ப்பமாயிருக்கிறாள். ஒரு நாள் இருவரும் வெளியே போகும்போது வழியில் மல்லிகா என்ற ஐம்பது வயது மதிக்கத்தக்க பெண்ணையும் கூடவே ஓர் இளம் பெண்ணையும் பார்க்கிறார்கள். அவனுக்கு மல்லிகா ஏற்கெனவே அறிமுகமானவள் என்பது அவர்கள் பேசிக்கொண்டதில் இருந்து தெரிகிறது. 'உன் பொண்டாட்டி ஊருக்குப் போயிட்டா சாப்பாட்டுக்குக் காய்ஞ்சு போயிடுவேல்ல? என் வீட்டுக்கு வா! புது சாப்பாடு போடுறேன்' என்று ஜாடையாகக் கூட இருக்கும் இளம் பெண்ணைக் காட்டிச் சொல்கிறாள் மல்லிகா. மனைவி ஊருக்குப் போய் விடுகிறாள். அன்று அதிகாலையிலேயே அவனுக்கு மல்லிகாவிடமிருந்து ஃபோன் மேல் ஃபோன் வருகிறது. அதேசமயம் வசந்தியிடமிருந்தும் ஃபோன் வருகிறது. 'நான் ஊருக்குக் கிளம்புறப்போ உங்களுக்கு ஒரு லெட்டர் வந்துச்சு! மறந்துட்டேன்' என்கிறாள். பாலு கடிதத்தை எடுக்கிறான். அது வசந்தி, அவனுக்கு எழுதிய கடிதம். 'எங்க வேணாலும் போங்க! ஆனா ஜாக்கிரதையா இருங்க. நீங்க கல்யாணத்துக்கு முன்னாடி ரத்தம் டெஸ்ட் செஞ்சுக்கிட்டேன்னு சொன்னீங்கல்ல? அதே மாதிரி நான் ஊருக்குத் திரும்ப வர்றதுக்குள்ள இன்னொரு தடவை ரத்தம் டெஸ்ட் பண்ணிடுங்க' என்று அதில் எழுதியிருக்கிறது. அதைப் படித்ததும் நொந்துபோய் அப்படியே சுவரோடு சரிந்து தரையில் அமர்ந்து





இயக்குநர்: கி.மாஜினி. 'கண்ணாடிப் பிழைகள்' குறும்படத்தின் இயக்குநர். அவரே கதாநாயகனாக நடித்தும் இருக்கிறார். குடியின் தீமைகளைச் சொல்லும் விதமாக 'உறவின் சுவடு' என்ற குறும்படத்தையும் எடுத்திருக்கிறார். கிட்டத்தட்ட இரண்டு வருட காலம் 'காத்தமுத்துக் கவிராயர்' என்ற பெயரில் மக்கள் தொலைக்காட்சியில் தோன்றி, அன்றாடப் பிரச்னைகளைக் கவிதைகளாக வடித்திருக்கிறார். சில புது முக இயக்குநர்களிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றியிருக்கிறார்.



பாலு சத்யா

பொண்ணும் எப்படித் தவறு பண்ற கணவனை நாசூக்கா திருத்த முடியும்னு சொல்லி யிருக்கேன்.''

நச்சுன்னு நாலு வாக்கியம்!

வசனங்களைக் கொஞ்சம் குறைத்திருக்கலாம். வசந்தி

கண்ணாடிப் பிழைகள்!



விடுகிறான். செல்ஃபோனிலிருந்து மல்லிகா நம்பரைத் தேடி எடுத்து அழிக் கிறான். ஸ்விட்ச் ஆஃப் செய்கிறான். இது 'கண்ணாடிப் பிழைகள்' குறும்படத்தின் கதை.

குறும்படத்தைப் பற்றி மாஜினி: ''மக்கள் தொலைக்காட்சியில 'எய்ட்ஸ் விழிப்புணர்வு குறும்படப் போட்டி' ஒண்ணு அறிவிச்சாங்க. அதுக்காக இந்தக் குறும்படத்தை எடுத்தேன். அந்தப் போட்டியில மூணாவது பரிசு கிடைச்சுது. நடுவரா இருந்தவர் இயக்குநர் பாலு மகேந்திரா. மோதிரக் கையால குட்டுப் பட்டிருக்கோங்கற சந்தோஷம் எனக்கு. இதுல நெகட்டிவ் அப்ரோச்ங்கற உத்தி யைக் கையாண்டிருக்கேன். ஒவ்வொரு

யின் கடிதம் 'பொக்கிஷம்' நதீரா கடிதம் போலக் கொஞ்சம் நீளம். 'கண்ணாடிப் பிழை' என்பது இடவலப் பிழை. அந்தத் தலைப்பு எப்படி இந்தக் குறும்படத் துக்குப் பொருந்துகிறது என்பதுதான் தெரியவில்லை. ஜாஃபரின் எடிட் டிங்கும் கே.ஆர்.சிவகுமாரின் ஒளிப்பதி வும் இந்தக் குறும்படப் பட்டுக்குத் துடுப்பு போல பயன்பட்டிருக்கின் றன. 'எய்ட்ஸ்' என்ற வார்த்தையையே உபயோகப்படுத்தாமல் அதற்கான விழிப் புணர்வை எளிமையாகச் சொன்னதற்கு, மாஜினிக்கு ஸ்பெஷலாக ஒரு பூங் கொத்து! ◎

அருண் சரண்யா

20

'**வி**ஷ்ணுஸி பஜலா' என்று தொடங்கும் நாமதேவரின் அபங்கத்தை அழகாகப் பாடினார் ராமநாதன். கூடவே அதன் அர்த்தத்தையும் விளக்கினார்.

''என்ன ஓர் ஆச்சரியம்! ஜனாபாய் கூட இதே அர்த்தத்தில் ஓர் அபங்கம் பாடியிருக்கிறாரே'' என்றான் ஜருகண்டி.

''ஓ, 'பஜன கரீ மஹாதேவ'ன்னு தொடங்குமே, அந்த அபங்கத்தைச் சொல்றியா?'' என்று கேட்டார் ராமநாதன்.

'அதெல்லாம் எனக்குத் தெரியாது. அந்தப் பாட்டின் அர்த்தம் 'சிவபெருமான் ராமநாம பஜனை செய்கிறார். ராமரோ சிவபெருமானைப் பூஜை செய்கிறார். இரண்டு தெய்வங்களையும் ஒன்றாகவே கருதுங்கள்' என்கிற மாதிரி இருக்கும்.''

''அதேதான்'' என்றார் ராமநாதன் உற்சாகமாக.

எனக்கு நரஹரியின் சரிதம் நினைவு வந்தது. பண்டரிபுரத்திலேயே இருந்து கொண்டு விட்டலனைப் பார்க்க மாட்டேன் என்று அடம்பிடித்த அந்தப் பொற்கொல்லருக்கு விட்டலன் உண்மையை உணர்த்திய விதம் மனத்தில் வட்டமிட்டுப் புல்லரிப்பை உண்டாக்கியது. நாளடைவில் நரஹரி, சிவனும் திருமாலும் ஒருவரே என்பதைத் தனது பல அபங்கங்களில் வெளிப்படுத்தி இருக்கிறார்.

தன் பக்தர்கள் சிவபெருமானையும் சிவபெருமானின் மேன்மையையும் அறிய வேண்டும் என்பதில் விட்டலன் குறியாக இருந்திருக்க வேண்டும். தெய்வங்களுக்கு ஏது பேதம்? அதுவும் விட்டலன் அபேதத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு. பக்தர்களோடு பக்தர்களாகக் கலந்து பழகியவன்.



பேதரி ஓர் அழகான கிராமம். பசுமையான வயல்கள். அந்த ஊரில் அந்தண குலத்தைச் சேர்ந்த தாமாஜி பண்டிதர் ஒரு பெரும் வள்ளலாக விளங்கினார். இவரது முன்னோரில் சிலர் கிராம அதிகாரி

களாக இருந்ததுண்டு. என்றாலும் தாமாஜிக்குப் பதவியில் நாட்டம் இல்லை. வேதங்களை ஓத வேண்டும், அவற்றின் படி நடக்க வேண்டும் - இதுவே அவரது எண்ணமாக இருந்தது.

இவரைப் பற்றி கேள்விப்பட்ட மன்னன், மங்கள வடே என்ற ஊருக்கு அதிகாரியாக இவரை நியமித்தான். முதலில் தாமாஜி இதற்குச் சம்மதிக்கவில்லை. மன்னன் மிகவும் வற்புறுத்தவே ஒப்புக் கொண்டார்.

தாமாஜியின் ஆட்சியில் மக்கள் நிம்மதியாக இருந்தனர். தெய்வ பக்தியையும் மக்களிடையே வளர்ப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டினார் தாமாஜி.

எல்லாமே இயல்பாக நடந்துவிட்டால் பக்தர்களின் பெருமையை உலகம் உணர்ந்துவிடாதே! சோதனை பஞ்சத்தின் வடிவில் வந்தது.

மழை பொய்த்தது. விவசாய நிலங்கள் காய்ந்தன. பஞ்சம், தன் கோர முகத்தைக் காட்டத் தொடங்கியது.

ஏழை மக்கள் தாமாஜியின் வீட்டுக்கு வருவதும், தாமாஜி அவர்களுக்கு தம் வீட்டுத் தானியங்களைக் கொண்டு உணவளிப்பதும் வழக்கமானது. பண்டரிபுரத்திலிருந்து அங்கு வந்த பக்தர்களை மேலும் சிறப்பாக விருந்தோம்பல் செய்து உளம் குளிரச் செய்தார். தாமாஜியின் தர்ம குணத்தை அறிந்த மக்கள் பஞ்சத்தால் வாடிய அக்கம்பக்கத்து ஊர்களிலிருந்தும் அவர் வீட்டை நோக்கி வரத் தொடங்கினர். தாமாஜியின் வீட்டிலிருந்த தானிய மூட்டைகள் வெகு சீக்கிரம் கரைந்தன.



"பஞ்சம் ஏன் பரந்தாமா?"



இந்த நிலையில் சில குடும்பங்கள் தாமாஜி வீட்டை அடைந்தனர். எலும்பும் தோலுமாக, பார்க்கவே பரிதாபமாகக் காட்சி அளித்தனர் அவர்கள்.

'வீட்டிலோ அரிசி, கோதுமை இல்லை. தம்மை நம்பி வந்திருக்கும் இந்த எளிய மக்களுக்கு எப்படி உணவு படைப்பது?' நினைக்க நினைக்க அவர் மனத்தில் துக்கம் தோன்றியது.

துக்கத்தைத் தொடர்ந்து வேறொரு சிந்தனையும் எழுந்தது. 'அரசாங்கத்துக்குச் சேரவேண்டிய நெல்லும் கோதுமையும் கிடங்கில் எக்கச்சக்கமாக இருக்கின்றன. அந்தக் கிடங்கின் சாவியோ நம்மிடம்தான்.

அபங்க அமுதம்

விஷ்ணூஸீ பஜலா சிவ தூராவிலா
அதபாத ஜாலா தயா நரா
சிவபூஜா கரீ விஷ்ணூஸீ அவ்ஹேரீ
தயாசியே கரீ யம நாந்தே
விஷ்ணுகதா ஜகே சிவாஸீ ஜோ நிந்தீ
தயாஸீ கோவிந்தீ டாவ நாஹீ
நாமா ம்ஹணே அஸதீ சிவவிஷ்ணு ஏக
வேதாசே விவேக ஆத்மாராம

- நாமதேவர்

'விஷ்ணுவைப் பூஜித்துக்கொண்டு சிவனை வேண்டுமென்றே விலக்கி வைப்பவன் பாதாளத்தை அடைவான். சிவபூஜை செய்துகொண்டு விஷ்ணுவை நிந்திப்பவன் வீட்டில் எமன் வசிப்பான். சிவனும் விஷ்ணுவும் ஒருவரே. அவர்கள் ஆத்மா ராமர்கள். அதாவது ஒருவரில் ஒருவர் ஜீவிப்பவர்கள்'.

கிடங்கைத் திறந்து அரசாங்க தானியங்களை எடுத்து இந்த மக்களுக்குக் கொடுத்தால் என்ன?'

அவரது மனசாட்சி தவறு என்றது. மனிதாபிமானம் சரி என்றது.

இறுதியில் மனிதாபிமானமே வென்றது. அரசாங்கக் கிடங்கில் இருந்த தானியங்களை ஏழைகளுக்குக் கொடுத்தார். 'ஒரு கிராமத்துக்கு இவ்வளவு என்று திட்டமிட்டு விநியோகித்தால், மழை பொழியும்போது பெரும் விளைச்சலில் திருப்பித் தந்துவிடப் போகிறார்கள். அப்போது அரசுக்கு உரிய தானியங்கள் திரும்ப வந்துவிடும்' இப்படி எண்ணிய தாமாஜி, தாம் அளித்த தானியங்களைக் கணக்கு வைத்துக்கொள்ளவும் தவறவில்லை.

"சுயநலமாக நானும் என் குடும்பமும் இருந்த தானியங்களைச் சமைத்துச் சாப்பிட்டிருக்க வேண்டுமா?"

- தாமாஜி பண்டிதர்

செய்தி மன்னனை எட்டியது. கோபம் பொங்கியது. நம்பிப் பொறுப்பை ஒப்படைத்தால் இந்த தாமாஜி அதிக உரிமை எடுத்துக்கொண்டு அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்துவதா!

தாமாஜியைக் கைது செய்து அரண்மனைக்குக் கொண்டுவர காவலர்களை அனுப்பினான்.

மன்னனின் ஆணையைக் கேட்டு முதலில் நிலைகுலைந்தார் தாமாஜி. பின்னர் மனத்தைத் தேற்றிக்கொண்டு காவலர்களுடன் கிளம்பினார். வழியில் பண்டரிபுரம். ''விட்டலனைத் தரிசித்து விட்டு வந்து விடுகிறேன்'' என்றார் தாமாஜி. முதலில் இதற்கு மறுத்த காவலர்கள் பிறகு அனுமதித்தனர்.

ஆலயத்துக்குள் நுழைந்தவர் விட்டலனின் காலில் விழுந்தார். ''பஞ்சம் ஏன் பரந்தாமா? நான் என்ன செய்திருக்க வேண்டும்? சுயநலமாக நானும் என் குடும்பமும் மட்டுமே இருந்த தானியங்களைச் சமைத்துச் சாப்பிட்டிருக்க வேண்டுமா? பசியால் வாடிய அவர்களுக்கு தானியம் அளித்தது தப்பா? சொல் விட்டலா சொல்'' என்று கதறி அழுதார் தாமாஜி.

அதே சமயம் அரண்மனைக்குள் ஓர் இளைஞன் நுழைந்தான். முறுக்கேறிய உடல், அடர்ந்த மீசை, முழங்காலுக்கு மேல் ஏறிய வேட்டி, கையில் ஒரு தடி, தலையில் சிறு மூட்டை என்று காட்சியளித்த அந்த இளைஞன், மன்னன் சற்றும் எதிர்பாராத ஒரு செய்தியைக் கூறினான்.

வண்ணப்படம் : **வேதா**
படங்கள் : **ஸ்ரீஹரி**



பசியாகிய உணவு!

எஸ்.ராஜகுமாரன்

நாம்
சடலங்களாக இருந்தோம்
உயிரூட்டியது காதல்.

உன்னிடம் பேச நினைத்ததெல்லாம்
மறந்துவிடுகிறது
பார்க்கும்போது.
பார்க்க நினைத்ததெல்லாம்
மறந்துவிடுகிறது
பேசும்போது.

உன்னைப் பார்த்த நாளில்
பிறந்தேன் புதிதாய்
நீ காதல் சொன்ன நாளில்
இறந்தேன் சுகமாய்

நீ ஆழ்கடல்.
மூழ்கிவிட்டால்
எழுவது கடினம்.

உனக்குப் பதில்
இந்த மரத்தைக்
காதலித்திருக்கலாம்


எப்போதும்
எனக்கு முன்பே
காத்திருக்கிறது

நீ
பல நேரம் பசியாகிறாய்
சில நேரம்
உணவாகிறாய்



டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு நித்ய கண்டம் பூரண ஆயுசு. சாம்பலிலிருந்து தூசியைத் தட்டிக்கொண்டு மீண்டும் எழுந்திருக்கிறது.

நடந்து முடிந்த ஆஷஸ் தொடரின் ஐந்து டெஸ்ட் போட்டிகளும் கண்ணுக்கும் மனசுக்கும் மிகச்சிறந்த விருந்து. 2005 ஆஷஸ் தொடர் 20-20 ஆட்டங்களைக் காட்டிலும் பரபரப்பாக இருந்தது. அப்போது இங்கிலாந்து பெற்ற வெற்றிக்கு அடுத்த இரண்டு வருடங்கள் கழித்து பழிக்குப் பழி வாங்கியது ஆஸ்திரேலியா. தன் சொந்த மண்ணில் 5-0 என்கிற கணக்கில் வெற்றி. அந்த நாள்முதல் இங்கிலாந்து மிகவும் பல வீனமாகிப்போனது. ஃபிளிண்டாஃப், பீட்டர்சன் மீது அதிகப் பளு சுமத்தியது. புதிய சாதனையாளர்கள் இல்லாமல் தவித்தது.



* ஆஷஸ் தொடரில் ரசிகர்களின் ஹீரோ...



* ஆல்ரவுண்டர் போதம்



ஆனால், ஆஷஸ் என்றவுடன் இங்கிலாந்து வீரர்கள் எழுச்சி பெற்றுவிடுவார்கள். அதுவும் இந்தத் தடவை பதிலடி கொடுக்க வேண்டிய நிர்பந்தம். முதல் டெஸ்ட்டில் ஒரு விக்கெட் வித்தியாசத்தில் தோல்வியிலிருந்து தப்பியது அவர்களுக்குப் பெரிய உத்வேகத்தை அளித்திருக்க வேண்டும். விளைவு, இன்று ஆஷஸ் கோப்பை அவர்கள் கையில். பெரிய சந்தோஷத்தில் ஒரேயொரு வருத்தம், இனிமேல் ஃப்ளிண்டாஃப் டெஸ்ட் கிரிக்கெட் ஆடமாட்டார்.

'31 வயதில் ஒரு கிரிக்கெட் வீரர் டெஸ்ட் போட்டியிலிருந்து

ரிடையர் ஆக முடியுமா? ''என்னால் முடிய வில்லை. எத்தனை நாள்தான் காயங்களை ஆற்றுவதிலேயே காலம் தள்ளுவது'' என்று பதில் கொடுக்கிறார் ஃப்ளிண்டாஃப். 2005 ஆஷஸ் தொடரில் ஃப்ளிண்டாஃப்தான் ரசி கர்களின் ஒரே ஹீரோ. தம் உச்சகட்டத் திற மையை ஃப்ளிண்டாஃப் வெளிப்படுத்தி யது அந்தத் தொடரில்தான். போத்தமுக்குப் பிறகு இங்கிலாந்து பெற்ற மிகச்சிறந்த ஆல் ரவுண்டர். இப்படியொரு திறமையை வீண டித்துவிடக்கூடாது என்று எண்ணி சென்னை சூப்பர் கிங்ஸ் தோனிக்கு வழங்கியதை விடவும் அதிகத் தொகை (ஏழரை கோடி) பேசி இவரை விலைக்கு வாங்கியது.

2001ஆம் ஆண்டு இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் வந்திருந்தது இங்கிலாந்து அணி. டெஸ்ட் தொடரில் பெரிய தோல்வி அடைந்தது. இதற்காக தம் அறையில் அடைந்துகொண்டு பல மணி நேரங்கள் கண்ணீர் விட்டு அழுதார் ஃப்ளிண்டாஃப். ஆனால், ஒருநாள் போட்டியில் இந்தியா வைக் கலங்கடித்தார். இறுதி ஒருநாள் போட்டியில் இந்தியாவின் வெற்றிக்கு 11 ரன்கள் தேவை என்கிற நிலையில் வெறித் தனமாகப் பந்துவீசி இங்கிலாந்துக்கு வெற்றியைத் தேடித் தந்தார். உடனே அவர் தன் மேல்சட்டையைக் கழற்றிவிட்டு வெற்றியைக் கொண்டாடிய விதம் அதிகக் கவனம் பெற்றது. இதற்குப் பழி தீர்க்கும் விதத்தில் இங்கிலாந்து மண்ணில் நாட் வெஸ்ட் கோப்பையை இந்தியா கைப் பற்றியபோது பதிலுக்கு கங்குலியும் சட்

அன்று போத்தம்... இன்று ஃபிளிண்டாஃப்... நாளை?

-ச.ந.கண்ணன்



டையைக் கழற்றினார்! ''ஒருநாள் போட்டியின் மிகச்சிறந்த வீரர் என்கிற பட்டம் இனி எனக்கு வேண்டும்'' என்கிறார். சாதனை யாளர்களுக்கு எப்போது தாகம் அடங்கியிருக்கிறது!

ஆஷஸ் வழியாக டெஸ்ட் கிரிக்கெட், ஒரு விஷயத்தை அழுத்த மாகவே சொல்லிவிட்டது. ''நண்பர் களே டெஸ்ட் கிரிக்கெட் சாகாது. அன்று போத்தம், இன்று ஃப்ளிண் டாஃப். நாளை இன்னொரு வீரர்!''

குக்கரை அடுப்பிலிருந்து இறக்கிய புஷ்பாவை சண்முகத்தின் திடீர் அறிவிப்பு திகைக்க வைக்கிறது.

''என்ன சொல்றீங்க? உண்ணாவிரதம் இருக்கப் போறீங்களா? நீங்களா? எதுக்கு? ஏன்? எப்போலேருந்து?''

''தொடங்கியாச்சு. சாகும் வரை இருக்கப் போகிறேன்.''

''எ...எ... என்னது? சாகும் வரை உண்ணாவிரதமா? நீங்களா? சாப்பாடு சாப்பிட்டுக் கை கழுவின கையோட முறுக்கு, காராசேவு, ஓமப்பொடின்னு கொறிப்பீங்க. வெறும் காப்பியைக் குடிக்க மாட்டீங்க. கூட மசால் வடை, சீடை, வேர்க்கடலைன்னு பக்கவாத்தியம் இருக்கணும். ராவிலே பசிச்சதுன்னா வாயிலே போட்டுக்க தலைகாணி

ஜாலி ஸ்டோரீஸ்



பக்கத்திலேயே பிஸ்கெட் டின் தயாரா இருக்கணும். நீங்களா உண்ணா விரதம் இருக்கப் போறீங்க? விளையாடாதீங்க.''

''நெஜமா. சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கத்தான் போறேன்.''

''நம்ப முடியலியே? அரசியல் தலைவருங்கதான் தங்களோட பொன்னான உயிரை துச்சமாக மதிச்சு உண்ணாவிரதம் இருப்பாங்க. டிவிக்காரங்க படம் புடிச்சிட்டுக் கிளம்பின உடனே, ஏதானும் சாக்கு போக்கு சொல்லி, பழரசம் குடிச்சுட்டு, உண்ணாவிரதம் வெற்றின்னு முடிச்சுப் பாங்க.''

''அதெல்லாம் எதுக்கு? நா கட்டாயம் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கத்தான் போறேன்.''

''விளையாடாதீங்க. உங்களுக்காக சிறு

கிழங்கு ரோஸ்ட், பச்சை சுண்டைக்காய்க் குழம்பு, கண்டந்திப்பிலி ரசம் எல்லாம் செய்யலாம்னு இருக்கேனுங்க.''

''நீ செய், ஆனா நா சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போறேன்.''

''இதென்ன கூத்து? நான் யாருக்காக சமையல் செய்யணும்? எனக்காகவா?''

''அதெல்லாம் தெரியாது. நிப்பாட்டாம உன் சமையல் வேலையைப் பார். ஆனால் உண்ணாவிரதம் இருக்கத்தான் போறேன்.''

''புரியலியே. உண்ணாவிரதம் இருக்கப் போறேன்னு சொல்றீங்க, அதே சமயம் சமையலையும் செய்னு சொல்றீங்க. தாறுமாறாப் பேசறீங்களே.''

''மார்க்கெட்டுக்குப் போகணும்னியே. போயிட்டு வா. சிறு கிழங்கு கிடைக்குமில்லே?''

சாகும் வரை உண்ணாவிரதம்

ஜே.எஸ்.ராகவன்

திகைப்புடன் சகுந்தலா கடைக்குக் கிளம்புகிறாள்.

''என்னங்க... உங்களுக்காக தேங்காய்ப் பால் கைமுறுக்கும், முந்திரிப் பருப்பு பகோடாவும் வெச்சிருக்கேன். சாப்பிடுங்க.''

சண்முகம் சிரிக்கிறார். ''பைத்தியம். நான் சொன்னது உன் காதிலே விழலையா? நான் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போறேன். நீ கடைக்குப் போயிட்டு வா.''

கடைக்குப் போய்த் திரும்பி வந்த புஷ்பா, சண்முகம் சங்கு சக்கரங்களாக இரண்டு கைகளிலும் தேங்காய்ப் பால் முறுக்கை வைத்துக் கொண்டு மாறிமாறிக் கடித்துக்கொண்டு இருப்பதைப் பார்த்து வியக்கிறாள். அருகில் மசாலா பால் குப்பி.

''அட! அரசியல்வாதிகளையே மிஞ்சிட்டீங்களே. அதுக்குள்ளே உண்ணாவிரதத்தை வெற்றிகரமா முடிச்சிட்டீங்களா? டீவி ஆளுங்க போறதைப் பார்க்கலியே?''

''அவங்க வரலை. ஆஃபீஸ் பியூன் சுப்ரமணிதான் வந்தான். எதுக்கு தெரியுமா? எலியை அடிக்கத்தான். அட! எம்மாம் பெருசு தெரியுமா? நான் திங்க வேண்டிய பலகாரங்களை தினம் கடிச்சுப் போட்டா எனக்குக் கோபம் வராம இருக்குமா? அதைப் போட்டுத் தள்ளாம எதையும் சாப்பிடறதில்லேன்னு சுப்ரமணியை வரவழைச்சேன். பாய்ஞ்சு ஓடற எலியைக் குறிபார்த்து அடிக்கிறதிலே சூரன். நீதான் பிள்ளையாருடைய வாகனம், அடிச்சா பாவம்னு புலம்பிண்டு இருந்தே.''

''அப்போ சாகும்வரை உண்ணாவிரதம்னு சொன்னது நம்ம வீட்டிலே நுழைஞ்ச எலி சாகும் வரைன்னு அர்த்தமா?''

''புரிஞ்சா சரி. சிறுகிழங்கு கிடைச்சுதா? அதென்ன பையிலே? அ! மிளகாய் பஜ்ஜியா? குடு. குடு. சூடாத் தின்னா பிரமாதமா இருக்கும். காப்பியும் குடு. நாக்கிலே நிக்கிற கள் காரத்துக்குப் பின்னே குடிக்கத் தோதா இருக்கும்.'' ●

பாண்டியைக் கலக்கும் 'சாமி'கள்!

தமிழகத்தில் கடந்த நாற்பத்தேழு வருடங்களாக திராவிட இயக்கங்களின் ஆளுகை அமைந்தாலும், பாண்டிச்சேரியில் காங்கிரஸ்தான். அந்த மாநில மக்களுக்கு, காங்கிரஸ் மீது ரொம்பவே மரியாதை. ஆனால் இங்கேயும் கோஷ்டிப் பூசல்கள் உண்டு. இப்போது புதுவை காங்கிரஸைக் கலக்குவோர் இரண்டு சாமிகள்: ஒருவர் மத்திய திட்டம், பாராளுமன்ற விவகாரத் துறை இணையமைச்சர் நாராயணசாமி. இன்னொருவர் முன்னாள் முதல்வர் ரங்கசாமி.

புதுவையில் ஆதி காலத்திலிருந்து காங்கிரஸை வளர்க்கப் பாடுபட்ட பெரியவர் சண்முகத்தின் சிஷ்யர் நாராயணசாமி. காங்கிரஸ் தொழிற்சங்கத் தொடர்பு, வழக்கறிஞர் பணி என்று சுற்றி வந்து கொண்டிருந்தவருக்கு ராஜ்ய சபை உறுப்பினராகும் அதிர்ஷ்டம் அடித்தது. அதை மிகவும் நன்றாகப் பயன்படுத்திக்கொண்டு இரண்டாவது முறையும் தக்கவைத்துக்கொண்டு விட்டார் நாராயணசாமி. தமது தில்லி தொடர்புகளை நன்றாகவே பலப்படுத்திக் கொண்டு மத்திய அமைச்சராகும் வாய்ப்பைப் பெற்றுவிட்டார். மேலிடத் தொடர்பாலும், உள்ளூரில் பரவிய செல்வாக்கின் காரணமாகவும் இன்று பாண்டி காங்கிரஸின் உறுதியான தலைவர். ரங்கசாமியை முதல்வர் பதவியிலிருந்து துரத்துவதற்கு காங்கிரஸில் நடந்த முயற்சிகளுக்கு, பெரிய உந்துசக்தியாக இருந்தவர் நாராயணசாமிதான். இன்று முதல்வர் வைத்திலிங்கம் உட்பட காங்கிரஸ் பிரமுகர்கள் அனைவரும் இவரது பின்னால் அணி வகுக்கிறார்கள். புதுச்சேரி சகல துறைகளிலும் முன்னேற, தமது அமைச்சர் பதவியை நன்றாகவே பயன்படுத்தி மத்திய நிதி பெற்றுத் தருகிறார்.



✱ ரங்கசாமி

நாராயணசாமியின் தலைமைக்குச் சவாலாக இருப்பவர் ரங்கசாமி. 2001ல் பா.ம.க. பாண்டியில் தன்னை வலுப்படுத்திக்கொள்ள முயன்ற போது, காங்கிரஸ் தலைமையால் முன்னிறுத்தப்பட்டார் வன்னியரான ரங்கசாமி. முட்டிக்கும் கீழிறங்கிய தொளதொள கதர் சட்டை, எளிமை, திருமணமாகாத நிலை ஆகியவற்றின் காரணமாக, 'புதுவை காமராஜ்' என்ற பெயர் இவருக்கு வந்து சேர்ந்தது. 'தமது தட்டாஞ்சாவடி தொகுதியில் வீட்டுக்கு ஒருவருக்கு அரசு வேலை பெற்றுத் தந்திருக்கிறார் ரங்கசாமி' என்று சொல்கிறவர்களும் உண்டு. 2006ல் மீண்டும் இவரே முதல்வராக வந்தாலும், இவரைச் சுற்றி உருவான ஒரு கும்பலால் மனிதர் பெயர் கெட்டுப் போயிற்று. விரைவில் இவரை நீக்குவதற்கு புதுச்சேரி



* நாராயணசாமி

காங்கிரஸே ஒன்று திரண்டு விட்டது.

இன்னமும் பெயரளவுக்கு இவர் காங்கிரஸில் தொடர்ந்தாலும், கடந்த பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்யவில்லை. தவிர, இவரது தொகுதியில் காங்கிரஸுக்கு வாக்குகள் குறைந்தும் போய்விட்டன. கடுப்படைந்த காங்கிரஸ் மேலிடம், காரணம் கேட்டு நோட்டீஸ் கொடுத்துவிட்டது. இதனைத் தொடர்ந்து 'ரங்கசாமி பா.ம.க.வில் சேருவார்' என்றும், தனிக் கட்சி தொடங்குவார் என்றும் றெக்கை கட்டிப் பறக்கின்றன வதந்திகள். சமீபத்தில் அறுபதாவது பிறந்த நாளை இவர் கொண்டாடியபோது, காங்கிரஸ்காரர்களைவிட பா.ம.க.வினரே அதிக அளவில் வந்து வாழ்த்தினார்களாம்.

சில மாநிலங்களைப் பார்க்கும்போது இங்கே கோஷ்டிகள் இல்லையென்றுதான் சொல்லவேண்டும். மற்றபடி தனிக்கட்சி தொடங்கும் தலைவர்களை மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். புதுவையில் உலவும் வதந்திகளைப் பற்றி ரங்கசாமியிடம் கேட்டபோது, ''ஏதேதோ சொல்றாங்க; பேசறாங்க. அதுக்கெல்லாம் பதில் சொல்ல முடியுமா?'' என்றார். இதற்கிடையில் புதுவை காங்கிரஸ் என்ற தனிக் கட்சி நடத்திக் கொண்டிருந்த கண்ணன், காங்கிரஸில் இணைகிறார். அவருக்கு ராஜ்யசபாவாம். கண்ணன் இணையும் சூழலில் ரங்கசாமி தனிக்கட்சி அறிவிப்பை வெளியிடலாம் என்று பரபரப்பாக எதிர்பார்க்கப்படுகிறது. தனிக்கட்சி, பா.ம.க.வின் கூட்டு என்று அவரது ஆதரவாளர்கள் திட்டம்போடுகிறார்கள். மதுக்கோப்பைக்குள் மற்றொரு புயல்?

- ஸ்ரீநி

படம்: **ராஜன்**



சனி கொடுப்பார்;

பதவியில் இருப்போர்; இழந்தோர். பெரும் பணக்காரர்; கடைநிலை ஏழை; எவராயினும் தன்னெதிரே வந்து பணிவாக நிற்க வைக்கும் வல்லமை படைத்தவர் சனீஸ்வர பகவான். அதுவும் 'கொடுத்தாக் கொடு. கொடுக்காட்டி போ' என்று விட்டேத்தியாக நின்றிட மாட்டார்கள். அதில் பயம் கலந்த பக்தி இருக்கும்.

சனியைப் போல அள்ளி அள்ளிக் கொடுப்பவரும் இல்லை. துடைச்சு எடுத்து துவளத் துவள ஓட ஓட விரட்டி அடிப்பவரும் இல்லை. அதனால்தான் எல்லோர்க்கும் அவரிடம் பயம் கலந்த பக்தி!

திருநள்ளாறு, தர்ப்பாரண்யேஸ்வரர் ஆலயத்தின் உள்ளே அமைந்திருக்கும் ஸ்ரீ சனீஸ்வர பகவான் சன்னிதி. தர்ப்பாரண்யேஸ்வரர் சன்னிதிக்கும் அம்பாள் சன்னிதிக்கும் இடையில் கோயில் கொண்டுள்ளார் சனீஸ்வரர். சப்தவிடங்க தலங்கள் ஏழினுள், திருநள்ளாறு ஒன்று.

''நளச் சக்கரவர்த்தி இங்கே வந்து சனி பகவானுக்குக் கோயில் கட்ட முயற்சிக்



எவர் தடுப்பார்?!

கும்போது, பொருளாதாரத்துக்கு ரொம்ப கஷ்டப்படுறார். விநாயகர்கிட்ட வேண்டிக்கிறார். பொன்னும் பொருளும் அள்ளித் தர்றார். சனீஸ்வரர் கோயில் கட்டி முடிக்கப்படுகிறது. அதனால்தான் இங்குள்ள விநாயகருக்குப் பெயர் சொர்ண கணபதி. இவ்வாலயத்தில் இளையபெருமான் முருகனுக்கு சிறப்பான தனி சன்னிதி. வள்ளி தெய்வானை வலம் இடமாக விளங்க வடக்கு நோக்கிய வெற்றி மயில் வாகனத்தில் அமர்ந்து கையில் ஞானப்பழத்துடன் திருக்கல்யாணக் கோலத்தில் கல்யாண சுப்பிரமணிய மூர்த்தியாக வடிவம் கொண்டு விளங்குகிறார்.

எல்லா ஊர்லயும் சனி பகவான் சன்னிதி மேற்கு நோக்கிதான் இருக்கும். திருநள்ளாறுல மட்டும்தான் கிழக்கு நோக்கி அனுக்கிரக மூர்த்தியாக விளங்குகிறார்.

பொதுவா சனீஸ்வரனைக் கும்பிட்ட பிறகு கிளம்பிப் போகும்போது அந்த சனீஸ்வரனே கூப்பிட்டாக்கூட திரும்பிப் பார்க்காம விடுவிடுனு கோயிலை விட்டு வெளியேறிடுவாங்க. இங்க அப்படி எல்லாம் கிடையாது. நீங்க திரும்பிப் பார்த்தாலும்

பார்க்காட்டியும் அவரோட வேலையை அவரு செஞ்சுக்கிட்டே இருப்பார். அதுபோல சனீஸ்வரன் கோயிலுக்குப் போயிட்டு பக்தர்கள் வேறெந்தக் கோயிலுக்கும் போகமாட்டாங்க. இங்க அப்படி தேவையில்லை.

இங்கு நவக்கிரகங்களோட சன்னிதி கிடையாது. சனீஸ்வரன்தான் சூப்பர் பவர்.



கோயிலின் இரண்டாம் பிராகாரத்தை ஒன்பது தடவை சுத்தி வந்து வணங்கினாலே, நவக்கிரக தோஷங்கள் எல்லாம் தீர்ந்துவிடும்

ஒன்பது கிரகங்கள்ல சனி கிரகத்தைத் தவிர வேற எதுக்கும் ஈஸ்வரனோட திருநாமம் சேர்க்கப்படலை. இந்தக் கோயில்ல நவக்கிரக சன்னிதி இல்லியேன்னு கவலைப்பட வேணாம். கோயிலின் இரண்டாம் பிராகாரத்தை ஒன்பது தடவை சுத்தி வந்து வணங்கினாலே, நவக்கிரக தோஷங்கள் எல்லாம் நீங்கிடும்.

"துயரங்கள் எல்லாம் விலகினதும் நளச் சக்கரவர்த்தி, இறைவன்கிட்ட மூணு வரம் கேட்கிறார். இறைவனும் அருள்கிறார். நளனுக்கு விமோசனம் கிட்டியதால், இறைவனுக்கு ஸ்ரீ நளேஸ்வரர் என்று பெயர். தம்பதி சமேதரராக நள - தமயந்தி நீராடிய குளம், நளதீர்த்தக் குளம். ஊருக்குப் பேரு திருநள்ளாறு.

வாரத்துல முதல் அஞ்சு நாள் (திங்கள் டு வெள்ளி) தினசரி ஐந்தாயிரம் பேர் வர்றாங்க. சனிக்கிழமை மட்டும் ஐம்பதாயிரம் பேர். ஞாயிறு பத்தாயிரம். சனிக்கிழமை மட்டும் ஏன் அவ்வளவு கூட்டம்? சனீஸ்வரருக்கு ரொம்ப உகந்த நாள் சனிக்கிழமைன்னு ஒரு எண்ணம் பக்தர்கள் கிட்ட இருக்கு. ஒவ்வொரு நாளிலும் 'சனி ஓரை'ன்னு குறிப்பிட்ட நேரம் இருக்கு. அந்த நேரத்துல சனி பகவானை வணங்கினாலே எல்லார்க்கும் உகந்தது.

இங்கு வர்றவங்க ஒரு நாள் தங்கி வழிபடுறது நல்லது. ஆகாயத்தில் உள்ள சனி கோளுக்கும் இந்தத் தலத்துக்கும் தொடர்பு இருக்கிறது. பூமத்திய ரேகையில் சூரியனுடைய கதிர் வீச்சுக்கள் எப்படி அதிகமாக அருகில் இருக்கின்றனவோ, அதேபோல சனி கிரகத்தின் நீள் வட்டப் பாதையில் உச்சமான சனிக் கிரகத்தின் கதிர் வீச்சுகள் திருநள்ளாறு பகுதியில் அதிகமாக அருகில் கிடைப்பதாக வானியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன'' என்கிறார் கோயில் அர்ச்சகர் ராஜா சுவாமிநாத குருக்கள்.

• தமிழன் பூசுகிறான்
கொம்புகளில் கட்சி வண்ணம்
முதலமைச்சர் கனவுகளில் மாடுகள்

• டூரிங் டாக்கீஸில் பார்த்த
பழைய சினிமா படம்
இன்னமும் எச்சில் பீடி வாசனை

• ஒளிப் பூ உதிரும் மேற்கு
விடியலில் பார்க்க முடியுமா
மெல்லச் சாய்கிறது
அந்திப்பொழுது



போன்சாய் கவிதைகள்

பாரதி வசந்தன்



• ஊற்றிய தண்ணீர்
வீடெங்கும் நறுமணம்
தோட்டத்தில் பவழ
மல்லிகை

• விரல்களையா கொளுத்துகிறேன்
தீப்பெட்டியை உரசுகையில்
பற்றி எரியும் மனம்

• ஈரக் கூந்தலுடன்
படியேறினாள்
கரையெல்லாம் செண்பகப் பூ

• யாதும் ஊரே
யாவரும் கேளிர்
சேரியும் ஊரும் தனித்தனியே

• அலைகள் எழுதும்
காற்றின் கவிதை
ரசித்தபடி ஓடுகிறது நதி

• அழகிய கோலம்
காற்றுதான் கலைத்திருக்க
வேண்டும்
சிதறிக் கிடக்கும் முருங்கைப்
பூக்கள்

• யாருமே இல்லை
தாண்டும்போது சிரித்தது
சாக்கடையில் பாதி நிலா

'தேவலோக யானை' நாடகத்தை குழந்தைகளோடு சேர்ந்து வழங்கினார் வேலு சரவணன். (குழந்தைகளுக்கு இவர் வேலு மாமா!) நாடகம் முடிந்ததும் கூட்டம் கைதட்டி ஆர்ப்பரித்தது. கூட்டத்தோடு சேர்ந்து கை தட்டி மகிழ்ந்த ஒரு வி.ஐ.பி., ''ஒன்ஸ்மோர் வேலு மாமா'' என்று கேட்க அவருக்காக மீண்டும் ஒருமுறை நாடகம் நடத்தப்பட்டது. யார் அந்த வி.ஐ.பி?

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிப்பது தொடர்பாக கடலூருக்கு வந்திருந்த அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன்தான். அவரை வரவேற்கும் நிகழ்ச்சியில், சுனாமியால் பாதிக்கப்பட்ட குழந்தைகளால் நடத்தப்பட்ட நாடகம்தான் 'தேவலோக யானை.'

மொழி தெரியாத கிளிண்டனைத் தமது நடிப்பால் கவர்ந்த வேலு மாமாவை, 'தமிழ்நாட்டுக் குழந்தைகளின் இன்றைய

"குழந்தைகளைக் குதூகலமாக வைப்பதே என் வாழ்நாள் லட்சியம்!"

சூப்பர் ஸ்டார்' என்று தைரியமாகவே சொல்லலாம். குழந்தைகளுக்காக பள்ளிகளிலும், பொது இடங்களிலும் ஆயிரக்கணக்கான நாடகங்களை எழுதி நடித்திருக்கிறார் வேலு. ''குழந்தைகளைக் குதூகலமாக வைப்பதே என் வாழ்நாள் லட்சியம்'' என்று சொல்லும் இவரது சொந்த ஊர் புதுக்கோட்டை மாவட்டம் கம்பர்கோயில். பள்ளிப்படிப்பைச் சொந்த ஊரில் முடித்து, அருப்புக்கோட்டையில் பி.எஸ்ஸி. பிஸிக்ஸ் முடித்தார் வேலு. அப்புறம் வேலை வேட்டையில் கிராமத்தைச் சுற்றிக் கொண்டிருந்த வேலுவை, பாண்டி மத்திய பல்கலைக்கழகத்தில் புதிதாகத் தொடங்கப்பட்ட சுவாமி சங்கரதாஸ் நிகழ்கலை பள்ளியில் சேர்த்துவிட்டார் அவரது அண்ணன். ஒரு புதிய வாசல் திறக்கப்பட்டது வேலுவுக்கு.

''பிரபல எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதிதான் துறையின் தலைவர். சமகால உலக நாடகத்துறையில் ஏற்பட்டிருந்த முன்னேற்றங்கள், மேடை நிர்வாகம், இயக்கம், இசை, கதை, வசனம் என்று நாடகத்தின் ஒவ்வொரு பரிமாணத்தையும் எங்களுக்குச் சொல்லித் தந்தவர்

கிளிண்டன்





அவரே. அவரது குருகுலத்தில் ஒரு மாணவனாக இருந்தேன் என்று சொல்வதே பொருந்தும். மாணவர்கள் அனைவரையும் சொந்த மகன்களாகவே நடத்தினார் இ.பா.'' என்கிறார் வேலு.

பல்கலைக்கழகத் தேர்வுக்காக 'ஔரங்கசீப்' என்ற நாடகத்தைத் தயாரித்தார்கள் மாணவர்கள். ஆனால் அதில் நடிக்க வேலுவுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. ''ஸ்டேஜ் நிர்வாகம், லைட்டிங் பார்த்துக்கொள்'' என்று சொல்லிவிட்டார்கள். பின்னர் எழுந்த நடிப்புத் தாகத்தால் 'கடல் பூதம்' என்ற நாடகத்தை எழுதி, அதில் கோமாளியாகவும் நடித்தார் வேலு. ''பிரமாதமாக இருக்கே'' என்று பல்கலைக்கழகம் முழுதும் பாராட்டியது. இந்த நாடகத்தைப் பார்த்த புதுவை கல்வித் துறை இயக்குநர், ''புதுவையில் உள்ள பள்ளிகளில் இந்த நாடகத்தை நடத்த முடியுமா?'' என்று கேட்கவே, ''காத்துக் கொண்டிருக்கிறேன்'' என்று, வந்த வாய்ப்பை ஏற்றுக் கொண்டார். இப்படித்தான் தொடங் கியது வேலு மாமாவின் நாடகப் பயணம். நாடகத் துறையில் பட்டமேற்படிப்போடு நிறுத்தாமல், தஞ்சை தமிழ்ப்பல்கலையில் 'தொடக்கக் கல்வியில் நாடகியம்' என்ற தலைப்பில் ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டமும் வாங்கிவிட்டார். இப்போது இவர் புதுவைவாசி.

''புதுவை பள்ளிகளில் நாடகம் போட முடிவு செய்தபோது நான் உருவாக்கிய குழுதான் 'ஆழி குழந்தைகள் நாடகக் குழு'. என்னுடைய 'கடல்பூதம்', 'குதூகல வேட்டை', 'தேவலோக யானை' போன்ற நாடகங்கள் தமிழகம் மற்றும் புதுவையில் ஆயிரக்கணக்கான பள்ளிகளில் நடத்தப்பட்டன'' என்கிறார்.

கேட்ட ஒன்ஸ்மோர்!



''மக்கள் தொலைக்காட்சியில் கிடைத்த வாய்ப்புக்காக மருத்துவர் ராமதாஸுக்கு என்றைக்கும் கடமைப்பட்டிருக்கிறேன். யார் மூலமாகவோ கேள்விப்பட்டு அவரே என்னை அழைத்து வாய்ப்பு கொடுத்தார். அதன் மூலம் 'வேலு மாமா' ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் போக முடிந்தது. அந்தத் தொடரில் என்னுடன் நடித்த குழந்தைகள் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள்'' என்கிறார் வேலு.

ஐரோப்பியப் பல்கலைக்கழகங்களில் நாடகத் துறையில் வகுப்புகள் எடுக்க அவ்வப்போது பறக்கிறார். ''குழந்தைகளுக்கான படங்கள் தயாரிப்பதே என் லட்சியம்'' என்று சொல்லும் வேலு மாமா, ஃபைனல் பஞ்ச் ஒன்று கொடுத்தார். ''குழந்தைகளைச் செதுக்க எல்லா பள்ளிக்கூடங்களிலும் கோமாளி தேவை.''

- ப்ரியன்

படம் : **ராஜன்**







❀ எல்லுசாமி

தொள்ளைக்காது சுவாமிகள், பாம்படம் பூண்ட பாட்டியின் காதுகளைக் கொண்டவர். எப்போதும் கம்பளி போர்த்தி உலவியவர் கம்பளி சுவாமிகள். நாட்டிய அபிநயம் காட்டி நின்று சுற்றித் திரிந்தவர் அபிநய சரஸ்வதி சுவாமிகள். மண்ணை உருட்டி பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்கியவர் மண்ணுருட்டி சுவாமிகள். மூலிகைச் சாறு கொண்டு செப்புக் காசை தங்கமாக மாற்றிக் காட்டியுள்ளார் ஒரு சித்தர். அந்தத் தங்கக் காசுகளை விற்கச் சொல்லி அதிலிருந்து கிடைக்கும் மதிப்புக்கு, அனைவர்க்கும் அன்னதானம் செய்ய வைத்திருக்கிறார் அந்த சித்தர்.

இத்தகைய சித்தர்கள் பலரும் உலவிய பூமியாக இருந்துள்ளது ஒரு காலத்தில் புதுச்சேரி. அற்புதங்கள் நிகழ்த்திய சுவாரஸ்ய சித்தர்கள் ஒவ்வொருவருக்கும், இங்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

''**வை**த்திக்குப்பத்தில் அக்கா பரதேசி சுவாமிகள், நேரு வீதியில் தொள்ளைக்காது சுவாமிகள், கருவடிக்குப்பத்தில் சித்தானந்த சுவாமிகள், தட்டாஞ்சாவடியில் கம்பளி சுவாமிகள், கிதானந்தகிரி சுவாமிகள், பிருந்தாவனத்தில் கதிர்வேல் சுவாமிகள், எல்லைப்பிள்ளை சாவடியில் அபிநய சரஸ்வதி சுவாமிகள், தென்னம்பாக்கத்தில் (ஜல சமாதி) அழகர் சுவாமிகள், வில்லியனூரில் இராம பரதேசி சுவாமிகள், காராமணிக் குப்பத்தில் சக்திவேல் பரமானந்த குரு சுவாமிகள், முத்தியால் பேட்டை வசந்த நகரில் வேதாந்த சுவாமிகள், கருவடிக்குப்பம் சங்கரதாஸ் சுவாமிகள், ஒதியஞ்சாலை மண்ணுருட்டி சுவாமிகள், ஏம்பலம் சிவப்பிரகாச சுவாமிகள், அம்பலத்தாலயன் மடத்து வீதியில் நாகலிங்க சுவாமிகள், முல்லா வீதியில் முல்லா சாகிப் சுவாமிகள், வைத்திக்குப்பம் நாராயணபரதேசி சுவாமிகள், இடையஞ்சாவடி கணபதி மகான் சுவாமிகள்

சுவாரஸ்ய சித்தர்கள்!



ஆகியோர் ஜீவசமாதி அடைந்த அந்தந்த இடங்களிலேயே ஆலயங்கள் அமைந்துள்ளன!'' எனக் கூறுகிறார் வைத்திக்குப்பம் அக்கா பரதேசி சுவாமிகள் ஆலய அர்ச்சகர் எல்லுசாமி. அக்கா பரதேசி சுவாமிகள் 1870லும், அவரது சீடர் நாராயண பரதேசி சுவாமிகள் 1940லும் ஆலயத்தில் ஜீவசமாதி அடைந்துள்ளனர்.

கடற்கரையிலிருந்து அரை கி.மீ. தூரத்தில் உள்ளது ஆலயம். தாமரை மேல் அமர்ந்துள்ள வெற்றி விநாயகர், இங்கு முதன்மைத் தெய்வம். சகல காரியங்களிலும் வெற்றிபெற பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். மார்கழி மாதத்தில் தினமும் தனுர் லக்னத்தில் கமலவிஜயகணபதியை முப்பத்து மூன்று முறை வலம்வருவோர்க்கு எண்ணிய காரியம் நிறைவேறுவதாகச் சொல்லப்படுகிறது. ஞானக் கடலாம் பழனியாண்டவர் இங்கு மேற்கு நோக்கி பிரதான வாயிலுக்கு நேராக காணற்கரிய உயிரோட்டத்துடன் காட்சியளிக்கிறார்.

கமலவிஜயகணபதி சன்னிதி எதிரே நந்தி, கொடி மரம். அன்னபூரணி, சரஸ்வதி, மகாலட்சுமி, துர்க்கை, பிரம்மா என தனித்தனி சன்னிதி. சண்டிகேசுவரர், தட்சிணாமூர்த்தி மற்றும் கும்பமுனி அகத்தியர் என சன்னிதிகள் துலங்குகின்றன.

இவ்வாலயத்தில் உள்ள சிவலிங்கம், நர்மதை நதியிலிருந்து கொண்டு வரப்பட்ட அற்புத சாலிகிராம வகையினைச் சார்ந்த பாணலிங்கமாம்.

ஞானமார்க்கத்தில் அஷ்டமா சித்திகளை வழங்கும் ஸ்ரீமனோன்மணி அம்மன், இங்கு குடிகொண்டு அருள்பாலித்து வருகிறாள்.

அக்கா பரதேசி சுவாமிகள், தம் எதிரே பெண்கள் வந்தாலும் சரி, ஆண்கள் வந்தாலும் சரி எந்த வயதினராக இருந்தாலும் அக்கா... அக்கா என்றே அழைப்பாராம். அதனால் அவருக்கு அக்கா பரதேசி சுவாமிகள் என்கிற பெயர்.

அவரிடம் சீடர் ஒருவர் தன் கஷ்டங்களைக் கூறி அது தீர்வதற்கான வழியைக் கேட்டுள்ளார். அதற்கு குரு அக்கா பரதேசி சுவாமிகள் தன் கையாலேயே களிமண்ணையெடுத்து ஒரு பிள்ளையார் செய்து தந்து, அதனை தினசரி வணங்கிவருமாறு கூறியுள்ளார். அந்தக் களிமண் பிள்ளையார் நாளாக ஆக வளர்ந்துள்ளது. சீடரின் கஷ்டமும் தீர்ந்துள்ளது. அந்தப் பிள்ளையாரைக் கொண்டு வந்து, சீடர் ஒரு கோயில் கட்டிவிட்டார். தற்போதும் அக்கோயில் புதுவை அண்ணா சாலையில் உள்ளது!

வாசகர் யோசனை:
சிம்மவாஹினி

நியூஸ் ஏ



பீச் ஓரமாக மதில் சுவர் எழுப்பப்பட்டுள்ள ஒரே கடற்கரை அநேகமாக பாண்டிச்சேரிதான். காலையில வாக்கிங் போகிறவர்கள் ஒரு பக்கம், மதில் சுவர் மேல் உட்கார்ந்துகொண்டு அலைகளை ரசிப்பவர்கள் இன்னொரு பக்கம். பீச்சில் தினமும் காலையில் நடைபெறும் விஷயம் மீன் ஏலம். ஏலம் விடுபவர்களும், எடுப்பவர்களும் மெஜாரிட்டி பெண்கள்தான். இங்கே பெண்களுக்கான இட ஒதுக்கீடு 67சதவிகிதத்துக்கும் அதிகம். புதுவையில் உள்ள மற்ற பிரபல பீச்கள்: பாரடைஸ் பீச், செரினிடி பீச், ஆரோவில் பீச்.



பாரதியார், பாரதி தாசனுக்கு அடுத்தபடி பெரிதும் மதிக்கப்படும் மனிதர் ஆனந்த ரங்கம்பிள்ளை. சென்னை பெரம்பூரில் 1709ல் பிறந்த ஆனந்தரங்கம், தன் அப்பா திருவேங்கடம் பிள்ளையுடன் பாண்டிச்சேரி யில் செட்டிலானவர். படிப்படியாக வளர்ந்து



ந்தி பவன்





பாண்டியில் அவசியம் பார்க்க வேண்டிய இடங்களில் ஒன்று பிரெஞ்ச் இன்ஸ்டிடியூட்! இங்கே நடக்கும் தமிழ்ப்பணி குறிப்பிடத்தக்கது. பீரோ பீரோவாகப் பழைய தமிழ் ஓலைச்சுவடிகளைச் சேகரித்து வைத் திருக்கிறார்கள். எண்ண ஆரம்பித்தால் பன்னிரண்டாயிரத்துக்கும் அதிகமாக இருக்குமாம். ஓலைச்சுவடிகளை லெமன் கிராஸ் எண்ணெய் தடவிப் பராமரிப்பதே இவர்களது முக்கியப் பணி. உபரியாக தமிழ் ஓலைச்சவடிகளை பிரெஞ்சில் மொழிபெயர்க்கும் பணியும் நடக்கிறது.



பிரெஞ்சு கவர்னர் ஜெனரலான டியூப்ளேவுக்குத் துபாஷாக பணிபுரிந்தார். 1736 முதல் 1760வரை அவர் எழுதிய டைரிக் குறிப்புகள் வரலாற்றுப் பெட்டகங்கள். ஆனந்தரங்கம் பிள்ளை இன்று 'ரு ரங்கப்பிள்ளை' என்று அழைக்கப்படும் ரங்கப் பிள்ளை வீதியில், 69ஆம் எண்ணுள்ள வீட்டில் வசித்தார்.







* பி.டி.ஜாட்டி



1936 ஆம் ஆண்டில் புதுச்சேரி இந்திய அரசின் ஆளுகைக்குட்பட்டது தொடங்கி, 22 பேர் புதுச்சேரியின் துணைநிலை ஆளுநர்களாகப் பதவியில் இருந்துள்ளனர். இந்தியாவின் துணை ஜனாதிபதியாக இருந்த பி.டி.ஜாட்டி, புதுவையின் துணை நிலை ஆளுநராக இருந்திருக்கிறார். தவிர புதுவை கவர்னராக இருந்தவர்களில் மூவர் பெண்கள். இந்த ஆண்டு ஏப்ரல் முதல் ஜூலை வரை தமிழக கவர்னர் பர்னாலா, புதுவையையும் கூடுதலாகக் கவனித்துக் கொண்டார். நேரு பார்க் பகுதியில் உள்ள புதுவை கவர்னர் மாளிகையின் பெயர் ராஜ் நிவாஸ். பிரெஞ்சு ஆட்சியின்போது கவர்னர் ஜெனரல் வசித்த மாளிகை இது.

தமிழ், இந்தி, ஆங்கிலம், பிரெஞ்ச்... என நான்கு மொழிகளில் நிகழ்ச்சிகளை வழங்கும் ஒரே இந்திய வானொலி பாண்டிச்சேரி அகில இந்திய வானொலிதான். இப்போது இரண்டு தனியார் பண்பலை வரிசைகளும் ஒலிபரப்பாகின்றன.

பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திடமிருந்து புதுவையை மீட்க நடந்த போராட்டத்தில் முக்கியப் பங்காற்றியவர் தோழர் வி.எஸ். (வி.சுப்பையா) 1936ல் தொடங்கி 1954 வரை போராட்டங்களில் ஈடுபட்டு, ஏகப்பட்ட இன்னல்களைச் சந்தித்தவர். இவர் தலைமையேற்று நடத்திய மில் தொழிலாளர் போராட்டமே பின்னாளில் சுதந்திரப் போராட்டமாக வெடித்தது. இவர், கம்யூனிஸ சித்தாந்தங்களில் நம்பிக்கை கொண்டிருந்தாலும் நேரு, காந்தி ஆகியோரிடமும் நல்ல நட்பு கொண்டிருந்தார். தொழிலாளர்களுக்கு தினசரி வேலை நேரம் குறித்த கோட்பாடு இந்தியாவிலேயே இல்லாத காலகட்டத்தில், பிரெஞ்சு அரசுடன் போராடி எட்டுமணி நேர வேலை என்ற கொள்கையை அமல்படுத்தச் செய்தவர். பாண்டிச்சேரியிலிருந்து பிரெஞ்சு பாராளுமன்றத்துக்குப் போட்டியிட்டு, ஜெயித்து பாரிஸ் சென்று, அங்கே 'பிரெஞ்சு ஏகாதிபத்தியம், புதுவையிலிருந்து வெளியேற வேண்டும்' எனக் குரல் கொடுத்தவர்.

- மௌலி



பாண்டி பா.ம.க.வின் எதிர்காலம்?

1999ல் தி.மு.க., பா.ஜ.க. அணியோடு சேர்ந்து கணிசமான பாராளுமன்றத் தொகுதிகளைக் கைப்பற்றிய பா.ம.க., 2001ல் சட்டமன்றத் தேர்தலில் தன் நிலைப்பாட்டை வழக்கம் போல் மாற்றிக்கொண்டு அ.தி.மு.க., காங்கிரஸ் அணியில் இணைந்து விட்டது. அதற்குக் காரணமே, புதுவையில் ஆட்சியில் பங்கேற்கும் நோக்கம்தான். புதுவையில் காங்கிரஸ் ஒரு பலமான சக்தி. தங்களுடன் பா.ம.க. இணைவதற்குக் காரணத்தைப் புரிந்துகொண்ட காங்கிரஸ், புதுவையைப் பொறுத்தமட்டில் ''அ.தி.மு.க. - பா.ம.க. கூட்டணியில் தாங்கள் இல்லை'' என்று சொல்லி தனித்துப் போட்டியிட்டது. அ.தி.மு.க. துணையுடன் பதினொரு சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிட்ட பா.ம.க. ஒரு இடத்திலும் வெற்றிபெறவில்லை. காரணம், அ.தி.மு.க.வுக்கே அங்கே செல்வாக்கு கிடையாது. இந்த நிலையில், 2004ல் மீண்டும் தி.மு.க. கூட்டணிக்கு வந்து, பா.ம.க. புதுவை பாராளுமன்றத் தொகுதியைப் பெற்று விட்டது. காங்கிரஸும் கூட்டணியில் இருந்ததால் வெற்றிபெற்றார் பா.ம.க. வேட்பாளர் டாக்டர் ராமதாஸ். தொடர்ந்து 2006 சட்டமன்றத் தேர்தலிலும், தி.மு.க. காங்கிரஸ் கூட்டணியில் இருந்ததால் அதிக இடங்களில் போட்டியிட வாய்ப்பு கிடைக்கவில்லை. இரண்டு இடங்களில் மட்டுமே பா.ம.க. வெற்றிபெற்றது. 2009 பாராளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வுடன் இணைந்து, போட்டியிட்ட பா.ம.க. மண்ணைக் கவ்வியது. தோல்வியடைந்த டாக்டர் ராமதாஸும் மீண்டும் பேராசிரியர் வேலைக்குச் சென்றுவிட்டார். பாண்டி பா.ம.க.வில் பெயர் சொல்லும்படி ஒரு பிரமுகர்கூட இல்லை. 2011ல் கட்சி காணாமல் போய்விடுமோ என்பதுதான் இப்போது பேச்சு. ''சமீபத்திய எம்.பி. தேர்தலில் பாண்டி பகுதிகளில் உள்ள 23 சட்டமன்றத் தொகுதிகளில் காங்கிரஸ் வேட்பாளர் பெற்ற லீடிங் பதினெட்டாயிரம்தான். ஒரு தொகுதிக்கு சுமார் எழுநூறு வோட்டுதான் வித்தியாசம். காங்கிரஸ் தி.மு.க. கூட்டணி வாரியிறைத்த பணத்துக்குக் கிடைத்த வோட்டுதான் இது. இதை வைத்துப் பார்க்கும்போது கடுமையாக உழைத்தால் 2011ல் எங்களுக்கு கணிசமான வாய்ப்பு இருக்கிறது. எங்கள் ஐயா மருத்துவரே நேரடியாக பாண்டியில் கட்சி வளர்ச்சியைக் கண்காணிக்கிறார்'' என்கிறார் பா.ம.க. சட்டமன்ற உறுப்பினர் அனந்தராமன்.



மாங்கனி



மதுரைன்னா மீனாட்சி. காஞ்சிபுரம்னா காமாட்சி. காரைக்கால்னா எல்லார்க்கும் மொதல்ல நினைவுல வந்து நிக்கறவங்க காரைக்கால் அம்மையார். எந்தக் காலத்துலயும் காரைக்காலோட சிறப்புகள்ல, காரைக்கால் அம்மையாருக்கு அடுத்தபடிதான் மற்ற விஷயங்கள்.

சோமநாதர் கோயில் அருகே அமைந்துள்ளது, காரைக்கால் அம்மையார் ஆலயம். ''பல நூற்றாண்டுகளாக சின்னஞ்சிறு கோயிலாக இருந்து வந்துள்ளது அம்மையார் கோயில். என்னோட தாத்தா கே.மலையப்பெருமாள் பிள்ளை அந்தக் காலத்திலேயே மலேசியா சென்று வியாபாரம் செய்து பெருஞ்செல்வந்தராக தாய்நாடு திரும்பியவர். காரைக்கால் வந்து சேர்ந்ததும், உடனடியாக அவர் செய்த வேலை அம்மையாருக்குப் பெரிதாகக் கோயில் கட்டியதுதான். அவரு காலத்திலேயே பத்துநாள் விழாவா 'மாங்கனி விழா'வைத் தொடங்கி நடத்தி வெச்சாரு. அவருக்கப்புறம் தொடர்ந்து மாங்கனி விழாவுல பங்கெடுத்து வர்றோம். முதல் மாங்கனித் திருவிழா நடைபெற்றது 12.06.1927'' என்று பெருமிதப்படுகிறார் ஜி.மலையப்பெருமாள்.

இந்து - முஸ்லிம் - கிறிஸ்தவர் என எவ்வித வேற்றுமையும் இல்லாது, அனைத்து சமூக மக்களும் நேசத்துடன் ஒன்றிணைந்து மதநல்லிணக்கத்தோடு நடத்தி வருவது மாங்கனி விழா. காரைக்கால் அம்மையார் குறித்தும், மாங்கனி திருவிழா பற்றியும் ஈடுபாட்டோடு சொல்ல வருகிறார் காரை பெரும்புலவர் ஒருவர்.

''காரைக்கால் அம்மையாரோட உண்மையான பேரு புனிதவதி. நாகை பெருவணிகன் பரமதத்தனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு இல்லறம் தொடங்கறாங்க. காலங்கள் நகருது. ஒரு மாங்கனி விஷயத்துல தன்னோட மனைவி சாதாரணப் பெண் அல்ல. தெய்வத்தன்மை கொண்டவங்கனு உணர்றாரு பரமதத்தன்.

ஒரு நாள் மதிய உணவுக்கு



முன்பாக ரெண்டு மாங்கனிகளை வீட்டுக்குக் கொடுத்தனுப்புறாரு. சமையல் ஆகிட்டிருக்கு. ஈஸ்வரன் பிட்சாடனராக வேடம் பூண்டு, மதிய உணவு கேட்டு வாசல்ல நிக்கிறாரு. வந்திருக்கறது ஈஸ்வரன்னு, புனிதவதிக்குத் தெரியாது. வீட்டுக்குள் வரவழைத்து உணவு படைக்கிறார். காய்கறி எதுவுமில்லை. அதனால, கணவன் தந்தனுப்பியதில் ஒரு மாங்கனியைக் கொண்டாந்து பிட்சாடனருக்குப் படைக்கிறார். பிட்சாடனர் வேடத்தில் வந்திருக்கும் ஈஸ்வரன், உணவருந்திவிட்டு வாசல் வழியே சென்று . மறைந்து போகிறார்.

அன்று மதியம் உணவின் போது கணவன் பரமதத்தனுக்கு மீதமிருக்கும் ஒரு மாங்கனியை வைக்கிறாள். அதனை உண்ட கணவன், 'இன்னொன்று இருக்குமே... கொண்டு வந்து வை' என்கிறான். இன்னொரு மாங்கனிக்கு என்ன செய்வது? திகைக்கிறாள். உள் அறைக்குச் சென்று மனம் உருகுகிறாள். அவள் கையில் ஒரு மாங்கனி. அதனைச் சுவைத்த பரமதத்தனுக்குச் சந்தேகம். 'நிச்சயம் நாம் அனுப்பியது இது அல்ல. இந்த மாங்கனி தேவ அமுதம் போல இனிக்கிறதே.' வேண்டுமென்றே, 'இன்னொன்று கொண்டு வா' என மனைவியைப் பணிக்கிறான். மீண்டும் உள்ளே சென்று மனம் கசிகிறாள். மீண்டும் ஒரு மாங்கனி கிடைக்கிறது. கணவனிடம் நடந்தவற்றைக் கூறுகிறாள். 'இவள் பெண் அல்ல; தெய்வம்' என உணர்கிறான் பரமதத்தன்.



கணவன் தந்து அனுப்பிய மாங்கனியை பிட்சாடனருக்குப் படைத்தார் புனிதவதி!

வெளியூர் போகிறான். மதுரைன்னு சொல்றாங்க. வியாபாரம் செய்

திருவிழா!



றான். செல்வம் குவியுது. ஒரு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கறான். பெண் குழந்தை பிறக்குது. முதல் மனைவி பேரையே அதுக்கு வைக்கிறான். இதெல்லாம் கேள்விப்படுற புனிதவதி குடும்பத்தார் புனிதவதியையும் அழைச்சுட்டு மதுரை நோக்கிப் போறாங்க. நகர எல்லைக்கு முன்பாக வந்து புனிதவதியைச் சந்திக்கிறான் பரமதத்தன். தன்னோட புது மனைவி, மகளோட சாஷ்டாங்கமா புனிதவதி பாதத்துல விழுந்து வணங்குகிறான். தெய்வமா நெனைச்ச கணவனே தன்னோட கால்ல விழுந்ததுக்கப்புறம் இந்த உடல் அழகு தேவையில்லைனு நெனைக்கிறாங்க புனிதவதி. எலும்புருவம் அடையறாங்க. அந்த எடத்துலேருந்து திருவாலங்காடு வரைக்கும் தலையால நடந்து சென்று, ஈஸ்வரனின் மேலுலகம் அடைவதாக ஐதீகம்!

மூணு நாள் முக்கிய திருவிழா. இப்ப முப்பதுநாள் திருவிழாவாகக் கொண்டாடப்படுது. ஒவ்வொரு வருஷத்துலயும் ஆனி மாசம் திருக்கல்யாணம் முதல் நாள். மாங்கனி இறைக்கும் மாங்கனி விழா ரெண்டாம் நாள். காரைக்கால் அம்மையார் காட்சி தர்றது மூணாம் நாள். முப்பது நாள் திருவிழாக் கோலம் பூண்டிருந்தாலும், அந்த மாங்கனி இறைக்கப்படும் நாளன்று நகர வீதிகள்ல பக்தர்கள் கடல் போல நெறைஞ்சிருப்பாங்க.

ஆனி மாசம் பௌர்ணமி தினத்தன்று, அமுது படையல் மாங்கனி விழா. காலைல பத்து மணிக்கு பிட்சாடனர் வீதியுலா கிளம்பிடுவார். ஒவ்வொரு வீட்லயும் அவருக்கு அமுது படைப்பாங்க. ஒவ்வொரு வீதி வழியா பிட்சாடனர் வீதியுலாவுல, சுவாமி கடந்து போனதுக்கப்புறம் ஒவ்வொரு வீட்டு மாடியிலேருந்தும் மாங்கனிகளை வீதியில இறைப்பாங்க.

காலைல பத்து மணிக்கு ஆரம்பிக்கற மாங்கனி இறைப்பு, மாலை ஆறு மணி பிட்சாடனர் வீதியுலா முடியற வரைக்கும் தொடர்ந்து நடந்துக்கிட்டே இருக்கும். இதுல என்ன முக்கிய விஷயம்னா, காரைக்கால்ல இஸ்லாமியர்கள் பரவலா இருக்காங்க. அவங்களும் இந்த மாங்கனி விழாவுல பங்கேற்கிறாங்க!'' என்கிறார். ○





விருது போலீஸ்!

பாண்டிச்சேரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவலராகப் பணியாற்றும் ராஜவேணி, 2008ம் ஆண்டுக்கான ஜனாதிபதி போலீஸ் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்ட பெண் போலீஸ். சொந்த ஊர் நெல்லிக்குப்பம். முப்பதாண்டுகளுக்கு மேலாக பாண்டிச்சேரி காவல்துறையில் பணியாற்றி வரும் இவர், ஏற்கெனவே 1980ல், சிறந்த பெண் காவலர் விருதும், 2004ல் பாண்டிச்சேரி முதலமைச்சரது காவல்துறை பதக்கமும் பெற்றவர். கணவருக்கு பாண்டிச்சேரி அரசாங்கத்தில் உத்தியோகம். மகள் டாக்டர், மகன் காரைக்காலில் ஆசிரியர்.

காக்கிச் சீருடை அனுபவம் பற்றிக் கேட்டபோது, "78ஆம் ஆண்டு ஒரு அயல்நாட்டுப் பெண்மணியின் வீட்டில் சுமார் 20 பவுன் நகை காணாமல் போய்விட்டது. அவர் வீட்டு வேலைக்காரி மீது சந்தேகம் என்றாலும், அவர் கடுமையாக மறுத்தார். நான் அந்த வேலைக்காரப் பெண்மணியிடம் நம்பிக்கையூட்டும் விதமாகப் பேசி விசாரணை நடத்தினேன். கடைசியில் திருட்டை ஒப்புக்கொண்டார். அவர் கொடுத்த தகவலின்பேரில், நகைகளை மீட்டேன். இன்னொரு சமயம். ஒரு பள்ளிக்கூடப் பெண்ணை ஈவ் டீசிங் செய்துகொண்டிருந்த சிலரைத் தைரியமாகப் பிடித்து, அடித்து ஸ்டேஷனுக்கு இழுத்துவந்து கேஸ் போட்டேன். இதெல்லாம் மறக்க முடியாதவை" என்கிறார்.



- மௌலி



''என் வாழ்வில் மறக்க முடியாத நாள் 1975 அக்டோபர் 3. புதுவை தாகூர் அரசு கலைக் கல்லூரியில் தமிழ்த் துறையில் விரிவுரையாளராகச் சேர்ந்த தினம். அன்றுதான் நசீமாவைச் சந்தித்தேன். அப்போ அவங்க நசீமா கிடையாது; சரோஜினி. பணியில் என்னை விட மூன்று வயது மூத்தவர். முதல் சந்திப்பிலேயே காதல்.

என் சிறுகதைகளை வாசித்திருந்த சரோஜினி, என் பெயரைப் படித்துவிட்டு வயதானவன் என நினைத்திருக்கிறார். பணியில் சேர்ந்த முதல் நாளன்று பெயரைச் சொல்லி நான் அறிமுகம் ஆனபோது, அவரது விழிகள் வியப்பில் விரிந்தன. அதில் நான் வரைந்திராத, வாசித்திராத காதல் வரிகள்'' என்கிறார் சாயபு மரைக்காயர். பேரறிஞர் அண்ணா கலைக்கல்லூரியின் தமிழ்த்துறைப் பேராசிரியர்.

''சூழ்நிலையின் பொருட்டு அவரது வீட்டில் தங்கி இருவரும் தினசரி கல்லூரி சென்று வந்தோம். மலர்ந்த காதல் வளர்ந்தது. அந்த வருட ரம்ஜான் நோன்பு வந்தது. நான் விரதம் கடைப்பிடித்தேன். சரோஜினியும் ரம்ஜான் நோன்பு நோக்கத் தொடங்கினார். அதிகாலைக்கு முன்னரே எழுந்து 'சகர்' தயாரிப்பது, விரதம் கடைப்பிடிப்பது, மாலை நேரத்தில் நோன்புக் கஞ்சி குடிப்பது என பிரமிக்க வைத்தார். இந்து பெண், நோன்புக் கஞ்சி குடிப்பதும் 'சகர்' உணவு உண்பதும் என்னை உறக்கமற்று ஆழ்த்தின.

இந்த உறவுக்கு இல்லறம் ஒன்றே சிறந்தது என்ற முடிவுக்கு இருவரும் வந்துவிட்டோம். இருவர் வீட்டுத் தரப்பிலும் தொடக்க நிலையில் எதிர்ப்பு இருந்தபோதிலும், எங்களின் இதய வலிமையை (காதலில்) உணர்ந்து, இருதரப்புச் சம்மதமும் இலகுவாகக் கிடைத்தது. இஸ்லாம் மார்க்கத்தை மனதார ஏற்று, சரோஜினி, நசீமாபானுவாகத் தம்மை வெளிப்படுத்திக் கொண்டார்.''

''இரு வீட்டார் வாழ்த்துக்களுடன் 1978ல் திருமணம். மூன்று நாள் விழா. முதல் நாள் உவமைக் கவிஞர் சுரதா தலைமையில் கவியரங்கம். இரண்டாம் நாளும் மூன்றாம் நாளும் வாழ்த்தரங்கம், கருத்தரங்கம், நாடகம், கலை நிகழ்ச்சிகள்.

கடந்த இருபத்தைந்து

''காதல்



வளர்த்தோம்!”

வருடங்களாக ஒரே கல்லூரியில் ஒரே துறையில் அடுத்தடுத்த இருக்கைகளில் பணி. இது எல்லோர்க்கும் கிட்டிடுமா என்ன? அதனால் நாங்கள் தினந்தோறும் காதல் வளர்க்கிறோம். இஸ்லாமிய இலக்கியம், குழந்தை இலக்கியம், நகைச்சுவை இலக்கியம் என புத்தகப் பணி தொடர்கிறது'' என்று சாயபுக்கு ஈடு கொடுத்து காதல் பேசுகிறார் நசீமா பானு (எ) சரோஜினி.

கடந்த இருபத்தைந்து வருடங்களாக ஒரே கல்லூரியில் ஒரே துறையில் அடுத்தடுத்த இருக்கைகளில் பணி. இது எல்லோர்க்கும் கிட்டிடுமா?

தமிழ்நாட்டில் பள்ளிவாசல் (புதிதாக) திறப்பு விழாவில், பெண்கள் நிகழ்ச்சியில் நசீமாபானுதான் இப்போதும் சிறப்புரை. இதுவரை எழுபத்தைந்து புதிய பள்ளிவாசல் திறப்புவிழா நிகழ்ச்சிகளில் பேசியுள்ளார்.

''பொதுவாக, இஸ்லாமியக் குடும்பத்தில் ஏதேனும் ஒரு வியாபாரம் செய்து பெருஞ்செல்வம் திரட்டவே விரும்புவார்கள். எங்கள் குடும்பம் வேறுபட்டது. எங்கள் குடும்பத்தில் ஏழு பேர் தமிழ் படித்தவர்கள். அதில் ஐந்து பேர் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர்கள். இரண்டு பேர் மேனிலைப்பள்ளி தமிழாசிரியர்கள்.

என் தாத்தா அமுதகவி சாயபு மரைக்காயர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் சிறந்த நூறு புலவர்களில் அவரும் ஒருவர்.'' தமது பரம்பரை இலக்கிய ரகசியம் உடைத்தவர், மனைவி நசீமா பானுவைப் பற்றியும் கூறினார்.



''சரோஜினியாகப் பிறந்து வளர்ந்து தமிழ் பயின்று பேராசிரியையாகப் பணியாற்றி, பின்னர் நசீமாபானு எனப் பெயர் மாற்றம் பெற்றவர், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் தாய் வழி பேத்தி.

இரு வேறு சமூகங்களைச் சேர்ந்த, தமிழ்ச் சான்றோர்களின் வழித்தோன்றல்களான நாங்கள், முதலில் தமிழ் மீது காதல் கொண்டோம். பின்னர் ஒருவர் மீது ஒருவர் காதல் கொண்டோம். இந்த இரு வகைக் காதலுமே வளர்ந்து கொண்டே இருக்கிறது!'' எனக் கூறுகின்றனர் இந்தக் காதல் தம்பதி. ●

முஸ்லிம் கட்டிய முருகன் கோயில்!

"எங்க ஊர்ல முஸ்லிம் ஒருத்தரு, முருகன் கோயில் கட்டியிருக்கார், அவர் பேர் கௌஸ். அவரோட பேரைச் சேர்த்தது தான் கௌசிக பாலசுப்பிரமணிய சுவாமி கோயில். இப்ப அவரோட தம்பிதான் கோயிலை நிர்வகிச்சு வர்றாரு. வந்து பார்க்கிறீங்களா?'' விஷயத்தைச் சொன்னவரே நம்மை அங்கே அழைத்துப் போனார்.

ரயிலடி பக்கத்துல மெயின் ரோட்டுல இருக்கு கௌசிக பாலசுப்பிரமணிய சுவாமி கோயில். இந்து ஆகம முறைப்படி, முஸ்லிம் ஒருத்தர் கட்டிய முருகன் கோயிலைப் பார்த்ததும் பிரமிப்பா தோணிச்சு. இரண்டாயிரம் சதுர அடி பரப்புல எழில் மிளிரக் கட்டப்பட்டிருக்கு கோயில். பார்க்கவும் கேட்கவுமே ரொம்ப சந்தோஷமா இருக்கு.

கௌஸ் பாய் குடும்பத்தில் அண்ணன் - தம்பி நாலைஞ்சு பேரு. கௌஸ்க்கு முருகன் மேல அதீத பக்தி. ஆரம்பத்துல சின்ன முருகன் சிலைய வீட்ல வெச்சு வணங்கியிருக்காரு. வீட்ல யாரும் எதுவும் சொல்லலை. அப்புறம் என்ன நெனைச்சாரோ தெரியலை. தன்னோட இந்து நண்பர் ஒருத்தர் வீட்ல முருகன் - வள்ளி - தெய்வானை சிலைகளை வெச்சு வழிபட ஆரம்பிச்சார்.



திருவிழா நாள்ல ஒரு பெண் மீது அருள்வந்திருச்சாம். ஒரு குறிப்பிட்ட இடத்துல அந்தச் சுவாமி சிலைகளைக் கொண்டு போய் வைங்கன்னு உத்தரவு! அந்த இடத்துக்குப் போய்ப் பார்த்தா, அங்கே துளசி முத்துமாரியம்மன்னு சின்ன கோயில். பக்கத்துல நிறைய காலியிடம். முருகன் - வள்ளி - தெய்வானை சுவாமி சிலைகளை அந்தக் காலி மனையில தற்காலிகமா வெச்சுக் கும்பிட்டு வந்தாங்க.

அந்தக் காலி மனையில கோயில்



கௌஸ்

கட்டிக்க புதுச்சேரி நகராட்சி அனுமதி தந்துச்சு. சுற்றுச்சுவர் ராஜகோபுரத்தோட கோயில் எழுப்பப்பட்டது. முருகன் - வள்ளி - தெய்வானை கற்சிலைகளைப் பிரதிஷ்டை செய்து கோயில் கட்டப்பட்டிருக்கு. ஆறடி உயர வள்ளி தேவசேனா கற்சிலைகள் மகாபலிபுரத்துலேருந்து கொண்டு வரப்பட்டிருக்கு.

ஸ்ரீதையல் நாயகி அம்மன் சன்னிதி. விநாயகர், மகாலட்சுமி, ஸ்ரீதேவி, பூதேவியுடனான பெருமாள், உற்சவ பெருமாள், வைத்தியநாத சுவாமி போன்ற, சிறிய, அதே நேரத்தில் அழகிய சன்னிதிகள் இங்கு அமைந்துள்ளன. வீரஆஞ்சநேயர், துர்க்கை, வீரபாகு என சன்னிதிகள் துலங்குகின்றன.

''ஆபரணங்கள் செய்யறதுதான் எங்கள் குடும்பத் தொழில். சின்ன வயதிலிருந்தே என் அண்ணார் கௌஸ்க்கு முருகன் மீது அலாதி பக்தி. கோயில் கட்டி கும்பாபிஷேகம் நடத்தி முடித்தார். கடைசியாக 2002ல் குடமுழுக்கு நடத்தப்பட்டது. 2003ல் என் அண்ணார் மரணம் அடைந்து விட்டார். அவருக்குப் பின் கோயில் நிர்வாகம் பராமரிப்புப் பணிகளை நான் செய்து வருகிறேன்!'' என்கிறார் முகமது அலி.

வாசகர் யோசனை: **உமையாள் ரவி**



நன்றி... நன்றி... நன்றி...

பாண்டிச்சேரி சிறப்பிதழைச் சிறப்பாகத் தயாரிக்க ஆலோசனை வழங்கி மலைபோல் கடிதங்கள் குவிந்தன. அதில் தேர்ச்சியான தகவல்கள், நம்பகத் தன்மையான விவரணங்கள், படங்கள்... என அசத்திய வாசகர்களின் பட்டியல்தான் இது. இவர்களின் உதவியால்தான் இந்த இதழைச் சிறப் பாகத் தயாரிக்க முடிந்தது. அவர்களுக்கு சபாஷ் சல்யூட்!

(ஆர்)

'மீறல்' இளங்கவி அருள் ● எஸ்.பாஸ்கரன் ● அ.யாழினி பர்வதம் - சென்னை ● எஸ்.விஜயலட்சுமி - நயினார் மண்டம் ● உமையாள் ரவி ● கமலா ராஜசேகரன் - பொள்ளாச்சி ● ஜி.நிலா - சென்னை - 18 ● புதுவை.செ.ராமலிங்கம் ● பி.தண்டபாணி - பாண்டிச்சேரி -1 ● சிம்மவாஹினி - வியாசர் காலனி ● மல்லிகா அன்பழகன் ● மாலதி மணியன் - ரெட்டியார் பாளையம் ● சையத் - புதுடெல்லி ● பாவலர் வ.பழனி - குயவர்பாளையம் ● புதுவை ந.கீதாராணி - இலாசுப் பேட்டை ● புதுவை பிரபா ● நிகில் முத்தையா - நெல்லித்தோப்பு ● கே.பால சுந்தரி - மாங்குடி ● வி.பி.கண்ணன் - நாகை ● எஸ்.ஏ.சையத் தஸ்தகீர் - செஞ்சி ● பெ.மார்ட்டின் ஜோசப் ● புதுவை சந்திரஹரி.

'ஸ்லம்டாக் மில்லியனர்' படத்துக்காக இரண்டு விருதுகளைப் பெற்ற இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானைக் கௌரவிக்கும் விதமாக, 'தமிழா ஆஸ்கர் தமிழா' என்றொரு இசை ஆல்பம் வெளியீட்டு விழா சமீபத்தில் நடந்தது. வழிகாட்டுதல், சுபிட்சம், கொண்டாட்டம் என்று அமைந்த இந்த ஆல்பத்துக்கான பாடல்களை பொன்.முருகேசன், ராஜா, சந்திரசேகர், பாலசுப்பிரமணி, ரிச்சர்ட் நாதன் ஆகியோர் எழுதியுள்ளனர். இசை : ஜே.பால் ரோட்னி.



துக்கடா... பக்கோடா...



நல்ல படங்களைத் தயாரிக்க ஒரு புதிய முயற்சியை மேற்கொண்டிருக்கிறது 'கோலம்' அமைப்பு. நபருக்கு 500 ரூபாய் வீதம், சில ஆயிரம் பேர் ஒரு டி.வி.டிக்கான முன்பதிவு செய்தால், வருடத்துக்கு நான்கு படங்களுக்கு உத்தரவாதம் அளிக்கிறது இந்த அமைப்பு. எழுத்தாளர் ஞாநியை நிர்வாக அறங்காவலராகக் கொண்ட இந்தக் 'கோலம்', வீடு தேடி வரும் சினிமா இயக்கம்தான். இதன் தொடக்க விழாவில், இயக்குநர்கள் பாலசந்தர், மகேந்திரன், பாலுமகேந்திரா ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்தினர்.



சென்னை மாநகரின் முதல் மேயர்; எம்.எல்.சி.; எம்.எல்.ஏ.; அமைச்சர் என்று பல பதவிகளை வகித்தவர். அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கும் சிறப்புக்கும் பெருந்தொண்டு ஆற்றியவர். சிறந்த தொழில் அதிபர்... இப்படி பன்முகத் தோற்றம் கொண்ட ராஜா சர்.முத்தையா செட்டியாரின் வாழ்வில் நடந்த முக்கிய நிகழ்வுகள், ஓவியங்களாக்கப்பட்டு ஒரு கண்காட்சி நடைபெற்றது. ஒரு தனிநபர் வாழ்வின் சம்பவங்கள் ஓவியமாகி கண்காட்சி நடப்பது இதுவே முதன்முறை எனலாம்.

- அநிருத்

சர்ச்சை

எல்.கே.அத்வானி, பாகிஸ்தானுக்குச் சென்றபோது முகம்மது அலி ஜின்னாவைப் பற்றி உயர்வாகப் பேசியது பா.ஜ.க.வில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதனால் பா.ஜ.க. தலைமை பதவியை ராஜினாமா செய்வதாகக்கூட அத்வானி அறிவிக்க நேர்ந்தது. அப்போது அத்வானிக்கு ஆதரவாக குரல்கொடுத்தவர் ஜஸ்வந்த் சிங். இப்போது சரித்திர வட்டம் ஒரு சுற்றுக்கு வந்துவிட்டது. 'ஜின்னா: இந்தியா, சுதந்திரம், பிரிவினை' என்ற தம்முடைய லேட்டஸ்ட் புத்தகத்தில் ஜின்னா பற்றி ஜஸ்வந்த் சிங் குறிப்பிட்டுள்ள விஷயங்கள் மீண்டும் பெருத்த சர்ச்சையைக் கிளப்பிவிட்டன. இப்போது அத்வானி, ஜஸ்வந்த் சிங்குக்கு ஆதரவுக் கரம் நீட்டவில்லை; மாறாக, கட்சியிலிருந்தே நீக்கிவிட்டார்கள். அதுவும் எப்படி? ஃபோனில் தகவல் சொல்லி.




* புத்தகத்தை வெளியிடும் அத்வானி...

புத்தகம் மூலம் ஜஸ்வந்த் சிங் சர்ச்சை கிளப்புவது இது முதல் தடவை அல்ல. சில ஆண்டுகளுக்கு முன்னால் 'எ கால் டு ஹானர்: இன் சர்வீஸ் ஆஃப் எமர்ஜென்ட் இந்தியா'' என்று ஒரு புத்தகம் எழுதினார். அதில், ''நரசிம்மராவ் பிரதமராக இருந்த காலகட்டத்தில் பிரதமர் அலுவலகத்திலேயே ஒரு நபர் இருந்தார். அவர் இந்தியா நடத்த இருந்த அணுகுண்டு சோதனை பற்றிய ரகசியங்களை அமெரிக்காவுக்குத் தெரிவித்துக் கொண்டிருந்தார்'' என்று குறிப்பிட்டிருந்தார். அந்த ரகசியத்தை லீக் செய்த நபரை 'பிரதமர் அலுவலகத்தின் மரு' என்று வர்ணித்திருந்தார். அதற்கு உடனே, ஆட்சேபணை தெரிவித்த பிரதமர் மன்மோகன்சிங், 'மருவின் பெயரைப் பகிரங்கமாகச் சொல்லத் தயாரா?' என்று கேள்வி எழுப்பினார்.

பிரதமர் அலுவலகத்துக்கு இதுபற்றி கடிதம் எழுதிவிட்டதாக ஜஸ்வந்த் சிங் அறிக்கை வெளியிட, அதற்குப் பதிலளித்த மன்மோகன்சிங், ''ஜஸ்வந்த் சிங் அனுப்பியதாகக் கூறும் கடிதத்தில் எழுதியவரது கையெழுத்தும் இல்லை; மேலும் 'மரு'வின் பெயரை அவர் தெரிவிக்கவும் இல்லை'' என்றார். அத்தோடு மருவை பா.ஜ.க.வும் காங்கிரஸும் மறந்துவிட்டன.

ராஜஸ்தான் மாநிலத்தில், பார்மர் மாவட்டத்தில் ஜசோல் என்ற கிராமத்தில் பிறந்தவர் சர்ச்சை சிங். அஜ்மீரில் உள்ள மயோ கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்து விட்டு, 19 வயதில் ராணுவத்தில் பணியாற்றப் போய்விட்டார். பிறகு, பா.ஜ.க.வில் சேர்ந்து அரசியல் போர். 1980ல் இவரை ராஜ்யசபாவுக்கு அனுப்பி வைத்தது பா.ஜ.க. மத்தியில் பா.ஜ.க.



சிங்'கம்!

ஆண்டபோது நிதித்துறை, அயலுறவுத் துறை என்று முக்கியத்துவம் பெற்றிருந் தார்.

பி.ஜே.பி. ஆட்சியில் காந்தஹாருக்கு இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் பயணி களுடன் கடத்தப்பட்டபோது, பயணி களைப் பத்திரமாக விடுவிப்பதற்காகக் கடத்தல்காரர்கள் போட்ட கண்டிஷனை இந்தியா ஏற்றுக்கொண்டது. அதன்படி சிறையில் இருந்த மௌலானா மசூத் அசார் உள்ளிட்ட தீவிரவாதிகளை தனி விமானத் தில் தன் கூடவே அழைத்துச் சென்று கடத்தல்காரர்களிடம் ஒப்படைத்துவிட்டு, பயணிகளை மீட்டு வந்தார் ஜஸ்வந்த் சிங். அவரது அரசியல் வாழ்க்கையில் அது சர்ச்சைகளின் உச்சகட்டம்.

அத்வானி தன்னுடைய வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தில், 'நான் நாட்டின் உள்துறை அமைச்சராக இருந்தபோதிலும், ஜஸ்வந்த் சிங் தீவிரவாதிகளை உடன் அழைத்துச் செல்ல முடிவெடுத்தது எனக் குத் தெரியாது' என்று குறிப்பிட்டது சர்ச்சையோ சர்ச்சை!

'தீவிரவாதிகளை அழைத்துக்கொண்டு சென்ற அந்த விமானத்தில் நான் உடன் சென்றிருக்க வேண்டிய அவசியமில்லை; ஆனாலும் அதை என் கடமையாக நினைத் தேன். காந்தஹார் சம்பவத்தை நினைவு கூர்ந்து பா.ஜ.க.வைத் தாக்கும் காங்கிரஸ், அந்தச் சம்பவம் நடந்த சமயத்தில் எப்படி நடந்து கொண்டது? பிரதமர் கூட்டிய

"நான் சேர்ந்தபோது இருந்த பா.ஜ.க.வேறு; இப்போது இருக்கும் பா.ஜ.க.வேறு!"

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் சோனியா காந்தியும், மன்மோகன் சிங்கும் கலந்து கொண்டு, திரும்பத் திரும்ப அவர்கள் வலியுறுத்தியது, 'ஏதாவது செய்து பயணிகளைக் காப்பாற்றி, பத்திரமாக அழைத்துக் கொண்டு வந்துவிடுங்கள்' என்பதைத்தான். 166 உயிர்களைக் காப்பாற்ற பா.ஜ.க. எடுத்த முடிவு அது'' என்று விளக்கம் அளித்தார் ஜஸ்வந்த் சிங்.



* முகமது அலி ஜின்னா

கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது பா.ஜ.க. மே.வங்காளத்தில் டார்ஜிலிங் தொகுதியில் ஜஸ்வந்த் சிங்கைப் போட்டியிடச் செய்தது. புதிய களம் என்றாலும், கடுமையாக உழைத்து, வெற்றி பெற்று விட்டார். தேர்தலுக்குப் பிறகு, அத்வானியும், அருண் ஜேட்லியும், சுஷ்மா ஸ்வராஜும் லோக் சபாவிலும், ராஜ்ய சபாவிலும் எதிர்க்கட்சித் தலைவராகவும் துணைத் தலைவராகவும் ஆன போது, சிங் செம அப்செட்! 'தேர்தல் தோல்விக்கு உண்மையான காரணத்தை ஆத்மார்த்தமாக அலசிப் பார்க்காமல், ஜால்ராக்களுக்குப் பதவி தரப்படுகிறது' என்று அவர் சொன்னதை கட்சி மேலிடத்தால் ஜீரணிக்க முடியவில்லை. கட்சி தம்மை அவமானப்படுத்தி விட்டதாகக் குமுறுகிறார் ஜஸ்வந்த். ''நான் சேர்ந்தபோது இருந்த பா.ஜ.க. வேறு; இன்றைய பா.ஜ.க. வேறு'' என்பது இப்போது அவரது அழுத்தமான கருத்து.

தேர்தலின் போது, ஜஸ்வந்த் சிங்கின் மகன் மனவேந்திர சிங்குக்கும் சீட் கொடுத்தது பா.ஜ.க. மகனின் தொகுதியில் பிரசாரத்தின்போது, வாக்காளர்களுக்கு ஜஸ்வந்த் சிங் பணம் விநியோகித்ததாகக் குற்றம் சாட்டிய ராஜஸ்தான் மாநில காங்கிரஸ் கட்சி, அதற்கு ஆதாரமாக ஒரு வீடியோவையும் அளிக்க, அது நியூஸ் சேனல்களில் ஒளிபரப்பாகி பரபரப்பு ஏற்பட்டது.

அதுமட்டுமா? ஜஸ்வந்த் சிங் தமது நண்பர்களுக்கு அளித்த விருந்து ஒன்றின் போது போதைப் பொருளான ஓப்பியம் பயன்படுத்தியதாக ஒரு வழக்கு போடப்பட்டது. அதை விசாரித்த ராஜஸ்தான் போலீஸ், கடைசியில், 'ஆதாரமில்லை' என்று ஃபைலை க்ளோஸ் செய்தது!

புத்தகம் எழுதிய காரணத்துக்காக ஜஸ்வந்த் சிங்கைக் கட்சியிலிருந்து விலக்கி விட்டது பா.ஜ.க. ஆனால் புத்தகத்தை வெளியிட்டுள்ள ரூபா அண்ட் கோவுக்கு இரட்டைச் சந்தோஷம். இந்தியாவில் மட்டுமின்றி பாகிஸ்தானிலும்கூட புத்தக விற்பனை ஜோர்தான்!


– எஸ்.சந்திரமௌலி



ஜஸ்வந்த் சிங், புத்தகம் எழுதி சர்ச்சைக் கிளம்புவது இது முதல்முறை அல்ல!

'தென்னிந்தியாவின் வாழ்க்கைக்கு ஆதாரமாக அமையும் மடிப்பு மடிப்பான மேற்கு மலைத் தொடர்கள் தாய்மையின் ஆகச் சிறந்த அடையாளம்' எனத் தொடங்குகிறார் நூலாசிரியர். சூழலியல் குறித்த பதினெட்டு கட்டுரைகள். நடையில் எளிமை, மொழியில் கவித்துவம் என வாசகரைத் தம்மோடு பயணத்துக்கே அழைத்துச் சென்று, சாட்டையைச் சொடுக்கிறார் நிதர்சனக் கருத்துக்களில். நூலைப் படித்து முடிக்கும் ஒவ்வொருவரிடமும் நிச்சயம் கேள்வி எழும்: 'நாம் என்ன செய்யப் போகிறோம்?'

உயிர்ப் புதையல் - காடும் காடுசார்ந்த உலகமும், கோவை சதாசிவம், வெளிச்சம் வெளியீட்டகம், 1447, அவினாசி சாலை, பீளமேடு, கோயம்புத்தூர். விலை ரூ.120.00



கடவுள் யார்? கடவுளை வணங்கும்போது கண்களை மூடலாமா? தானம் என்றால் என்ன? - எழுந்து கொண்டேயிருக்கும், எல்லாக் கேள்விகளுக்கும் விடை தேடத் தொடங்கினால், ஆன்மிகத் தேடலாகவும், ஆன்மத் தேடலாகவும் விரிவடைந்துவிடும். அத்தகைய தேடலுக்கு ஒரு வழிகாட்டியாய் அமைந்துள்ளது இந்நூல்.

ஆன்மிக நெறியும் நல்வாழ்வும், இரா.ரெங்கசாமி, மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, சென்னை-17. விலை ரூ. 60.00




சிவப்புத் திரை

நூல் அறிமுகம்

'வெட்ட வெளிகளைப் போலவே உள்ளே வெளியே கிடையாது வாழ்க்கைக்கு' - சிந்திக்க அவகாசம் தேடும் இவை போன்ற சில வரிகளோடு எளிமையான ஒரு கவிதைத் தொகுப்பு. பெரும்பாலானவை நேர்முக உரையாடல் தொனியில் சொல்ல வந்ததைச் சொல்லிச் செல்கின்றன. ஒளித்து வைத்ததைக் கண்டெடுப்பதில் கிடைக்கும் ஆர்வக் குறுகுறுப்பாய், ஒரிருமுறை வாசித்து, உணர்ந்து, அனுபவிக்க வாய்ப்பளித்திருந்தால் இன்னும் சுவாரஸ்யம் கூடியிருக்கும்.

திறந்த வீட்டில் பூட்டிக் கிடப்பவர்கள், த.கண்ணன், குமரன் பதிப்பகம், 19, கண்ணதாசன் சாலை, சென்னை -17. விலை ரூ.40.00



சமகால சீனாவின் சரித்திரம், அரசியல், கலாசாரம், சாதனைகள், சவால்கள், சர்ச்சைகள் என பலவற்றைப் படம்பிடிக்கும் நூல். நூலாசிரியரின் நேரடி அனுபவங்களால் நூலுக்குள் எளிதாகப் பயணிக்க முடிகிறது. தமது ஐந்து ஆண்டு அனுபவங்களை பன்னிரண்டு கட்டுரைகளின் வாயிலாக பல தளங்களில் விவரித்து, சீனாவின் சிவப்புத் திரையைச் சிறிது விலக்கிக் காட்டுகிறார்.

சீனா - விலகும் திரை, பல்லவி அய்யர், தமிழில்: ராமன் ராஜா, கிழக்கு பதிப்பகம், 33/15, எல்டாம்ஸ் சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை-18. விலை ரூ.200/-



- நேயமுகில்



நிழலுக்கு நிறமில்லை!

சாதுர்யா நேரம் பார்த்தாள். ராத்திரி பத்தரை மணி. போய்ப் படுத்துக்கொள்ளலாமா... என்று யோசித்த விநாடி-

வாசலில் காலிங்பெல் கதறியது. பக்கவாட்டு ஜன்னலைத் திறந்து தலையைச் சாய்த்துப் பார்த்தாள்.

வாசல் கதவருகே ஒரு இளைஞனும், அந்த அழகான பெண்ணும் தெரிந்தார்கள். இளைஞன் பதற்றமாய்த் தெரிய அந்தப் பெண் வியர்த்துப் போயிருந்தாள்.

இளைஞன் ஜீன்ஸ் பேண்ட்டிலும் தொளதொளப்பான பேகி பனியனிலும் தெரிந்தான். பனியன் வாசகம் 'My path is different but right' என்று சொன்னது.

''யார் நீங்க...?''

அந்தப் பெண் உலர்ந்து போன உதடுகளோடு பதற்றமாய்ப் பேசினாள். ''ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ். நாங்க 'நிழல்' புலனாய்வு பத்திரிகையில் வொர்க் பண்றோம். என்னோட பேர் சுடர்விழி. இவர் மாறன்.''

மாறன் குறுக்கிட்டான். ''மேடம்...! சிட்டியில் இன்னைக்கு இருக்கிற ரெண்டு பெரிய புள்ளிகளோட மோசமான திருவிளையாடல்களைப் பற்றிய தகவல்களோடும் ஃபோட்டோ ஆதாரங்

களோடும் வந்திருக்கோம்.''

'இவர்களை உள்ளே அனுமதிக்கலாமா வேண்டாமா?' என்று யோசித்துக் கொண்டிருக்கும்போதே-

வீட்டு காம்பவுண்ட் கேட் அருகே அந்த இரைச்சல் கேட்டது. சாதுர்யா எட்டிப் பார்த்தாள்.

ஒரு டாட்டா சுமோ வேகமாய் வந்து நின்றது.

'யார் வருகிறார்கள்...?' சாதுர்யா யோசித்துக் கொண்டிருக்கும்போதே, டாட்டா சுமோவின் பின்பக்கக் கதவைத் திறந்து கொண்டு நான்கைந்து பேர் குதித்தார்கள். ஒருவனின் கையில் துப்பாக்கி பளபளத்தது. இன்னொருவன் கத்தினான். ''டேய்...! அவனைச் சுட்டுத் தள்ளிட்டு அவளை இழுத்துட்டு வாங்கடா...''

சாதுர்யா தன்னுடைய அறைக்கு ஓடிப்போய், தலையணைக்குக் கீழே வைத்திருந்த பிஸ்டலை எடுத்துக் கொண்டு, வாசற்கதவைத் திறந்து கொண்டு வெளியே பாய்ந்தாள். அதற்குள் வெளியே துப்பாக்கி கனைக்கும் சத்தம் கேட்டது.

''ச்சீ... விடுடா!'' சுடர்விழியின் அலறல் சத்தம்.

சாதுர்யா கையில் துப்பாக்கியோடு போர்டிகோ படிகளில் குதித்து காம்பவுண்ட் கேட்டை நெருங்குவதற்குள், வேன் புறப்பட்டுப் போயிருந்தது.

அதிர்ந்து போனவளாய் சுற்றும் முற்றும் பார்க்க, மாறன் காம்பவுண்ட் சுவர் ஓரமாய் ரத்தச் சகதியில் இறந்து போயிருந்தான்.

'இந்த மாறனும் அந்த சுடர்விழியும் என்னிடம் என்ன சொல்ல வந்தார்கள்?'

சாதுர்யா தன் செல்ஃபோனை எடுத்து போலீஸ் கண்ட்ரோல் ரூமுக்குத் தகவல்



கொடுத்தாள்.

மறுநாள் காலை பத்து மணி.

போலீஸ் கமிஷனர் அலுவலகம்.

கமிஷனர் வைகுண்டராமன் சாதுர்யாவை ஒரு கோபப் பார்வையால் நனைத்துக் கொண்டே கேட்டார்.

''என்னம்மா சாதுர்யா... உன்னோட வீட்டு வாசலிலேயே ஒருத்தனைச் சுட்டுக் கொலை பண்ணியிருக்காங்க. கண்முன்னாடியே ஒரு பெண்ணையும் கடத்திக்கிட்டுப் போயிருக்காங்க. நீ ஒரு போலீஸ் வுமன். ரெண்டு பெரிய புள்ளிகளோட மோசமான திருவிளையாடல்களைப் பற்றிய தகவல்களோடும் ஃபோட்டோ ஆதாரங்களோடும் வந்து இருக்கிறதாய் மாறனும் சுடர்விழியும் உன்கிட்டே சொன்னாங்க இல்லையா? அவங்க யார்ன்னு கெஸ் வொர்க் பண்ண முடிஞ்சுதா?''

''அது சம்பந்தமாய் விசாரிக்கத்தான் 'நிழல்' பத்திரிகை ஆஃபீஸுக்குப் போயிட்டிருக்கேன் ஸார்.''

சாதுர்யா பேசிக்கொண்டிருக்கும் போதே அறை வாசலில் நிழலாடியது. இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்.

அஸிஸ்டெண்ட் கமிஷனர் ராகவேந்திரன்.

''எனிதிங் இம்பார்ட்டண்ட்?''

''எஸ்... ஸார்... ஒரு மணி நேரத்துக்கு முந்தி போலீஸ் கண்ட்ரோல் ரூமுக்கு சுடர்விழி பதற்றமாய் ஃபோன் பண்ணி அவசர அவசரமாய் ஏதோ பேச முயற்சி பண்ணியிருக்கா. பட் பேசப் பேச அவளை யாரோ தாக்கியிருக்காங்க. அந்த அலறல் சத்தமும் கண்ட்ரோல் வாய்ஸ் ரெகார்டர்ல பதிவாகியிருக்கு.''

கையோடு கொண்டு போயிருந்த மினி டேப் ரிக்கார்டரில், கண்ட்ரோல் ரூமில் பதிவான காஸெட்டைப் போட்டு



சாதுர்யா சக்ஸஸ் - 8

சாதுர்யா பேசறேன்... பிரின்ஸியோட போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட் குறித்துப் பேச டாக்டரை ஹாஸ்பிடல் நம்பர்ல கூப்பிட்டேன். நர்ஸ் ஸ்டெல்லா, 'டாக்டர் இன்னும் வரலை'ன்னு சொல்லிட்டு ரிசீவரை சரியா வைக்காம போய்ட்டாங்க. அப்போதான் உள்ளே நுழைஞ்ச டாக்டர் சிவசைலம் பேசினதும், அதுக்கப்புறம் பிரணவ்குமார் வந்து சிவசைலத்தோட பேசினதும், டெலிஃபோன் லைன்ல இருந்து எனக்குத் தெளிவா கேட்டுடுச்சு. கொலையாளியை அலர்ட்டாய் ஏதாவது பண்ணி அவங்களை மடக்கியிருக்க வேண்டாமா?''

''ஸார்... கண்ணிமைக்கிற நேரம்ன்னு சொல்வாங்களே அந்த நேரத்துக்குள்ளே எல்லாமே நடந்து முடிஞ்சிடுச்சு.''

''யாரோ

பட்டனை அழுத்தினார்.

''போ... போலீஸ் கண்ட்ரோல்... ரூம்... நா... நான் ப்ரஸ் ரி...ரி..ரிப்போர்ட்டர்.. சுடர்விழி... பே... பே... பேசறேன்... நான்... நான் இப்போ... ஒரு பாழடைஞ்ச வீட்ல... பக்கத்துல சவுக்குத் தோப்பு. இ... இது... எந்த இடம்ன்னு... தெ... தெரி...'' சுடர்விழி பேச்சை முடிக்கும் முன், 'ர்ர்ர்ரப்ப்' என்று யாரையோ அறையும் சத்தம். தொடர்ந்து கீழே எதுவோ உருண்டது. ''செல்ஃபோன் இவ கைக்கு எப்படிடா கிடைச்சது?'' யாரோ கத்தினார்கள். டேப்ரிக்கார்டர் தன் இயக்கத்தை நிறுத்திக் கொண்டது. சாதுர்யா ராகவேந்திரனிடம் நிமிர்ந்தாள்.

ஈஸியா பிடிக்கணும்னுதான், நர்ஸ் மாலதி போல முகக் கவசம் போட்டுக்கிட்டு போஸ்ட்மார்ட்டம் பண்ற அறையில காத்துக்கிட்டு இருந்தேன். பிரணவ்குமாரை இப்படித்தான் ஈஸியா மடக்க முடிஞ்சது. சரியான விடையை யூகித்து எழுதி குலுக்கலில் தேர்வான வாசகர்களின் விவரம் 'வட்டமேஜை' பக்கத்தில்...

''ஸார்...! கண்ட்ரோல் ரூமுக்கு வந்த அந்த ஃபோன்கால் எந்த நம்பரிலிருந்து வந்ததுன்னு ட்ரேஸ் பண்ணினீங்களா?''

''ம்... ட்ரேஸ் பண்ணிப் பார்த்தோம். அது ஒரு இல்லீகல் செல்ஃபோன் நம்பர். அந்த நம்பர் யார்கிட்டேயிருக்குன்னு கண்டுபிடிக்க முடியாதுன்னு செல்ஃபோன் நிர்வாகம் சொல்லிட்டாங்க.''

''ஓ.கே. வாட் ஈஸ் யுவர் நெக்ஸ்ட் மூவ்...?'' கமிஷனர் கேட்க, ராகவேந்திரன் சொன்னார்.

''ஸார்...! சுடர்விழியைக் கண்டுபிடிக்கிறதுக்காக பத்து தனிப்படைகள் அமைச்சு ஈ.சி.ஆர். ரோட்டோரமாய் உள்ள சவுக்குத் தோப்புகளையும், பழைய மகாபலிபுரம் ரோட்டில் உள்ள சவுக்குத் தோப்புகளையும் 'ஸர்ச்' பண்ணச் சொல்லியிருக்கேன். இன்னைக்கு சாயந்தரத்துக்குள்ளே சுடர்விழியை மீட்டுடுவோம் ஸார்...'' ராகவேந்திரன் எழுந்து கொண்டார். கமிஷனர் எழுந்து நின்று கைகுலுக்கினார்.

நிழல் பத்திரிகை அலுவலகம்.

ஆசிரியர் கந்தர்வன் தமக்கு முன்னால் உட்கார்ந்திருந்த சாதுர்யாவிடம் தீர்மானமான குரலில் சொன்னார்.

''இதோ பாருங்கம்மா! மாறனும் சுடர்விழியும் இந்த நிழல் என்கிற பத்திரிகைக்காக தங்களை டெடிகேட் பண்ணிக்கிட்டவங்க. யாருக்கும் பயப்படாதவங்க. தங்களுடைய மனசுக்கு சரின்னு பட்டதைத் துணிச்சலாய் எடுத்துச் சொன்னவங்க. அவங்க புலனாய்வு பண்ணிக் கொண்டு வர்ற விஷயங்களைப் பார்த்து நானே அதிர்ந்து போயிருக்கேன்.''

''மாறன் சுடர்விழி இந்த ரெண்டு பேருக்கும் நடுவில் எது மாதிரியான உறவு இருந்தது?''

''ரெண்டு பேரும் காதலர்கள். வர்ற தை மாதம் என்னோட தலைமையில் கல்யாணம் நடக்க இருந்தது.''

''அவங்க காதலுக்கு எதிர்ப்பு ஏதாவது?''

''ஒரு எதிர்ப்பும் கிடையாது. பொதுவா ரெண்டு பேருக்குமே உறவுன்னு சொல்லிக்க யாரும் கிடையாது. எதையாவது சாதிச்சுக் காட்டணும் என்கிற எண்ணத்தோடு கிராமங்களிலிருந்து புறப்பட்டு சென்னை வந்தவங்க...''

''நேத்து ராத்திரி மாறனும் சுடர்விழியும் என்னைப் பார்த்துப் பேச வந்தப்ப ரெண்டு பேருமே பதற்றத்தோடு இருந்தாங்க. சிட்டியில் இருக்கிற ரெண்டு பெரிய புள்ளி

களைப் பற்றிய செய்திகளோட வந்திருக்கறதா சொன்னாங்க. அந்த ரெண்டு புள்ளிகள் யார்ன்னு உங்களுக்குத் தெரியுமா...?''

''தெரியாது...! பொதுவா எங்க பத்திரிகையில் யாரைப் பத்தி எழுதறதாயிருந்தாலும் வெளிப்படையாய் எழுத மாட்டோம். கிசுகிசு பாணியில்தான் எழுதுவோம். அது வாசகர்களுக்கும் புரியும். அதில் சம்பந்தப்பட்ட நபர்களுக்கும் புரியும்'' கந்தர்வன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, அவர் மேஜை மேல் இருந்த டெலிஃபோன் ஒலித்தது.

ரிஸீவரை எடுத்து காதுக்குப் பொருத்தியவரின் முகம், அடுத்த விநாடி கோபத்தில் சிவந்தது. ''யோவ்! நானே உனக்கு ஃபோன் பண்ணிப் பேசலாம்னு இருந்தேன். ஏன்ய்யா ஒரு பொருள் வாங்கினா அதுல நாணயம் வேண்டாம்? வேளா வேளைக்கு வால் க்ளாக் கூண்டுக்குள்ளே இருக்கிற குயில் வெளியே வந்து கூவும்... மூணு மணின்னா மூணு தடவை கூவும்... எட்டு மணின்னா எட்டு தடவை கூவும்ன்னு சொன்னே! இப்போ குயில் நினைச்ச நேரமெல்லாம் வெளியே வந்து கூவுதய்யா! நீ மொதல்ல வந்து அதை சரிபண்ணிக் கொடு. இல்லேன்னா கன்ஸ்யூமர் கோர்ட்டுக்குப் போயிடுவேன்'' கந்தர்வன் கோபமாய்ப் பேசிவிட்டு ரிஸீவரை வைத்தார். சாதுர்யாவை ஏறிட்டார்.

''ஸாரிம்மா... உங்களை எதிர்ல உட்கார்த்தி வைச்சுக்கிட்டே ஒருத்தரைத் திட்ட வேண்டியதாயிடுச்சு...''

''அது என்ன 'குக்கூ' வால்கிளாக்...?''



"சரி... நாங்கதான் உளர்றோம். உங்க பார்ட்னர் சுடர்விழியும் உளறுவாளா?"

''புதுசா மார்க்கெட்டுக்கு வந்து ஒரு வாரம்தான் ஆச்சும்மா. ஒவ்வொரு மணி நேரத்துக்கும் வெளியே வந்து அப்போ எத்தனை மணியோ அத்தனை தடவை கூவும். முதல் ரெண்டு நாள் ஒழுங்கா கூவிச்சு. அதுக்கப்புறம் நினைச்ச நேரமெல்லாம் வெளியே வந்து கத்த ஆரம்பிச்சது. ஆளை அனுப்பி சரி பண்ணித் தர்றேன்னு சொன்னவங்க வரவேயில்லை. இப்ப ஃபோன் பண்ணிப் பேசறாங்க...''

சாதுர்யா எழுந்தாள்.

''ஓ.கே. ஸார்... நான் புறப்படறேன். மாறன் தங்கியிருந்த அறையையும் சுடர்விழி தங்கியிருந்த அறையையும் 'தரோவா' சோதனை பண்ணிப் பார்க்கணும்.''

இரண்டு நாட்கள் கழித்து -

கந்தர்வன் அந்த அதிகாலை வேளையில் வாக்கிங் புறப்பட்டுப் போக, கால்களுக்கு கான்வாஸ் ஷூக்களை மாட்டிக் கொண்டிருந்தபோது, அவருடைய பங்களாவுக்கு முன்பாய் போலீஸ் ஜீப் வந்து சத்தமில்லாமல் நின்றது. அவர் திகைப்பாய்ப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, சாதுர்யா அந்த ஏரியா இன்ஸ்பெக்டரோடும் இரண்டு கான்ஸ்டபிள்களோடும் ஜீப்பினின்றும் இறங்கி உள்ளே வந்தான்.

''என்ன கந்தர்வன் ஸார்... வாக்கிங் புறப்பட்டுப் போகத் தயாராயிட்டீங்க போலிருக்கே? சரி வாங்க...! அப்படியே நடந்து போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயிடலாம்...''

''எ...எ... என்னது... போலீஸ் ஸ்டேஷனுக்கா... ஏன்?''

''மாறனைக் கொலை பண்ணினதுக்காகவும் சுடர்விழியோடு சேர்ந்து கடத்தல் நாடகம் போட்டதுக்காகவும்...''

கந்தர்வன் வெகுண்டார்.

''என்ன உளர்றீங்க... நான் மாறனைக் கொலை பண்ணினேனா...? சுடர்விழியோடு சேர்ந்து கடத்தல் நாடகம் போட்டேனா?''

சாதுர்யா சிரித்தாள். ''சரி.. நாங்கதான் உளர்றோம். உங்க பார்ட்னர் சுடர்விழியும் உளறுவாளா என்ன...?''

ஜீப்புக்குள் இருந்த சுடர்விழியை கான்ஸ்டபிள் அழைத்து வந்தார். சாதுர்யா புன்னகைத்தாள்.

''வந்து நிக்கறது உங்க க்ரைம் பார்ட்னர் சுடர்விழியேதான். மதுராந்தகத்துக்குப் பக்கத்துல இருக்கிற உங்க பண்ணை வீட்ல ஏ.ஸி. ரூம்ல படுத்து நிம்மதியாய்த் தூங்கிக்கிட்டிருந்தவளை அதிகாலை நாலு மணிக்கே போய் கைது பண்ணி ஸ்டேஷனுக்குக் கொண்டு வந்துட்டோம். எல்லா உண்மையும் அவளே சொல்லிட்டா. சுடர்விழியும் மாறனும் புலனாய்வு பண்ணி சிட்டியில் இருக்கிற பெரிய மனிதர்களின் இருட்டான பகுதியை ஆதாரங்களோடு கொண்டு வருவாங்க. நீங்களும் சுடர்விழியும் மாறனுக்குத் தெரியாமே அந்த ஆதாரங்களை வெச்சு பெரிய மனிதர்களை ப்ளாக்மெயில் பண்ணி பணம் பறிப்பீங்க. ஒரு கட்டத்துல மாறனுக்கு இலேசாய் சந்தேகம் வந்தது. கேள்வி கேட்ட அவனை எப்படியோ சமாதானம் பண்ணீங்க. இருந்தாலும் மாறனுக்கு என்னிக்காவது ஒருநாள் உண்மை தெரியும்போது நிலைமை விபரீதமாகலாம்ன்னு நினைச்சு அவனைத் தீர்த்துக்கட்ட முடிவு பண்ணீங்க. அதுக்காக ஒரு திட்டம் போட்டீங்க. அந்தத் திட்டப்படி சுடர்விழி மாறனைக் கூட்டிக்கிட்டு ஒரு ராத்திரி நேரத்துல ரெண்டு மோசடி பேர்வழிகளைப் பத்திப் பேசறதுக்காக என்கிட்டே வருவா. அப்படி வந்து என்கிட்டே பேசிக்கிட்டு இருக்கும்போதே ஒரு வேனில் நீங்க அனுப்பின ஆட்கள் வருவாங்க. மாறனைக் கொன்னுட்டு சுடர்விழியைக் கடத்திட்டுப் போயிடுவாங்க. திட்டப்படி எல்லாமே நடந்தது. போலீஸோட கவனம் முழுவதும் மாறனும் சுடர்விழியும் சொல்ல வந்த விஷயம் என்ன... அந்த ரெண்டு மோசடிப் பேர்வழிகள் யார் என்பதிலேயே இருக்கும்ன்னு நினைச்சீங்க. எல்லாமே சரிதான்...! உங்களைச் சந்திக்கும்வரை எனக்கும் உங்க மேலேயும் சரி... சுடர்விழி மேலேயும் சரி... ஒரு துளி கூட சந்தேகம் வரலை. உங்களைச் சந்திச்ச பிறகுதான் இந்த கேஸை முடிவுக்குக் கொண்டு வர ஒரு லீட் கிடைச்சது...''

''எ...ப்...ப...டி...?'' கந்தர்வன் திக்கித் திணறியபடி கேட்டார்.

சாதுர்யா சொல்ல ஆரம்பித்தாள். ●

துப்பறியும் போட்டி-9

வாசகர்களே...

சாதுர்யாவுக்கு இந்த கேஸைக் கண்டுபிடிக்க குற்றவாளி கந்தர்வனே எப்படி உதவினார்... ஒரே ஒரு க்ளூ! அது அவர்கள் உரையாடலில் ஒளிந்துள்ளது. மூளைக்கு ஓவர்டைம் கொடுத்து யோசித்துப் பாருங்கள்.

சரியான பதிலை போஸ்ட் கார்டில் எழுதி அனுப்புங்கள். துப்பறியும் போட்டி - 9 என்று குறிப்பிட்டு கல்கி முகவரிக்கு அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.



கடைசித் தேதி: 2.9.09

டெல்லி பக்கம்

முசௌரியில் உள்ள லால்பகதூர் சாஸ்திரி தேசிய அகாடமியில், 1991, 92, 93 வருட ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்காக ஒரு மாதப் பயிற்சி நடத்தப்பட்டது. பயிற்சியின் முடிவில் கொரியா நாட்டில் உள்ள சியோல் நகரத்துக்கு ஒரு எக்ஸ்போஷர் விஸிட்டுக்கும் ஏற்பாடாகி கடைசியில் கேன்சலாகிவிட்டது. காரணம், வடகொரியா அணு ஆயுத சோதனை நடத்திய டென்ஷனுடன், பன்றிக்காய்ச்சல் பயமும் சேர்ந்து கொண்டதுதான்!

(ஆளும்கட்சிக்கு அடிபணியாமல் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருப்பது எப்படின்னு ஒரு பயிற்சி தரலாமுங்களே!)

முன்னாள், இந்நாள் எம்.பிக்களை உறுப்பினர்களாகக் கொண்ட கான்ஸ்டிடியூஷன் க்ளப் டெல்லியில் பிரபலம். அரசியல் கட்சிகளின் உடைப்புகள், இணைப்புகள் மட்டுமில்லாமல் சில சதித்திட்டங்கள் கூட இங்கே உருப்பெற்றதாகச் சொல்வதுண்டு. தற்போதைய பாராளுமன்றத்தின் இளம்தலைமுறையினர் பலரை இந்த க்ளப்பில் ரெகுலராகக் காணமுடிகிறது. டெல்லி முதல்வர் ஷீலா தீட்சித்தின் மகன் சந்தீப், முன்னாள் கிரிக்கெட்டர் அசார், ஷரத் பவாரின் மகள் சுப்ரியா ஆகியோரை அடிக்கடி காணலாம்.

(சீட்டாட்டத்துல ஒரு கை குறைஞ்சா எங்க ஆளுங்களைக் கூப்பிடுவாங்களோ?)



பாலிடிக்ஸ்

புதிய எம்.பி.க்களுக்கு வீடுகள் ஒதுக்கும் பணி ஜரூராக நடந்து முடியும் தருவாயில் உள்ளது. ஒவ்வொரு எம்.பிக்.கும் இரண்டு நாள் அவகாசத்தில் மூன்று வீடுகளைப் பார்த்து அவற்றிலிருந்து பிடித்த ஒன்றைத் தேர்ந்தெடுக்கச் சொல்லி, அதை அவர்களுக்கு ஒதுக்குகிறார்கள். காலி வீடுமனை புதிய எம்.பி.க்களுக்கு ஒதுக்குவதில் எந்தச் சிக்கலும் இல்லை. ஆனால், மாஜிக்களைக் காலி செய்ய வைப்பதுதான், இன்று மாபெரும் சவாலாக இருக்கிறது, எம்.பி.க்களுக்கான ஹவுஸிங் கமிட்டியின் தலைவரான ஜே.பி. அகர்வாலுக்கு.

(வீட்டைக் காலிபண்ணணும்னா ஒரு ஃபோன் போதும்; கச்சிதமா செஞ்சு முடிக்க ஆளுங்க இருக்காங்க தெரியாதா அகர்வால்ஜி?)

வெளிநாட்டில் படித்தவரான ராகுல் காந்தி, நிர்வாக கன்சல்டன்சி நிறுவனத்தில் பணியாற்றியவர். கொஞ்ச நாள் ஐ.டி. பிசினஸ் கூட செய்திருக்கிறார்.

ஆனால், சமீபத்திய லோக் சபா ரெக்கார்டு களின்படி ராகுல் காந்தியின் தொழில் என்ன தெரியுமா? விவசாயம். அவருக்கு டெல்லி யிலும், ஹரியானாவிலும் நிலம் இருக்கிறது. பண்ணை வீடும் உண்டு.

(அட! பண்ணையார் ராகுல்ஜி!)

லோக்சபாவின் முன்னாள் சபாநாயகர் சோம்நாத் சாட்டர்ஜி, பொது நிகழ்ச்சிகளுக்கு அழைத்தால், பெரும்பாலும் ஒப்புக்கொள்வ தில்லை. சொற்பொழிவாற்ற அழைத்தால், தேர்ந்தெடுத்து கலந்து கொள்கிறார். மற்றபடி மனுஷர் தம் அரசியல் அனுபவங்களைப் புத்தகமாக எழுதுவதில் பிஸியாக இருக்கிறார்.

(சோம்நாத்ஜி! புத்தகத்துல ஜின்னா பத்தி ஏதாவது எழுதுங்க! அப்போதான் பரபரப்பு, பப்ளிசிடி கிடைக்கும்!)

- பரத்ராம்



ஃபார்மர்!



''எல்லாம் முடிஞ்சு போச்சு''

ஏமாற்றமும் துக்கமும் பொங்கக் கதறிய என்னை, அந்தக் கருணைத் தெய்வம் கனிவோடு பார்த்தது. அந்தப் பார்வை, எனக்குள் புகுந்து, உள்ளே பொங்கிய குமுறலையும், ஆற்றாமையையும் மென்மையாய் நீவித் துடைப்பது போன்ற உணர்வு மேலிட்டது.

கொந்தளிப்பு அடங்கினாலும், அலைச் சீற்றம் குறையாத புயல் காலக் கடலைப் போல இருந்தது மனம். அதையும் அடங்கச் செய்வது போல வெளிப்பட்டன பெரியவாளின் மதுரமான வார்த்தைகள்:

''ஒண்ணும் ஆயிடலடா அசடு. ஒரு முடிவிலேதான் இன்னோர் ஆரம்பம்னு தெரியுமோன்னோ? இத்தனை நாள் உனக்கு மூணு குழந்தைகள் தான்னு நெனைச்சிண்டிருந்தே இல்லியா? இனிமே நீ பெரிய சம்சாரியாகப் போறே! 'வசுதைவ குடும்பகம்'னா என்னன்னு தெரியுமா? இனிமே தான் நீ சாதிக்க வேண்டியது நெறைய இருக்கு. அம்பாளோட பூரண அனுக்ரஹம் உனக்கு உண்டு. கொஞ்ச நாள்

சங்கராபுரம்



எந்தக் கவலையோ துயரமோ இல்லாம விச்ராந்தியா மடத்திலேயே இரு.''

'விச்ராந்தியா இரு!'

அதெப்படி இருப்பது? புரியவில்லை. சாரதம் போனதை மறப்பதா? மாப்பிள்ளைகள் ஏமாற்றியதையா? மகள்கள் அவர்களுக்குத் துணை போனதையா? ரத்த பந்தங்கள் ஏய்த்த போதும், வேலைக்கு வந்தவர்கள் காட்டிய நேர்மையையா? ஜாரிணிக் கரண்டியோடு ஆரம்பித்த பயணம், அதே கரண்டியோடு பூஜ்யத்துக்கு வந்து விட்ட அவலத்தையா?

எதை மறப்பது? துக்கம் அடங்கவேயில்லை; கண்ணீரும் நிற்கவில்லை. அதை ஆற்றுவிப்பது போல, மீண்டும் எழுந்தது பெரியவாளின் குரல்:

“மனுஷாளோட கஷ்டம், துக்கம் எல்லாத்துக்கும் காரணம் என்னன்னு நினைக்கிறே?

ஏமாற்றம், துக்கம் இந்த வார்த்தைகள் ஏன் வருது? ஏதோ பொருள் மேல, ஒரு நபர் மேல உரிமை, பிரியம், எதிர்பார்ப்பு... இந்த மாதிரி ஒன்றை ஏற்படுத்திண்டு, நினைச்ச மாதிரி அது நடக்கலைன்னா ஏமாற்றமோ, துக்கமோ வருது. நன்னா கவனிச்சா அது புரியும். எதிர்பார்ப்பையும், பிரியத்தையும் வளர்த்துண்டது யாரு? நாமே வளர்த்துட்டு, நாமே அதை அடுத்தவா மேல குறையாச் சொல்லலாமா? தப்பு நம்மோடதுதானே...?

கீதைல பகவான் சொன்னார்: ‘கடமையைச் செய்; பலனை எதிர்பார்க்காதே’ன்னு எல்லாரும் சொல்றா. ஆனா, ‘பலனை எதிர்பார்த்துச் செய்யப்படும் கடமை ஏமாற்றம், துக்கம்... இப்படி ஏதாவது ஒண்ணைத் தரும். அதனாலதான் பலனை எதிர்பார்க்காமல் கடமையைச் செய்’ன்னார் பகவான்.”

பெரியவாளின் இந்த வார்த்தைகள் எனக்குள் புரண்டு கொண்டிருந்த தடுமாற்றங்களைத் தகர்த்தெறிந்தன. மீண்டும் நமஸ்கரித்து எழுந்தேன். அந்த அபயகரம் உயர்ந்தது: அருள் நயனங்கள் கனிந்து நோக்கின.

சமையல் அறையில் பணி, ஸ்வாமிகள் பண்ற பூஜைக்கு ஒத்தாசைன்னு நாட்களை ஒட்டிண்டிருந்தேன். எதுலேயும் பிடிப்பில்லே. யாரோடும் பேசறதில்லே - இப்படியே காலம் ஓடிப் போச்சு.



அன்னைக்கு காலையிலிருந்தே மடத்துலே ஏக பரபரப்பு; கெடுபிடி, பாதுகாப்பு. யாரோ மந்திரிகள் ரெண்டு பேர் பெரியவாளைத் தரிசிக்க வரப் போறதாப் பேசிண்டா.

சுவாமிகள் பூஜை முடிஞ்ச சமயத்துல மந்திரிகள் இரண்டு பேரும் வந்தா. பைஜாமாவும், குர்தாவுமாய்... ஒருவர் ஆந்திராகாரர் ரமேஷ் ரெட்டி; அடுத்தவர் வடக்கத்திக்காரர் சைதன்ய

6

டால்மியாபுரம் கணேசன்

சௌத்ரி; பெரியவாளை நமஸ்காரம் பண்ணி உட்கார்ந்தா... தன் பொண்ணோட கல்யாணம் நல்ல படியா நடக்கணும்னு இருவரும் கேட்டனர். அமோகமா நடக்கும்னு ஆசிர்வாதம் பண்ணினா பெரியவா! அதோட நிறுத்தலை. ''நான் ஒண்ணு சொன்னா கேப்பேளா?''

''உத்தரவு ஸ்வாமிஜி''

''எந்த ஜாதியா, மதமாயிருந்தாலும் பரவால்லே. ஏழைகளாப் பாத்து ஒரு நாலு தம்பதிகளுக்குக் கல்யாணம் பண்ணி வச்சு அவா பொழைக்கறதுக்கும் ஏற்பாடு பண்ணனும். செய்வேளா?''

''கண்டிப்பா செய்யறோம் ஸ்வாமிஜி. நாலு என்ன, பத்து தம்பதிகளுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கறோம்.''

''ரொம்ப சந்தோஷம். அப்புறம் - இன்னொண்ணு - யார் அங்கே - அந்த கிருஷ்ணமூர்த்தியைக் கூப்பிடு''

சற்றுத் தள்ளி நின்று கவனித்துக் கொண்டிருந்த நான், என்னவோ ஏதோன்னு பயந்துண்டே ஓடிப்போய் கைகட்டி நின்றேன்.

''இவன் பேர் கிருஷ்ணமூர்த்தி. ரொம்ப சாது. சமையல்ல கெட்டிக்காரன். ஹோட்டல், கார்னு பறந்தவன். காலம் எல்லாத்தையும் பறிச்சுட்டுது. கிளம்பின இடத்துக்கே வந்தாச்சு. இவனை நம்பி எதையும் ஒப்படைக்கலாம். உங்க பொண்ணு கல்யாணத்துக்கு இவனையும் பயன்படுத்திக்கலாமா?''

உத்தரவாகவும் இல்லாமல், வேண்டுகோளாவும் இல்லாமல் ஒரு செய்தியாக, நாசூக்காகச் சொன்னா பெரியவா. அவர்கள் சரியென்பது போலத் தலையாட்டினார்கள். மெல்ல என்னை நோக்கித் திரும்பின பெரியவாளின் நயன தாரைகள்.

''அப்ப, இவாளோட போய்ட்டு வாடா கிருஷ்ணமூர்த்தி. இன்னும் கொஞ்ச காலத்துக்கு டில்லிதான் உன் வாசஸ்தலம்.''

''மறுபடியும் கொஞ்ச காலமா?''

''ஆமாண்டா! அடுத்தாப்பலே நீ என்ன பண்ணனும்னு அம்பாள்தான் தீர்மானிக்கணும். வீணா கேள்வி கேட்டிண்டுருக்காம, இவாளோட பொறப்படற வழியைப் பாரு. மங்களானி பவந்து.''



"அடுத்தது நீ என்ன பண்ணனும்னு அம்பாள்தான் தீர்மானிக்கணும்!"

அன்று மாலையே புறப்பட்டு விட்டேன். கரண்டிகளை எடுத்துப்போக மறக்கவில்லை!

இரண்டு கல்யாணங்களும் ஏக தடபுடலாய் நடந்தன. அனைவருக்கும் பூரண திருப்தி. வைபவத்துக்கு வந்த மேல்தட்டு மக்கள் பலரும் என் சேவையை நாடி மண்டத் தொடங்கினர். தொழில் சூடு பிடித்தது. மெட்ராஸைப் போலவே 'சௌத் இண்டியன் மெஸ்' என்று ஆறு இடங்களில் தொடங்கினேன். ஓய்வில்லாத உழைப்பு. பணம் குவியத் தொடங்கியது. மந்திரிகள் இருவரோடும் நல்ல தொடர்பு நீடித்தது.

இந்த நிலையில் அடுத்த தேர்தல் வந்தது. ரெட்டிக்கு தான் தோற்றுவிடுவோமோ என்ற பயம். அடிப்படையில் அவர் நல்ல மனிதர்; திறமைசாலி. லஞ்சமே வாங்காத அரசியல்வாதி. இருந்தும் எதிர்க்கட்சிகளின் தாக்குதல் பலமாக இருந்தது.

''என்ன ஐயரே? நிலைமை சரியாயில்லே. மனசிலே நிம்மதி இல்லே! காஞ்சிபுரம் போய் வரலாமா? ரெண்டு நாளா மனசிலே தோன்றிகிட்டே இருக்கு.''

அடுத்த ஃப்ளைட் பிடித்து இருவரும் காஞ்சிபுரம் வந்தோம். ஸ்வாமிகளைத் தரிசித்தோம்.

''எப்படிடா இருக்கே?''

''பெரியவா ஆசிர்வாதத்திலே தொழில் அமோகமா நடக்கறது. ஆனா, 'எதுக்காகச் சம்பாதிக்கிறோம். இந்தப் பணத்தை வெச்சுண்டு என்ன பண்ணப் போறோம்'னு குழப்பமா இருக்கு. இந்தப் பக்கம் நகந்துட்டா தேவலைன்னு தோணிண்டே இருக்கு!''

நான் முடிக்கும் முன்பே, அந்த அருள்வாரிதி அலை பரப்பியது.

''நான் முன்னாலேயே சொல்லியிருக்கேனோல்லியோ? நீ எங்கேயிருக்கணும், அடுத்தது என்ன பண்ணனும்னு அம்பாள்னா தீர்மானிக்கணும்? நீ யார் அதை நிர்ணயம் பண்றதுக்கு? நதியிலே ஜலம் இருக்கு. அது பாட்டுக்கு நீரோட்டத்துக்குக் கட்டுப்பட்டு ஓடிண்டேயிருக்கு. நான் தெற்கே போகணும், வடக்கே போகணும்னு ஜலமே தீர்மானம் பண்ணினா என்னாகும்? நதிநீர் மாதிரி இருக்க உன்னைப் பக்குவப் படுத்திக்கோ. அமைதியா இரு.''

ஆனால், மனம் வழக்கம்போல பேசிக் கொண்டே இருந்தது.

(தொடரும்)

அருள்வாக்கு

ஞான வாசல் கதவு திறந்து உண்மையைக் காண்பது மனுஷ்ய ப்ராணி ஒன்றுக்குத்தான் உரியது என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ப்ராணி வர்க்கங்களில் மனுஷ்யன் ஒருத்தன்தான் தன்னையே பரப்ரஹ்மமாகத் தெரிந்து கொள்கிற ஞானத்துக்கு முயல முடியுமென்பதால்தான் 'அரிது அரிது மானுடராய்ப் பிறத்தலரிது' என்று சொன்னது.

இதனால், மனுஷ்ய ஜன்மா எடுத்த எல்லாரும் சற்றேனும் ஆத்ம விசாரம் செய்து ஞானத்தை அடைவதற்கு ப்ரயத்தனம் பண்ண வேண்டும்.

இதற்குப் பொழுது கிடைக்கவில்லை என்று சொல்வது கொஞ்சம்கூட சரியில்லை. 'ரொம்பவும் தற்காலிகமான ஸந்தோஷங்களை உத்தேசித்தே செய்கின்ற சகல கார்யங்களையும் பண்ணப் பொழுது இருக்கிறது. எது சாச்வதமான ஆனந்தமோ, ஸௌக்யமோ அதற்கு ப்ரயத்னம் பண்ணப் பொழுது இல்லை' என்று சொன்னால் நம்மைப்போல அசடு இல்லை என்று அர்த்தம்.

மாயை, இயற்கை, மனஸ் என்று தினுஸு தினுஸாக இத்தனையை வைத்து பகவான் லீலை செய்கிறது எதற்காக? இவற்றைக் கொண்டு செய்கிற கார்யங்களைக் கொண்டே இவற்றுக்கு அப்பாற்பட்ட ஸதானந்தத்துக்கு நாம் வழி தேடிக் கொள்கிறோமா என்று பரீக்ஷை பார்க்கிறதற்காகத்தான். ஆகையால் கர்மா கழிகிற வரையிலே இந்த லோகத்திலே நாம் கடமைகளை, கர்மாக்களை அனுஷ்டானம் பண்ணிக்கொண்டிருக்க வேண்டியதுதான். இதிலே தாம்பத்யம், சாப்பிடுகிறது, பொழுதுபோக்குகளை ரஸிக்கிறது எல்லாங்கூட அடக்கந்தான். வரம்பு மீறாமலிருக்கிற வரை எதுவுமே அந்தந்த வயஸுக்கட்டம், வாழ்க்கை நிலைகளில் தள்ளுபடியில்லை. எல்லாம் நாம் பக்குவமாவதற்குப் படிப்படியாக உதவி செய்கிறவைதான்.



- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

ஸ்டார்ட்... கேமரா... ஆனந்த்!

சரவணனுக்கு மேக் - அப் டெஸ்ட் நடந்தது. அப்போதுகூட அவர் ரொம்பவும் பயந்தபடிதான் இருந்தார். ஒரு புகழ் பெற்ற நடிகருடைய மகன், நடிப்பதற்கு இவ்வளவு பயப்படுகிறாரே என்று எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரு பக்கம், 'நமக்கு நடிப்பு வராது; சினிமா நமக்கான இடமில்லை' என்ற அழுத்த மான எண்ணம்; இன்னொரு பக்கம் 'சும்மா ஏதோ மேக்-அப் டெஸ்ட் எடுக்க றாங்க! கடைசியில இவன் சினிமாவுக்கு சரிப்படமாட்டான்னு விட்டுடுவாங்க' என்ற எண்ணம்! கஷ்டப்பட்டு அந்த நினைப்பைப் போக்கினார் வஸந்த். அவராலும் நடிக்க முடியும் என்ற நம்பிக் கையை ஊட்டினார். சினிமாவுக்காக சரவணன் என்ற சொந்தப் பெயரை, சட்டென்று அனைவரையும் கவரக்கூடிய சூர்யாவாக மாற்றினார். அன்று ஒரு ஒளிப்பதிவாளராக 'நேருக்கு நேர்' படத்தில் பார்த்த சூர்யாவுக்கும், ஒரு இயக்குநராக அயன் படத்தில் பார்த்த சூர்யாவுக்கும்தான் எவ்வளவு வித்தியாசம்? வாவ்! அது பற்றி பின்னர் விரிவாகப் பேசலாம்.

'நேருக்கு நேர்' படத்தில் அறிமுக மான இன்னொரு ஸ்டார் சிம்ரன். படு சிம்பிளாகத் தோற்றமளித்த அவரை முதல் தடவையாகப் பார்த்தபோது, எனக்குப் பெரிதாக ஒரு அபிப்ராயம் வர வில்லை. ஆனால் வஸந்த், 'இவங்களுக்கு நல்ல திறமை இருக்கு; கேரக்டருக்குப் பொருத்தமாக இருப்பாங்க' என்று ரொம்ப ஸ்ட்ராங்காகச் சொன்னார். முதல் சில நாட்களுக்கு ஷூட்டிங் சூழ்நிலை சிம்ரனுக்குப் பிடிபடவே இல்லை. ரொம்ப அப்பாவியாக நடந்து கொண்டார். 'மனம் விரும்புதே' பாடல் காட்சியில் கையில் விளக்கு ஒன்றை வைத்துக் கொண்டு டான்ஸ் ஆட வேண்டும். அந்தக் காட்சியை எடுத்து முடித்துவிட்டு, நானும்



கே.வி.ஆனந்த்





பரத்தை நான் படம்பிடித்திருக்கிறேன். நானும் வஸந்தும் பெங்களூர் சென்று அவரைப் பார்த்துப் பேசி, நடிக்க வைத்தோம்.

'விரும்புகிறேன்'. இது இயக்குநர் சுசி கணேசனுக்கு முதல் படம். அவர் படத்தின் கதையைச் சொன்னபோது ரொம்ப பிடித்துப்போய், உடனே ஒப்புக் கொண்டேன். அந்தப் படத்தின் ஹீரோயின் தேடுதல் குமுதம் பத்திரிகை மூலமாக நடந்தது. துபாயில் வசித்து வந்த ஸ்நேகா, படத்தின் ஹீரோயினாகத் தேர்வு செய்யப்பட்டார். அவரது புகைப்படம் குமுதம் அட்டையில் வெளியானது. அடுத்த சில நாட்களில், பிரபல தெலுங்கு ஹீரோவான மோகன்பாபு

ரஜினி ரசித்த புதுமுகம்!



வஸந்தும் அடுத்த காட்சியைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம், பத்துப் பதினைந்து நிமிடங்கள் கழித்து, எதேச்சையாக நான் திரும்பிப் பார்த்தபோது, சிம்ரன் எடுத்து முடித்த காட்சியில் அவரிடம் கொடுக்கப்பட்ட விளக்கை இன்னமும் தன் கைகளிலேயே வைத்துக் கொண்டிருந்தார்.

'நேருக்கு நேர்' படத்தில் அறிமுகமான இன்னொருவர் கௌசல்யா. ஐ.ஏ.எஸ். அதிகாரியின் மகளான அவர், மாடலிங் செய்துகொண்டிருந்தார். அவர் மாடலாக இடம்பெற்ற ஒரு விளம்

விடமிருந்து எனக்கு ஃபோன் வந்தது. (நான் ஒளிப்பதிவு செய்த முதல் தெலுங்குப் படத்தின் ஹீரோ மோகன்பாபுதான்). ''என்ன கே.வி! நீங்க வொர்க் பண்ணற தமிழ்ப் படத்துக்கு சூப்பரா ஒரு ஹீரோயின் செலெக்ட் பண்ணி இருக்கீங்களாமே?'' என்று கேட்டார். ரஜினி, மோகன் பாபுவிடம் பேசும்போது, குமுதம்

அட்டையில் தான் பார்த்த புதுமுகம் பற்றிச் சொல்ல, அது பற்றி விசாரிக்க எனக்கு ஃபோன் பண்ணி விட்டார் மோகன் பாபு.

'**கா**க்கி' ஒரு பிரமாண்டமான சூப்பர் ஹிட் இந்திப் படம். அதை முடித்துவிட்டு, 'கனாக்கண்டேன்' படத்துக்கான ஸ்கிரிப்டை விவாதித்துக்கொண்டிருந்த சமயத்தில், இயக்குநர் காந்தி கிருஷ்ணா என்னைச் சந்தித்தார். நான் இயக்குநர் ஷங்கரின் 'முதல்வன்' படத்தில் பணி



யாற்றியபோது, காந்தி கிருஷ்ணா ஷங்கரிடம் அசிஸ்டென்டாக இருந்தவர் என்பதால், எனக்கு ஏற்கெனவே அவரைத் தெரியும். அவர் என்னிடம் 'செல்லமே' படத்தின் கதையைச் சொன்னார். பெரிய ஸ்டார்கள் இல்லாத, சின்ன பட்ஜெட் படம் என்றாலும், உடனே தயங்காமல் ஒப்புக் கொண்டேன். கதை ரொம்பவும் இம்ப்ரசிவாக இருந்ததுதான் காரணம்!

இயக்குநர் காந்தி கிருஷ்ணா, பாய்ஸ் படத்தில் நடித்த பரத், ரீமா சென் தவிர இன்னொரு புதுமுகம் நடிப்பதாகச் சொன்னார். ஒரு நாள் அவரது அலுவலகத்துக்குச் சென்றபோது, தன் அசிஸ்டென்ட்களுடன் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார். நான் அவரிடம் பேசிவிட்டுப் புறப்படும்போது, அங்கே அசிஸ்டென்ட் டைரக்டர்களுக்கு மத்தியில் உட்கார்ந்திருந்த ஒரு இளைஞரைக் காட்டி, 'ஆனந்த்! இவர்தான் நம்ம படத்தில் அறிமுகமாகிற விஷால்!' என்று அறிமுகப்படுத்தினார். ரவுண்ட் நெக் பனியன், ஜீன்ஸ் அணிந்து, படு கேஷுவலாக உட்கார்ந்திருந்த அந்த இளைஞரைப் பார்த்தபோது, அதிரடியான வருமான வரித்துறை அதிகாரி ரோலுக்கு இவர் பொருத்தமாக இருப்பாரா என்றுதான் எனக்குத் தோன்றியது. ஆனால், க்ளோஸ் ஹேர் கட், மீசை, முழுக்கை ஷர்ட் கெட்

ஐஸ்வர்யா ராய் முதன்முறையாக கேமரா முன்பு நின்றபோது பெருமையாகப் படம் பிடித்த நான், பத்தே நாளில் ஓடிவந்து விட்டேன்.


அப்பில் கேமரா முன்னால், அவர் நின்ற போது, அவருடைய தோற்றத்தையும், நடிப்பையும் பார்த்துவிட்டு, ஆச்சரியப் பட்டேன்.

மணிரத்னத்தின் 'இருவர்' படத்தில் நடிக்க ஒப்புக்கொள்வதற்கு முன்னரே ஐஸ்வர்யா ராய் ஒப்புக்கொண்ட இந்திப் படம் 'அவுர் பியார் ஒகையா'. அந்தப் படத்தின் ஹீரோ பாபி தியோல். ஐஸ்வர்யா ராய் முதன்முதலாக கேமரா முன் நின்றபோது, அந்தப் படத்தின் ஒளிப்பதிவாளராக பெருமையாகப் படம் பிடித்த நான், பத்தே நாளில் பெரிய கும்பிடு போட்டுவிட்டு, ஆளை விடுங்கள் என்று ஓடி வந்துவிட்டேன்.

(ஆக்ஷன் தொடரும்)

எழுத்து வடிவம் : **எஸ். சந்திரமௌலி**

கிரேஸி ட்ரீட்!



வாசகர்களின் கேள்விகளுக்கு கல்கி இதழில் 125 வாரங்களுக்கு மேலாக கிரேஸி மோகன் எழுதி வரும் அசத்தலான பதில்கள் எல்லாதரப்பினரிடமும் பலத்த வரவேற்பைப் பெற்றுள்ளது. அந்த மகிழ்ச்சி கரமான 125வது வாரத்தை 'சிலேடை சிங்க'த்தோடு கொண்டாட, கல்கி நிறுவன இதழ்களின் வாசகர்களை யும் கிரேஸி ரசிகர்களையும் அன்போடு அழைக்கிறோம்.

125வது வார கொண்டாட்டம்!

மாலை 4.00 மணிக்கு

சாக்லேட் கிருஷ்ணா

- கிரேஸி மோகன் குழுவினரின் நாடகத்தோடு விழா தொடக்கம்

நாள் : 6.9.2009 ஞாயிற்றுக்கிழமை

இடம் : ராமாராவ் கலா மண்டபம்,
அபிபுல்லா ரோடு, சென்னை - 17.

வாழ்த்துரை: திரு திருப்பூர் கிருஷ்ணன்
திரு மதன் (கார்ட்டூனிஸ்ட்)

கிரேஸி ட்ரீட் வின்னர்ஸுக்குச் சிறப்பு மரியாதை

Live

வாசகர் கேள்விகளும்...
கிரேஸியின் பதில்களும்...

அனைவரும் வருக...

கல்கியின் ஜாலி விசிட் டீம் இந்திரா கல்வி நிறுவன குழுமத்தின் எல்லைக்குள் இளமை கும்மியடிக்க ப்ளான் பண்ணியது. (வடிவேலு மாதிரி)

திருவள்ளூர் · மாவட்டம் பாண்டூரில் வி.ஜி.ஆர்.கார்டனில் நுழைந்தால் ஃபாரினில் பாதம் பதித்தது போல ஒரு காட்சி மாற்றம். 'பளபளக்கிற பகலா நீ'ன்னு பாடுற மாதிரி பாதரசத்தை முலாம் பூசினா மாதிரி ஒரு பளீச்... இன்சைடுல குட்டி இந்தியாவை ஜெராக்ஸ் எடுத்தா மாதிரி வெவ்வேறு லேங்வேஜ் ஸ்டூடண்ட்ஸ். கட்டுக்கோப்பான நிறுவனம். அதனால எலெக்ஷன் மிஸ்ஸிங். ஆனாலும் அரட்டையான ஆர்ட் செலக்ஷன் அமோகம்! அப்படியே பார்வையால ஃபாலோ பண்ணிக்கிட்டு பக்கத்தைப் புரட்டுங்க... பாதி வயசு குறையும்...



அன்புள்ள





வருங்கால என்ஜினியர், டாக்டர் எல்லாம் படிக்கிற காலேஜ்னு மாடர்ன் மகாலட்சுமிகளை எதிர்பார்த்துப் போனா... தாவணி போட்ட தீபாவளிகளா நம்மை வரவேற்றாங்க, மண் வாசனை மாறாம ஒரு ஆட்டமும் போட்டு...

(உங்களை நினைச்சு ரொம்பப் பெருமைப்படறோம்)



உப்புமூட்டை




"சரி... பாடுங்கன்னு மத்தவங்க உங்களைச் சொல்ற மாதிரி ஒரு பாட்டு பாடுங்க" என்றதும், "ஒண்ணு என்ன? இப்ப பாருங்க"ன்னு பொழிஞ்சு தள்ளினார் கல்பிதா. அந்த லிஸ்ட் கீழே...

* பாட்டு பாடவா?
* பாடவா உன் பாடலை?
* பாட்டு ஒண்ணு நான் பாடட்டுமா பால் நிலாவைக் கேட்டு..?

(இவங்க பாட்டுக்குப் பாட, பாய்ஸ் கொடுத்த கமெண்ட்ஸ் பின்பாட்டுதான் எதிர்ப்பக்கத்தில்...)

''முதல் பெஞ்சுல உட்கார்ந்துக்கிட்டு, கண்ணைக் கட்டுது... முடிஞ்சுது இல்ல.. கிளம்பு... இனி ஒருத்தரும் மைக்கைத் தொடக் கூடாது.''

இப்படி மாணவிகளின் மாண்புமிகு அப்ளாஸை வாரிக்கொண்டது கீழே உள்ள கானா பாடல்தான்...



ஆடிவரும் மானா?
கொஞ்சம்
கேட்டுப்பாரு கானா!
சொக்குறாடா மீனா -
அவ என் சொக்கத்
தங்கம் தானா?





''பணம் சம்பாதிக்க மட்டும் படிச்சா போதாது. பகைவனைப் பதம் பார்க்கவும் படிக்கணும். செஞ்சபாணம்பாக்கம்கிட்டே ராமன்கோயில் கிராமத்திலிருந்து ராவணன்களைச் சுழற்ற வந்திருக்கும் வேணுகோபால் நானுங்க!''

(வேணு கோபாலா? வேணுகோபாலா இது காலேஜ்ப்பா)

'மார்கழித் திங்கள்' பாட்டுக்கு ஆடிக் கிட்டிருந்த இவான்ஜலின், நிர்மல்குமாரோட கராத்தே மூவ்மென்டைப் பார்த்துவிட்டு கடுப்பாகி, 'பரதம்தான் கராத்தேயின் அடிப் படை'னு குண்டு வீசிட்டு, ஒரு அபிநயமும் செஞ்சு காட்டினாங்க. 'இல்லவே இல்லை... கராத்தேதான் பரதத்துக்கு அம்மா... மத்த தெல்லாம் சும்மா'னு (இப்பவே கண்ணைக் கட்டுதே...) சொல்லிட்டு நிர்மல் ஒரு மூவ் வெச்சாரு. அச்சு அசலா இல்லேன்னாலும் கிட்டத்தட்ட ரெண்டும் ஒண்ணுதான். எனவே 'கலைகளுக்குள் சர்ச்சை இருக்கலாம். சண்டை சச்சரவு கூடாது' என்று (அடி)பட்டுக் கொள் ளாமல் நாம் எஸ்கேப்!

(நம்மைக் குழப்பிவிட்ட சந்தோஷத்துல ஸ்டூடண்ட்ஸ் கூடிக் கும்மியடிச்சது பின்குறிப்பு... இதெல்லாம் நோட் பண்ணிடாதீங்க).





"Mr. / Ms. பிரபலம் - தேர்ந்தெடுக்க வந்தீங்களே... எங்க கல்லூரியில எத்தனை Mr. / Ms. டேலண்ட்ஸ் இருக்காங்க பார்த்தீங் களா...?"- கல்லூரியின் கொடியைத் தூக்கிப் பிடித்த மாணவியிடம், "சரி... உங்க கல்லூரி திறமையாளர்களுக்கு நீங்களே மார்க் போடுங்க" என்றதும், "அப்படியெல்லாம் மார்க் போட நான் என்ன மிஸ்.மாக்கானா? பின்னாடி அவங்களைச் சமாளிக்கறது யாரு?" என்றார். "உங்க டேலண்ட் என்ன அதையாவது சொல்லுங்க" என்றோம். "ஹி...ஹி..." என அவர் சிரிக்க, க்ளிக்கிக் கொண்டோம் ஒரு போஸ்!





அன்புள்ளவனே...!

உப்புமூட்டையா
உன்னைச் சுமப்பேன் -
உயிர் ஊசலாடும் வரை
நித்தம் நினைப்பேன்.
காதல் மழையில நீ கரைஞ்சாலும் தாங்கும் சமுத்திரமாய்
ஏந்திப் பிடிப்பேன்.



✱ வி.ஜி.ராஜேந்திரன் - இந்திரா ராஜேந்திரன்

2004லிருந்து கல்விச் சேவையாற்றும் இந்திரா கல்வி நிறுவன குழுமத்தின் நிறுவனர் வி.ஜி.ராஜேந்திரன் மற்றும் நிர்வாக இயக்குநர் இந்திரா ராஜேந்திரன் சேர்ந்தளித்த பேட்டியிலிருந்து...

''வெவ்வேறு மாநிலங்களிலிருந்து தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி பேசும் மாணவ மாணவியர்களின் வருகையால் unity in diversity என்பதை எங்களின் கல்விக் குழுமத்தின் நிறுவனங்கள் பறைசாற்றுகின்றன.

✱ அரசு பல் மருத்துவமனையில் பல ஆண்டுகள் முதல்வராகவும் அரசு மருத்துவ கல்வித் துறை இணை இயக்குனராகவும் இருந்த Dr.A.வெங்கடேசன்தான் பிரியதர்ஷினி பல் மருத்துவக் கல்லூரியின் முதல்வர்.

✱ ஆசிரியர் பயிற்சி பல்கலைக்கழகத்தின் தமிழக ஆளுநரின் பிரதிநிதியாக விளங்கும் முனைவர் சாந்தி பிரமோத், இந்திரா இளநிலை, முதுநிலை கல்வியியல் கல்லூரிகளின் முதல்வர்.


✱ நாற்பத்தைந்து ஆண்டுகால கல்வி சேவையில் அனுபவம் கொண்ட DIET-ல் முதுநிலை விரிவுரையாளராயிருந்த J.P. அரங்கநாதன், இந்திரா ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் இயக்குநர். பதினேழு ஆண்டுகால அனுபவம் மிக்க ரோஸ்லின் ரேச்சல் பரிமளா முதல்வராக இந்திரா செவிலியர் கல்லூரியில் பணியாற்றுகிறார்.

✱ பொறியியல் படிப்பில் CSE, ECE, EEE, IT, Civil, Mech என பல்வேறு தொழில்நுட்பப் பிரிவுகளை உள்ளடக்கிய இந்திரா பொறியியல் மற்றும் தொழிற்நுட்பக் கல்லூரியின் சீரிய செயல்பாடு முனைவர் நா.வாசுதேவனின் முதல்வர் பொறுப்போடு தொடர்கிறது... இப்படி அறிவில், அனுபவத்தில் சிறந்தவர்களின் துணையோடு மக்களின் பேராதரவோடு எங்கள் கல்விச் சேவை வெற்றிநடைபோடுகிறது. எழில்மிகு சூழல், சீர்மிகு கட்டிடம், ஆய்வகம், கணினி மையம், நூலகம், உணவகம், தங்கும் விடுதி என அனைத்தும் உலகத் தரத்தில் நிர்மாணித்திருக்கிறோம். கல்வி இதயத்தைத் தொட்டு மூளையை எட்டும் விதமாய் திருவள்ளூர் மாவட்டம் முழுதும் இலவச மருத்துவச் சிகிச்சையை, முகாம்களின் மூலம் முழுமையாக்குகிறோம்''- கூட்டறிக்கை விடுகின்றனர்.

தொகுப்பு : ஆர்.பாலா, புகைப்படங்கள் : சூர்யா

நீங்கள் கேட்டவை

தராசு



* காண்கின்ற கனவு!

● வி.என்.கோபால்,
சென்னை - 91

? நடைபெற்ற இடைத்தேர்தல்கள் முடிவைப் பார்க்கும்போது, ஜெயலலிதாவே தி.மு.க.வின் மைனாரிட்டி அரசை மெஜாரிட்டி அரசாக மாற்றி விடுவார் போலிருக்கிறதே?

! இடைத் தேர்தல் புறக்கணிப்பு போல, பொதுத் தேர்தல் புறக்கணிப்பும் ஜெ. நடத்தினால் அப்படி நிச்சயம் நிகழும். ஆனால், ஜெ. இடைத்தேர்தல் முடிவிலிருந்து பாடம் கற்றுக் கொண்டிருப்பார் என்று நம்பலாம்.

● சி.பூங்கோதை, சென்னை-78

? துணை முதல்வர் ஸ்டாலின், முதல்வர்கள் மாநாட்டுக்குப் போய் 605 கோடி ரூபாய் வறட்சி நிவாரணம் கேட்டுள்ளார். ஆனால், மாயாவதியோ 2000 கோடி கேட்டுள்ளாரே?

ராகுல் காந்தியின் கனவு நனவாகுமா?




* இடைத்தேர்தல் பாடம்!

! தமிழகத்தைக் காட்டிலும் உ.பி.பெரிய மாநிலம். மேலும், பத்து கேட்டால்தான் அஞ்சாவது கிடைக்கும் என்று ஸ்டாலினுக்கும் தெரியும்; மாயாவதிக்கும் தெரியும். அந்த சாமர்த்தியத்தில் வறட்சி கிடையாது. நிவாரணத்தில்தான் வறட்சி தோன்றுவது வழக்கம்!

● பி.ஆர்.மயிலப்பன், ஈரோடு

? நாட்டில் வறட்சி நிலவினாலும் விவசாயக் கடன் தள்ளுபடி வழங்கும் திட்டம் ஏதும் இல்லை என்று நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி அறிவித்துள்ளாரே?

! பட்ஜெட்டிலேயே கண்மூடித்தனமாக பல தற்காலிக நலத் திட்டங்களுக்குப் பல்லாயிரம் கோடிகளை ஒதுக்கிவிட்டதால் கஜானா காலி. சட்டியிலிருந்தால் தானே அகப்பையில் வரும்? இதற்காகத்







✱ தள்ளுபடிக்குத் தள்ளுபடி!

✱ வறட்சியற்ற...

✱ ... சாமர்த்தியம்!

தான் தொலைநோக்குப் பார்வை தேவை என்பது. கடன் தள்ளுபடி என்றாலும் வங்கிகளுக்கு அரசு ஈட்டுத் தொகை வழங்க வேண்டுமே!

● கி.துரைசாமி, மங்களப்பட்டி

? யாராவது நல்லவரை நீங்கள் சமீபத்தில் சந்தித்தீர்களா?

! முழுமையான நல்லவர் என்பதாக யாரும் இல்லை. நாம் சந்திப்பவர்களிடம் ஒளிந்துள்ள நல்லவரைக் கண்டறிய வேண்டியது நமது பொறுப்பு! கொஞ்சம் கடினமான பொறுப்புதான்!

● கல்யாணி பாலு, புதுக்கோட்டை

? தடைசெய்யப்பட்ட இயக்கங்களை ஆதரித்துப் பேசுவதைத் தடை செய்து கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. ''இது உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரானது'' என்று நெடுமாறன் சொல்கிறாரே?

! தடைசெய்யப்பட்ட இயக்கங்கள் இயங்குவதும் குற்றம்; அவற்றுக்கு ஆதரவாகப் பேசுவது, செயல்படுவதும் குற்றம் என்று மத்திய, மாநில அரசுகள் தெளிவான முறையில் சட்டம் இயற்றினால் பிரச்னை தீரும்.

● விஜயலக்ஷ்மி வேங்கடேசன், சென்னை - 41

? துளசி இலைகளை உட்கொண்டால் பன்றிக் காய்ச்சலிலிருந்து தற்காத்துக் கொள்ளலாம் என்று சொல்வது உண்மையா? அந்நோய் தாக்குண்டவர்கள் துளசி இலைகளை உட்கொள்வதால் பாதிப்பு குறைவாக இருக்குமாமே?

! துளசியினால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் என்பதும் அதற்கு வேறு பல மருத்துவ குணங்கள் உண்டு என்பதும் நமது பாரம்பரிய மருத்துவம் கண்டறிந்த உண்மை. 'பன்றிக் காய்ச்சலுக்கும் அது மருந்தாகுமா? தடுப்பாகுமா?' என்பவை ஆய்வுக்குரியன. எனவே, இக்கருத்தை மருத்துவ உலகின் ஆய்வுக்குச் சிபாரிசு செய்யலாம் என்பதே என் அபிப்பிராயம்.

● பி.பி.சந்திரசேகரன், கரூர்

? ''தமிழர்களின் வாழ்க்கையிலும் தமிழ்நாட்டு அரசியலிலும் சினிமா பின்னணி கலந்துபோயிருக்கிறது. 11, 12ம் வகுப்புகளில் சினிமாவை ஒரு பாடமாக வைக்க வேண்டும்'' என்று பாலு மகேந்திரா சொல்கிறாரே?

! சினிமாவுக்கென்றே நமது அரசு கல்லூரி தொடங்கியாயிற்று; தனியார்க் கல்லூரிகளிலும் வீடியோ, திரைப்படம் முதலான விஷுவல் மீடியா பட்டப் படிப்புகள் உள்ளன. பள்ளிகளில்தான் நமது பாரம்பரிய கலைகளைக் காப்பாற்றும் முயற்சி தொடங்கப்படுவது

❐ ரூ.150/- பரிசு பெறுபவர் :

பவானி கிருஷ்ணா, பெங்களூரு



★ சினிமா சிபாரிசு!

அவசியம். வேர் பற்றிய புரிதல் மிகவும் முக்கியம். கிளை பற்றி பிறகு அறியலாம்.

● **மலை அரசன், அருகந்தம்பூண்டி**

? தனிமை இனிமையானது என்பதில் தங்களுக்கு உடன்பாடு உண்டா?

! தன்னை உணர்ந்தவனுக்கு அவ்வப்போது சற்று நேரத் தனிமை இனிமையானது. அந்தப் பக்குவம் இல்லாதவன், அந்த இனிமையை முழுமையாக உணர முடியாது.

● **பவானி கிருஷ்ணா, பெங்களூரு** ❒

? ஆண்டுக்கு 17.5 கோடி போலி மருந்துகளை இந்தியாவுக்குள் சட்ட விரோதமாக சீனா அனுப்புவதாக மத்திய அரசு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளாரே? தடுத்து நிறுத்த முடியாதா?

! ஏன் முடியாது? மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. இதுபோன்ற குற்றங்களை சீனா மட்டுமல்ல; வேறு பல நாட்டவரும் செய்வார்கள். கெட்டுப்போன உணவுப் பண்டம், கப்பல் கப்பலாகக் குப்பை, எலெக்ட்ரானிக் கழிவுகள் முதலியவற்றை நம் மீது திணிப்பார்கள். ஏமாளிகளும் லஞ்சாதிபதிகளும் உள்ள வரை, ஏய்ப்பவர்கள் பாடு கொண்டாட்டம்தான்.

● **எஸ்.பக்கிரிசாமி, திருவாரூர்**

? நாட்டின் வறட்சியைச் சமாளிக்க காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் சம்பளத்தில் இருபது சதவிகிதம் வறட்சி நிவாரண நிதிக்கு அளிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால் வறட்சி நிலைமை ஓரளவு தணியுமா?

! யானைப் பசிக்குச் சோளப்பொரி மாதிரிதான் இந்தத் தொகை. ஆனால் நாட்டின் கஷ்டத்தில் பங்கேற்க வேண்டும் என்கிற உணர்வுடன் ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு வகையில் சில தியாகங்களைச் செய்தால், அந்த உணர்வின் பலமே உதவும்.

● **அ.சுகுமார், காட்பாடி**

? ஜஸ்வந்த் சிங் எழுதிய புத்தகத்தை குஜராத் அரசு தடை செய்திருப்பது கருத்துச் சுதந்திரத்தைப் பறிப்பதாகாதா?

! ஜஸ்வந்த் சிங்கை கட்சி நீக்கம் செய்வது, புத்தகத்தைத் தடை செய்வது போன்ற காரியங்கள் அந்தப் புத்தகத்தின் பாதிப்பைக் கூடுதலாக்கும். 'உன் கருத்தை ஏற்கவில்லை, ஆனால், உன் கருத்துச் சுதந்திரத்தை மதிக்கிறேன்' என்று கூறி, விட்டு விட்டால் போதும். உண்மைச் சரித்திரம் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளும் வலிமை உடையது.

● **அ.அப்துல் காதர், சென்னை - 45**★

? நான் பிரதமராவதை விட, நாட்டில் ஏழை பணக்காரரிடையே நிலவும் இடைவெளியை முடிவுக்குக் கொண்டு வருவது மிகவும் முக்கியமான பணி என்கிறாரே ராகுல் காந்தி? அவர் கனவு நனவாகுமா?

! பொருளாதார ரீதியான இடைவெளியைக் குறைக்க முடியாது; ஆனால், மன ரீதியான இடைவெளியை நிச்சயம் குறைக்க முடியும். இதற்குத்தான் ராகுல் காந்தி முயற்சி செய்ய வேண்டும். முதல் தேவை தேச பக்தியையும் தன்னம்பிக்கையையும் சுயச்சார்பையும் வளர்க்கும் கல்வி அனைவருக்கும் கிடைக்கச் செய்வது.

★ ரூ.75/- பரிசு பெறுபவர் :

அ.அப்துல் காதர், சென்னை - 45

பிங்க் என்றாலே பெண்மை. 'ஹேய் பிங்க் ஒரு ரொமான்டிக் கலர் தெரியுமா உனக்கு... கிறுக்கா' என எஸ்.எம்.எஸ்ஸிக் கொண்டிருக்கிறார்கள் பிரெட்டி பிங்கிஸ்! ஃபேஷன் உலகில் தற்சமயம் பிங்க்தான் லேட்டஸ்ட் ஸ்டைல் கலர்!

பிங்க் என்றால் இளமை, க்ளாஸிக் மற்றும் ஹைஃபை கலர் என ஃபேஷன் வட்டாரம் சத்தியமடிக்கிறது. ஷாப்பிங் போனால் பெண்கள் அதிகமாக செலக்ட் பண்ணுவது பிங்க் கலரைத்தானாம்.

ஒரு பெண் ரோஜா வண்ண சேலையில் அல்லது பிங்க் சல்வார் கமீஸில் தேவதையாக, ப்யூர் ஏஞ்சலாகத் தெரிவது போல் வேறு கலரில் ஜொலிப்பாளா எனத் தெரியவில்லை. பிங்க் வண்ணம் பிடிக்கும் பெண்கள் ஹானஸ்ட்டாக இருப்பார்களாம். நாங்க ரொம்ப நேர்மையாக்கும் என பிங்கிகள் கொக்கரிப்பதுண்டு. (மகிழ்ச்சியில்தேன்...)

வயது தடையில்லாமல் யார் வேண்டுமானாலும் பிங்க் கலர் உபயோகிக்கலாம். இந்த கலருடன் அமைதி, அன்பு, ரொமான்ஸ், மகிழ்ச்சி, பெண்மை, பாராட்டு, தயை, குழந்தைத்தனம், கபடமற்ற தன்மை... என ஏகமான குணங்களைப் பார்க்கின்றனர் கலர் சைக்காலஜி நிபுணர்கள்.

பிங்க் கலருடன் ப்ளாக் கலர் மாட்ச் பண்ணிப் போட்டால் ஃபார் எவர் ப்யூட்டி நீங்கதான். ரோஸ் வண்ணச் சேலையில் கறுப்பு எம்பிராய்டரி அல்லது பார்டர் இருக்கலாம். பிங்க் சல்வாரிலும் ப்ளாக் பைப்பிங் அல்லது ப்ளாக் குர்தீஸ"டன் போட்டால் அட்ராக்டிவ் அம்மணி நீங்க தானுங்கோ...

பிங்க் அண்ட் ப்ளூ கூட போடலாம். இரண்டுமே சாஃப்ட் கலர்ஸ். இந்த காம்பினேஷன் 'அம்மா'க்களுக்குப் பொருந்துமாம். ஏனென்றால் சாஃப்ட் அவங்கதானே?

பிங்க் அண்ட் க்ரீன் செம ஹிட்



பிங்க் ப்யூட்டி!

காம்பினேஷன். பிங்க் கலரில் பெரிய வளையங்கள், கைகளில் ரோப் வளையல்கள், கால்களில் ஹிப் ஹாப் ரோஸ் கலரில் என பச்சை ட்ரஸ்ஸுடன் போட்டால், அடுத்த சன் பிக்சர்ஸ் ஹீரோயின் நீங்கதான்.

பிங்க் கலர் அணிந்தால் யங்காக, இளமையாகத் தோன்றுவீர்கள். வயதில் ஒரு பதினைந்தை மைனஸ் பண்ணக்கூடிய அபாரத் திறன் கொண்டது.

இன்டீரியர் டிஸைனிங்கிலும் பிங்க் ஒரு சிறப்பான இடத்தைப் பிடித்திருக்கிறது. பிங்க் பெட்ரூம் இருந்தால் தூக்கம் சுகமாக வருகிறது என பிங்க் பெயின்ட் அடித்துத் தள்ளுகிறார்களாம்.

லிவிங் ரூம் (அதாங்க ட்ராயிங் ரூம்) பிங்கில் இருந்தால் ஒரு ஹாலிடே மூட் வருமாம். ஹாலிடே என்றாலே ஜாலிடே தானே? உற்சாகம் தானா வருமே... இது மட்டுமல்ல. பூ ஜாடிகளில் பிங்க் வண்ண மலர்களை, பூங்கொத்துகளை அலங்கரித்தால் ஒரு பூந்தென்றல் வீட்டினுள் எந்நேரமும் வீசிக் கொண்டேயிருக்குமாம்.

பிங்க் கலர் அமைதி தருகிற கலர் என்று வெளிநாட்டில் பல சிறைகளில் இந்த கலரை உபயோகப்படுத்துகிறார்கள்.

பெண் குழந்தை பிறந்தாலே பிங்க் பரிசுகள்தான் குவியும். பிங்க் ஃப்ராக், பிங்க் டவல், பிங்க் நாப்கின், பிங்க் பாத்டப்... என லிஸ்ட் நீளம்!

வார்ட்ரோபில் பிங்க் வண்ண ஆடைகளாக ரொப்புங்க. மாட்சிங் ஆக்ஸஸரீஸும் பிங்க் வண்ணத்தில் வாங்குங்க. ஆனால் ஒரேயடியாக பிங்க்கிலேயே எல்லாம் என வீம்பாகப் போடாதீங்க. காம்பினேஷன் பார்த்துப் போடுங்க. 'ரோஜா மலரே, ராஜகுமாரி...' நீங்கதான்!

- லதா சேகர்

உடையழகு... நடையழகு...



ரியலி கிரேட்!

கிரேஸி ட்ரீட் ரியலி கிரேட்!

-ஜே.வி.ஜே. கண்ணன், திருச்சி-8

பாண்டிச்சேரி ஸ்பெஷல் முழுவதும் பாண்டிச்சேரி பற்றிய சுவையான துக்கடாக்கள். பக்கோடாவைக் கொறித்தது போல் இருந்தது!

- 'வானவில்' மூர்த்தி, கடலூர்

சங்கராபுரம் தொடர், கற்பூரமாகக் கரையச் செய்கிறது என்றால், தீராத விளையாட்டு விட்டலன், உள்ளம் பரவசமடைந்து ஆனந்தக் களிப்பெய்தச் செய்கிறது!

-சி.பூங்கோதை,
சென்னை-78

'நம்ம வீட்டு தேனும் பாலும் போதுமே! பியூட்டி பார்லர் எதற்கு?' என்ற அழகுக் குறிப்புகள் சிப் அண்ட் பெஸ்ட்!

- மல்லிகா அன்பழகன்,
சென்னை-78

பாண்டிச்சேரி ஸ்பெஷலுக்கு கிரீடம் மணக்குள விநாயகர் பற்றிய கட்டுரை.

- ஜே.துரைராஜ், சென்னை-87

மீனவர் வாழ்வின் மீட்சிப் பெண்மணி, மீனவர்களுக்கான நியாயமான போராட்டங்களில் நீந்திக் கரைசேர்வார்!

- பத்மஜா வாசுதேவன்,
சென்னை-103

'தேசமுத்து மாரியம்மா' படிக்க வித்தியாசமாய் இருந்தது. பலம் தரும் பஞ்சவடி மனத்தை நிறைத்தது.

- ராஜிராதா, பெங்களூரு

'கிரேஸி ட்ரீட்'டில் பத்தொன்பது வாசகர்களுக்கு மட்டுமே வாய்ப்பு என்பது கடல் நீரைக் கமண்டலத்தில் அடைப்பது போல உள்ளது.

- ஆர்.நாகராஜன், சென்னை-117

ஒருமுறை போய்த்தான் பாருங்களேன் என்று 'பொக்கிஷம்' விமரிசனத்தில் கூறியிருப்பது, சேரனுக்கு அளிக்கும் சந்தோஷம்.

-த.சத்தியநாராயணன், அயன்புரம்

பூப்போல... பூப்போல... முகம் கிச்சன் சமாசாரங்களில் அழகு சாதனப் பொருட்

கள் பெண்களுக்குக் கிடைத்த புதையல்!

-ஜெ.ரஞ்சிதமணி, கோயம்புத்தூர்

'**வே**ண்டும் மதுவிலக்கு!' என்று இளையதலைமுறை கல்லூரி மாணவிகளிடம் கல்கி கண்டிருந்த பேட்டி வரவேற்கத்தகுந்த நல் முயற்சி!

- சாந்தி சுந்தர், நெய்வேலி

'**எ**னக்குப் பிடிக்கும்' என்ற தணிகை கீதாஞ்சலி பிரியதர்சினியின் கவிதை எல்லோருக்குமே பிடிக்கும்!

- அ.சம்பத், கோயம்புத்தூர்

எங்க ஊர்ப் பக்கம் தேன் தலைமுடியில் பட்டால் முடி நரைத்துவிடும் என்றுதான் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் முடி பளபளக்க நீர் தேன் தடவச் சொல்கிறீர். உம்மை நம்பியாச்சு. நரைத்தால் நீர்தான் பொறுப்பு!

- எம்.மிக்கேல்ராஜ், சாத்தூர்

பாண்டிச்சேரி செய்திகள்
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு, ப்ரியன்

சிரிப்போம்... ஜெயிப்போம் - தொடர் அடுத்த வாரம்...

துப்பறிய வாங்க போட்டி-8 முடிவு

சரியான விடையை எழுதியவர்களுள் தலா ரூ.200/- பரிசுத் தொகை பெறுபவர்கள்:

1. கு.மா. இளங்கோ, எஸ்.பி.புதூர்
2. எஸ்.ஏ. விஜயலக்ஷ்மி, தஞ்சாவூர்
3. கே.சேகர், திருப்பூர்
4. பி.அமுதா, மாணம்புச்சாவடி
5. ஆர்.கோபாலகிருஷ்ணன், கோவை.

கோவூர் தெரியுமா...



* ஆவணங்களில் பள்ளிபாய் படமும் ஹரிகதை ஒலிப்பதிவும்..

கர்நாடக சங்கீதம் ஓர் ஒப்புயர்வற்ற பொக்கிஷம். அதை ரசிப்பதோடு நின்றால் போதுமா? அடுத்த தலைமுறைகளுக்குப் பாதுகாத்தளிக்க வேண்டாமா?

'வேண்டும். வேண்டும்' என்று வாயளவில் மட்டும் சொல்லாமல் செயலால் காட்டவே உருவானது 'சம்ப்ரதாயா' அமைப்பு.

இந்த அமைப்பின் மற்றொரு நோக்கம்: 'வித்வத் உள்ள ஆனால் பலராலும் அறியப்படாத இசை வல்லுனர்களின் ஞானமும் ரசிகர்களை அடைய வேண்டும்.'

இன்று சம்ப்ரதாயாவின் இயக்குநராக விளங்கும் கீதா ராஜகோபால் சுமார் பத்து வருடங்களாக இவ்வமைப்புடன் தம்மை இணைத்துக் கொண்டவர்.

''1980ல் சாவித்திரி ராஜன் என்பவரால் தொடங்கப்பட்ட இந்த அமைப்பில் அப்போது இரண்டே மாணவர்கள். ஒருவர் ஜெர்மானியர், மற்றவர் அமெரிக்கர். குருகுல முறையில் வீணை கற்றுக்கொடுக்கப்பட்டது. பின்னர் நாதஸ்வரம் போன்ற இசைக் கருவிகள் - எல்லாமே பாரம்பரிய முறையில் தான் பயிற்றுவிக்கப்பட்டன. தொடக்கத்தில் கார் ஷெட்டில் இயங்கிய இந்த அமைப்பு பின்னர் மயிலாப்பூரில் உள்ள ஆலிவர் சாலைக்கு மாறியது. இப்போது இயங்குவது கலாக்ஷேத்ரா வளாகத்தில். மறைந்த குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் எங்கள் அமைப்பு மீது கொண்டிருந்த அபிமானத்தைக் குறிப்பிட்டாக வேண்டும். இன்று உலகம் முழுவதும் எங்கள் அமைப்புக்கு - இன்றைய பிரபல சங்கீதக் கலைஞர்கள் உட்பட - 105 ஆயுள் உறுப்பினர்கள்'' என்கிறார்.

நிதி மற்றும் நடைமுறை நிர்வாகக் காரணங்களால் இடையில் சில காலம் அமைதி காத்த சம்ப்ரதாயா, இப்போது மீண்டும் புதுப் பொலிவோடு இயங்கத் தொடங்கியுள்ளது. இந்த அமைப்பு குறித்து கீதா ராஜகோபாலன் கூறிய மேலும் சில சுவையான விவரங்கள் :

''கர்நாடக இசை மட்டுமின்றி தென்னிந்தியாவின் பிற இசை மரபுகளுக்குமான மையமாக சம்ப்ரதாயா இருந்து வருகிறது.

இசை மட்டுமல்ல, நாட்டுப்புறப்பாடல், யட்சகானம், சாக்கியார் கூத்து, தோல் பாவைக்கூத்து போன்றவற்றிலும் கவனம் செலுத்துகிறோம்.

900 ஓதுவார்கள் பங்கேற்ற பயிலகம், தவில் பயிலகம் ஆகிய எங்களது முயற்சிகள் குறிப்பிடத்தக்கவை. பல வருடங்களுக்கு முன் நடைபெற்ற, வீணை தனம்மாள் பயிலகத்தில் அப்போது சங்கீத உலகுக்குப் புதியவர்களான உன்னிகிருஷ்ணன், அனுராதா ஸ்ரீராம், அனுராதா சுரேஷ் கிருஷ்ணமூர்த்தி, சசிகிரண் போன்றவர்கள் உதவித்தொகை பெற்று ஆறு மாதம் பயின்றனர்.

பிருந்தாம்மாவும் அவர் சகோதரர் டி.விஷ்வாவும் இணைந்து பதம், ஜாவளி வகுப்புகள் நடத்தினார்கள். காலையில் பிருந்தா பழைய மரபுப்படி நொட்டேஷன் இல்லாமல் பயிற்றுவிப்பார். கர்ணம் (காது)

என்பதை அடிப்படையாகக் கொண்டு வந்த கர்நாடக இசை, காதில் கேட்பதன் மூலம் மட்டுமே கற்றுக் கொள்ளப்பட வேண்டும். மாலையில் விஷ்வா டெக்னிகலாக நொட்டேஷன்களுடன் கற்றுக் கொடுப்பார்.

ஒன்பது வருடங்களாக முயற்சி செய்தும் எம்.எஸ். அம்மாவின் பேட்டி கிடைக்கும் வாய்ப்பு அமையவில்லை. சதாசிவம் மாமா மறைந்த பிறகு அவரைச் சந்தித்தேன். கையைப் பிடித்துக்கொண்டு, 'எனக்குப் பாடத்தான் தெரியும். அதையும் விட்டாச்சு.

கூத்து புரியுமா...?

மாமா இருந்திருந்தால் நான் பேச நினைப்பதையெல்லாம் அவரே சொல்லியிருப்பார்' என்றார்.

முக்தாவைப் பேட்டி கண்டபோது, 'பிருந்தாவும் நானும் செய்த முதல் கச்சேரியின்போது பின் வரிசைகளில் இருந்தவர்கள் எங்களைப் பார்க்க முடியவில்லை என்று குரல் எழுப்பினார்கள். அவ்வளவு சிறியவர்களாக நாங்கள் இருந்தோம். அப்புறம் மேடையில் ஒரு பெஞ்ச் போடப்பட்டது. அதன்மேல் உட்கார்ந்துகொண்டு பாடினோம்' என்றார்.

எங்களிடம் உள்ள எம்.எல்.வசந்தகுமாரி பேட்டியைக் கேட்டால், அவரது நிறைந்த மனிதாபிமானத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

செம்மங்குடி மாமாவின் பேட்டியில் நிறைய கிண்டலும் தமாஷுமாக இருக்கும். 'எனக்குக் கேள்வி கேட்டால் பிடிக்காது' என்றபடி தாமாகவே 'பதில்' சொல்வார்.

சங்கீத மும்மூர்த்திகள் பற்றிய செய்திப் படம் ஒன்றைத் தயாரித்தது அருமையான அனுபவம். அவர்களின் அபூர்வமான கிருதிகள் சிலவற்றை அதில் இடம்பெறச் செய்தோம். எந்த ஊரில் அவற்றை இயற்றிப் பாடினார்களோ அந்த ஊர்களையும் படமெடுத்தோம். 'கோவூர் ஆலயத்தில் தியாகையர் ஐந்து பாடல்களை - கோவூர் பஞ்சரத்னம் என்ற பெயரில் - எழுதியுள்ளார்' என்ற தகவலை அறிந்ததும், கோவூர் என்பது



பயிலகம்

எங்கோ வெகு தொலைவில் இருக்கிறது என்பதே பலரது எண்ணமாக இருந்தது. ஆனால் சென்னையிலிருந்து வெறும் பத்து கிலோமீட்டர் தொலைவில்தான் அது உள்ளது என்பதை அறிந்ததும் பலருக்கும் வியப்பு.

அந்தக் கால பாய்ஸ் நாடகக் கம்பெனியினரின் அரிதான பேட்டிகள்கூட எங்களிடம் உள்ளன.

எங்களிடம் உள்ள இந்த அரிய பொக்கிஷங்களை மின்னணு வடிவத்தில் டிஜிட்டைஸ் செய்து அழியாமல் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். அதில் முப்பது சதவிகிதம் முடிந்துவிட்டது. மும்பையில் உள்ள ஸ்ரீசண்முகானந்தா சபா இதற்குப் பெரிதும் உதவுகிறது.

காற்றோடு கலந்து காணாமல் போகக் கூடிய இசைப் பொக்கிஷங்களுக்கு, ஒரு காப்பகம் உருவாகிக்கொண்டிருக்கிறது!

தொடர்புக்கு : 044 - 24521217

சம்ப்ரதாயா நடத்த உள்ள செப்டம்பர் மற்றும் அக்டோபருக்கான சம்வாதா (கலந்துரையாடல்) நிகழ்ச்சிகள் :

செப்டம்பர் 18 - டி.கே.மூர்த்தி, டி.ஆர்.ராஜாமணியுடன் உரையாடுகிறார்.

அக்டோபர் 23 - கல்பகம் ஸ்வாமிநாதன், எஸ்.சௌம்யாவுடன் உரையாடுகிறார்.

காங்கிரஸ் துள்ளல் விஜயகாந்த் தூண்டில்!



சட்டமன்ற இடைத் தேர்தலில் தே.மு.தி.க.வுக்கு டெபாஸிட் போக வேண்டுமென்று தி.மு.க. முயற்சி செய்தது; நடக்கவில்லை! உற்சாகமான விஜயகாந்த் தமது பிறந்தநாளை அட்டகாசமாகக் கொண்டாட, ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் உட்பட பல காங்கிரஸ் தலைவர்கள் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்திருக்கிறார்கள். 'காங்கிரஸ் தலைவர்கள் எனக்கு எப்போதுமே நண்பர்கள்தான்' என்று கூட்டணிக்குத் தூண்டில் போட்டிருக்கிறார் விஜயகாந்த்.

ஜெ.வை மூன்றாவது இடத்துக்குத் தள்ளிவிட்டு விஜயகாந்த்தை நேருக்கு நேர் சந்திப்பது எளிது என்று கருதுகிறது தி.மு.க. அதற்கேற்றவாறு அ.தி.மு.க.வைப் பலவீனப்படுத்தும் வேலைகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. ஆனால், தி.மு.க. கலக்கமடைவது காங்கிரஸின் நிலைப்பாட்டைக் குறித்துதான்.


கருணாநிதியுடன் இப்போது இரத்தமும் சதையுமாக இருப்பது வாசன் அணிதான். மற்ற தலைவர்கள் பல காரணங்களுக்காக தி.மு.க. மீது கடுப்பில் இருக்கிறார்கள். அதிலும், புலிகள் விவகாரத்தில் எல்லை மீறும் திருமாவை, கருணாநிதி கண்டுகொள்ளாதது கூடுதல் எரிச்சல். எனவே, 2011ல் விஜயகாந்த்துடன் கூட்டு வைக்க வேண்டுமென்று பல காங்கிரஸ் தலைகள் மேலிடத்துடன் முட்டி மோதி வருகின்றன. சோனியாவுக்கு ஜெ.தான் ஆகாதவரே தவிர, விஜயகாந்த் மீது எந்த அதிருப்தியும் இல்லை. இந்நிலையில், ''மூத்த தலைவர்களின் கோஷ்டிப் பூசலை என்னால் சரி செய்ய முடியாது. ஆட்சியைப் பிடிக்க கட்சியை பலப்படுத்த வேண்டும்'' என்று தமிழக இளைஞர் காங்கிரஸுக்கு வலுவூட்டத் தொடங்கி இருக்கிறார் ராகுல். முதல் கட்டமாக நவம்பரில் இளைஞர் காங்கிரஸுக்குப் பொறுப்பாளர் தேர்தல் நடக்கிறது. 10,00,000 உறுப்பினர்களைச் சேர்க்கப் போகிறார்களாம். இந்நிலையில் அதிரடியாக நடிகர் விஜய், ராகுலைச் சந்தித்திருக்கிறார். ''இதை கருணாநிதி ரசிக்கவில்லை'' என்கிறார் ஒரு காங்கிரஸ் பிரமுகர்.

விஜய், பிரபு, திருநாவுக்கரசர் என்று காங்கிரஸில் இணையத் துடிப்பவர்கள் பட்டியல் நீண்டு வருகிறது. துள்ளி எழுகிறது காங்கிரஸ். தூண்டில் போடுகிறார் விஜயகாந்த். திகைத்து நிற்கிறது தி.மு.க. **- ப்ரியன்**

புற்றுநோய்க்கு ஒரே இடத்தில் தீர்வு!

ONE STOP SOLUTION FOR CANCER

- PET CT SCAN
- All Endoscopies
- Linear Accelerator & Brachy Therapy
- Radiation
- IGRT
- Surgical Oncology
- Medical Oncology



- பெட் சீடி ஸ்கேன்
- அனைத்து என்டோ ஸ்கோபி
- கதிர்வீச்சு
- லீனியர் ஆக்ஸிலரேடர் & உட்கதிர்வீச்சு
- IGRT
- புற்றுநோய் அறுவை சிகிச்சை
- புற்றுநோய் மருத்துவம்

இலவச ஆலோசனைக்கு:

(044) 2246 9200
(044) 66 300 300

PET CT CENTRE AT CANCER INSTITUTE (WIA)
CANAL BANK ROAD, GANDHI NAGAR, ADYAR, CH-20

24 HRS PHARMACY & AMBULANCE SERVICES AVAILABLE

Dr. KAMAKSHI MEMORIAL HOSPITAL

1, Radial Road, Pallikaranai, Chennai - 600 100.
Ph: 2246 9200, 66300300 Fax : 22463282 66300400
E-mail: info@drkamakshimemorialhospital.org.
Website: drkamakshimemorialhospital.org.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 09 -11 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newspaper in Srilanka.


புதுச்சேரி அரசு
சுற்றுலாத் துறை



திரு. இக்பால் சிங்
மேதகு துணைநிலை ஆளுநர்



திரு. வைத்திலிங்கம்
மாண்புமிகு முதலமைச்சர்



திரு. மல்லாடி கிருஷ்ணா ராவ்,
மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்

புதுச்சேரியில் சுற்றுலா மேம்பாட்டுக்கான முதன்மைத் திட்டங்கள் :

1. திருநள்ளாறு கோயில் நகர மேம்பாட்டுத் திட்டம்.
2. அகில உலக யோகா திருவிழா, காரைக்கால் திருவிழா, ஏனாம் மக்கள் விழா, மாஹி சாகச சுற்றுலா திருவிழா போன்ற திருவிழாக்கள் கொண்டாடப்பட்டன.
3. 300 பேர் இருக்கை வசதியுள்ள புதுப்பிக்கப்பட்ட சீகல்ஸ் உணவகம் திறக்கப்பட்டது.

நடைமுறையில் உள்ள திட்டங்கள் :

4. காரைக்காலில் சூழலியல் கடற்கரை மேம்பாட்டுத் திட்டம்.
5. காந்தி திடல் புதுப்பிக்கும் திட்டம் மற்றும் கைவினை அங்காடி உருவாக்கும் திட்டம்.
6. காரைக்கால் அரசலாற்றில் நடைபாதை மேம்பாட்டுத் திட்டம்.
7. விடுதி மேலாண்மை மற்றும் சமையற்தொழில்நுட்பக் கல்லூரிக்கான புதிய கட்டடம் கட்டும் பணி.

தென்னிந்தியாவின் சிறந்த சுற்றுலா தலமான
புதுச்சேரிக்கு வருகை தாருங்கள்!